# கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில்

2008ஆம் ஆண்டு பங்குனி மாதம்
9ம் திகதி இடம்பெற்ற புதிய உசாத்துணை நூலகப்
(சட்டப்பிரிவும் உட்பட) பிரிவின்

# திறப்புவிழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு

தொகுப்பு
**கமுதர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட மேதையாகவும் சமய, சமூக சேவையாளராகவும் மக்களுக்கு நற்பணியாற்றிய அருங்குணத் தோன்றல் நியாயவாதி **எஸ். ஆர். கனகநாயகம்**

ஆங்கிலம், தமிழ் மொழிகளில் புலமை பெற்றவரும் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசுவாகவும் வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனைச் சமாசத்தின் தலைவராகவும் மற்றும் சமய சமூக நிறுவனங்களில் முதன்மை அலுவலராகவும் பதவி வகித்த **என். ரீ. சிவஞானம்**

ஆகிய இரு பெரியோர்களுக்கு பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளருமான **திரு. க.மு. தர்மராசா** அவர்கள் தனது நன்றிக்கடனாக நூலகச் சட்டப் பிரிவை ஆரம்பிக்க பொருண்மிய ஆதரவை நல்கியதோடு சட்டப்பிரிவில் அவர்களிருவரினதும் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்யப்பட்டன.



நியாயதுரந்தரர்
**உயர்திரு எஸ்.ஆர்.கனகநாயகம்**



சிரேஷ்ட சட்டத்தரணி
**உயர்திரு.என்.ரீ.சிவஞானம்**

மேலும் வேலணை மத்திய மகாவித்தியாலய **(தற்காலம் சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்)** முன்னாள் அதிபரும் அவரின் நினைவாக அவரது குடும்பத்தினர் திரு. **க.மு. தர்மராசா அவர்கள்** மூலம் விஞ்ஞானம், கலை, இலக்கியம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளுக்குப் பொருளுதவி புரிந்தமையைக் குறிக்கும் முகமாக **திரு. பொ. கேதாரநாதன்** அவர்களின் உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்பட்டது.



கல்லூரி அதிபர்
**உயர்திரு பொ.கேதாரநாதன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அத்தியாயம் - 1 — உசாத்துணைப் பிரிவு (சட்டம் உட்பட) திறப்புவிழாவுக்கு முன்னதாக பத்திரிகைகளில் வெளியான மூன்று முக்கிய பிரமுகர்கள் பற்றிய கட்டுரைகள்.

அத்தியாயம் - 2 (i) உசாத்துணைப் பிரிவு (சட்டம் உட்பட) திறப்புவிழா அழைப்பிதழ்.

(ii) உருவப்படங்கள் திரைநீக்கம் செய்வதற்குமுன் அன்று காலை நூலகப் பிரிவில் நிறைவேற்றப்பட்ட பூஜை மற்றும் சமயச்சடங்குகள் பற்றிய படங்கள்.

(iii) நிகழ்ச்சிகள்
- * தமிழ் வாழ்த்து
- * நிகழ்ச்சி அறிவிப்பு
- * வரவேற்புரை
- * தலைமையுரை
- * நினைவுரைகள்
- * நன்றிக்கடன் செலுத்துமுரை
- * நூலகச் செயலாளர் உரை
- * சிறப்புரைகள்
- * நன்றியுரை
- * கலை நிகழ்ச்சி
- * நிறைவாக நன்றியுரை
- * தமிழ் வாழ்த்து

அத்தியாயம் - 3 (i) 2008.3.12 தினக்குரல் பத்திரிகையில் வெளியான விபரங்கள் படங்கள் அத்தியாயம் நான்கில் உள்ளது.

(i) 2008.3.13 வீரகேசரி பத்திரிகையில் வெளியான விபரங்கள் படங்கள் அத்தியாயம் நான்கில் உள்ளன.

(iii) 2008.3.16 வீரகேசரி பத்திரிகையில் வெளியான விபரங்கள் படங்கள் அத்தியாயம் நான்கில் உள்ளன.

அத்தியாயம் - 4 — விழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

அத்தியாயம் - 5 (i) 19-03-2008 உதயன் பத்திரிகையில் நிகழ்ச்சி நடைபெற்ற செய்தி

அத்தியாயம் - 5 (ii) 2008 ஏப்பிரல் மாத **"ஞானம்" - கலை** இலக்கிய சஞ்சிகையில் வெளியானவை.

(iii) **திரு.க.மு.தர்மராசா** அவர்களின் வள்ளன்மையை வியந்து 2008.5.23 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கம் வழங்கிய பாராட்டுப் பத்திரமும் வீரகேசரி பத்திரிகையில் வெளியான படங்களும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் ஒன்று

வீரகேசரி (2008.03.08)

### கொழும்புத் தமிழ்ச்சங்க புதிய உசாத்துணை நூலகப் பிரிவின் திறப்பு விழா

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நாளை இடம்பெறும் புதிய உசாத்துணை நூலகப் பிரிவின் திறப்பு விழாவின் போது நியாயவாதி எஸ்.ஆர்.கனகநாயகம், சிரேஷ்ட சட்டத்தரணி என்.ரி.சிவஞானம், முன்னாள் அதிபர் பொ.கேதாரநாதன் ஆகிய மூவரினதும் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட உள்ளன.

**நியாயவாதி எஸ்.ஆர்.கனகநாயகம்.........."மலையொன்று மறைந்துவிட்டது"**

தன் கட்சிக்காரரின் வழக்கின் நிகழ்வுகளை மிக நுணுக்கமாக நினைவில் வைத்திருப்பார். பல இளம் சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரரின் வழக்கைப் போதுமான அளவு புரிந்து கொள்ளாமல் வரும் மன்றில் எண்பது வயதைத் தாண்டிய இளைய தம்பி ஐயாவும் கனகநாயகமும் மிக நுணுக்கமாக நிகழ்வுகளைத் தெரிந்து வைத்திருந்தமை என்னை மலைக்கச் செய்தது. வயதினால் அவர்களின் விழிப்புத் தன்மையைக் குறைக்க முடியவில்லை. அலட்சியமாகப் பேசும் சுபாவம் உடையவராயினும் கனகநாயகம் எவர் மீதும் குரோதமோ, கோபமோ, அசூசையோ கொள்ளாதவர். குழந்தைகள் போல் எல்லாவற்றையும் மறந்துவிட்டு வாய்விட்டுச் சிரிப்பார்.
தம்மைத் தாமே பார்த்துச் சிரிக்கும் நிறைகுணம் படைத்தவராகத் திகழ்ந்தார். கனகநாயகம் அவர்களின் மறைவுடன் வட இலங்கை சட்ட அரங்கிலே இதுகாறும் ஓங்கி நின்ற மலையொன்று மறைந்துவிட்டதென்றே நினைக்கின்றேன்.

**சி.வி.விக்னேஸ்வரன்**
(இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதியரசர்)

**மகா ரசிகர் - நகைச்சுவைக் களஞ்சியம்..........**

அன்று தோன்றிய சுயாதீன உணர்வே கொழும்பு ஆனந்தா கல்லூரியில் தமிழ்த் துறைக்குத் தலைவராகவிருந்த அமரர் கனகநாயகத்துக்கு சுதந்திர வாழ்வுக்குரித்தான சட்ட நிபுணர் வாழ்க்கைக்கு வித்திட்டது. சுமார் ஐம்பது வருடம் வீடும் கோடும் ஒன்றாய்ச் சங்கமித்த நீண்ட வாழ்வில் அவருடைய தனித்துவ அனுபவங்கள் ஒரு ஆராய்ச்சி ஏட்டுக்கு இடமளிக்கும், நீதிவான், எதிர்வாத சட்ட நிபுணர், வழக்காளி எதிரி சாட்சி எவரானாலும், ஏன் பரம்பொருள் தானும் குறுக்கிட்டு தமது கருத்தை ஆட்சேபித்தால், எவ்வித தாக்கமுமின்றி ஒரு சிறு பகிடியால் சிரிப்பைக் கிளப்பி அந்தச் சிரிப்பில் எதிர்ப்பு சாம்பராய் போவது சாதாரண அனுபவம்.

யாழ்ப்பாணப் பெரிய தெருவும் முதலாம் குறுக்குத் தெருவும் சந்திக்கும் முச்சந்தியில் நின்ற வழக்காளி ஒருவர் நல்ல அப்புக்காத்தை ஏற்படுத்த விசாரணை நடத்துகிறார். "உங்களுக்கு வழக்கில் வெற்றி வேண்டுமானால் அதோ தெற்குப் பக்கத்தில் ஒரு சிறு தூரம் செல்ல தகுந்த நிபுணரைக் கந்தோரில் சந்திக்கவும், வெற்றி மட்டுமல்ல எதிரியைத் தகர்த்து இனிமேல் கோடேறாது மலையேற வைக்கும் நோக்கமிருந்தால் அந்தா தெற்குப் பக்கத்தில் பச்சை வர்ண வீடு தெரிகிறது. அந்த வீட்டின் சொந்தக்காரரே அந்த நோக்கத்துக்கு வெற்றி காண வல்லவர்" என்று கனகநாயகம் வீட்டைக் காட்டுவது பழைய வழக்கமாயிருந்தது.

**- ந.சபாரட்ணம்**
முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபர்
(அமரர் எஸ்.ஆர்.கனகநாயகம் அவர்களது நினைவு மலரிலிருந்து...........)

**கூட்டுறவுப் பெரியார் - என்.ரி.சிவஞானம்**

யாழ்ப்பாண விவசாயிகளை முன்னேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட என்.டி.ஏ.பி.சி யூனியனில் (வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசம்) 1952.10.11 தொடக்கம் தலைவராக இருந்த என்.ரி.சிவஞானம் அவர்கள் சட்டத்துறையோடு இந்த யூனியன் வளர்ச்சிக்கும் தமது மிகுதி நேரத்தை செலவிட்டார். 1967ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டு வரை தொடர்ந்து இதன் தலைவராக இருந்த காலம் யாழ் விவசாயிகள் சங்கங்களினதும் இச்சமாசத்தினதும் பொற்காலம் என்றால் மிகையாகாது. யாழ்ப்பாணத்தில் வெங்காயம், உருளைக்கிழங்கு உற்பத்தி செய்து கொழும்புச் சந்தைக்கு அனுப்புவது போன்ற முயற்சிகளில் சொல்லப்பட்ட சமாசமும் தலைவர் சிவஞானமும் ஆற்றிய தொண்டு அளப்பரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி என்.ரி.சிவஞானம் ஆகிய இருவர்களிடம் சட்டக்கல்லூரி செல்லாது சட்டம் பயின்ற காரைநகரைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளருமான க.மு.தர்மராசா மேற்போந்த பெரியோர்களுக்கு தனது நன்றிக்கடனாக நூலகச் சட்டப்பிரிவை ஆரம்பிக்க ஆதரவு நல்கியதோடு அவர்கள் இருவரினதும் உருவப்படங்களும் மேலும் வேலணை மத்திய மகா வித்தியாலய (தற்காலம் சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயம்) முன்னாள் அதிபர் பொ.கேதாரநாதன் ஆகியவரின்து உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகிறது.

**நான் மதித்த அமரர் எஸ். ஆர். கனகநாயகம்**

நெடிய உருவம் நிமிர்ந்த பார்வை, தூய வெள்ளை ஆடை. வாயில் யாழ்ப்பாணச் சுருட்டு. இதுதான் அமரர் கனகநாயகத்தை நினைவுகூரும் பொழுது தோன்றும் படம். அவர் அணிந்த தூய வெள்ளை உடையைப் போலத் தான் அவர் உள்ளமும் தூய்மையானது. கபடம் அற்றவர். மனதில் தோன்றுவதை ஒழிவு மறைவின்றி கூறும் சுபாவம் உள்ளவர். அமரர் கனகநாயகம் ஒரு சிறந்த வழக்கறிஞர். நிறைந்த நகைச்சுவையுடன் பேசுபவர். பதவி மோகமற்ற அரசியல்வாதி. எனக்கும் அவருக்கும் அரசியலில் கருத்து வேற்றுமை இருப்பினும் மாற்றாந் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று அமரரை மதித்தவன். எந்த ஒரு சிக்கலான வழக்கையும் மிகவும் இலகுவாக விளக்கி, தனது கட்சிக்கு வெற்றி ஈட்டிக் கொடுக்கும் ஆற்றல் மிக்கவர். தலைக்கனத்துடன் என்னை வெல்லயாரும் இல்லை என்ற மமதையுடன் சாட்சிக் கூட்டில் ஏறுபவர்களை, மட்டம் தட்டி அனுப்பும் குறுக்கு விசாரணையில் திறமைசாலியாக விளங்கினார். அரசியலில் அவருடைய ஆரம்பம் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசில், தன்னை ஓர் தேசியவாதி என்று வர்ணிப்பார். ஆனால் தேசிய உணர்வுக்கும் தமிழ் உணர்வுக்கும் முரண்பாடு இல்லை என்ற கொள்கையை கடைப் பிடித்தார். எனவே தான், தனிச்சிங்களச் சட்டத்தை ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சியை விலகி, தமிழ்க்காங்கிரசில் சேர்ந்தார். வெற்றியிலும், தோல்வியிலும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் இணைபிரியாத நண்பனாக இருந்தார், அமரர் பதவியை நாடி அலைய வில்லை. அமரர் வாழ்ந்த விதத்தில் மரணத்திற்குப் பயப்பிட்டிருக்க மாட்டார். யமனுடன் நகைச் சுவையுடன் உரையாற்றி இறுதி மூச்சு விட்டிருப்பார்.

**மு.சிவசிதம்பரம் -**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
(அமரர் எஸ்.ஆர்.கனகநாயகம் அவர்களது நினைவுமலரிலிருந்து......)

**அமரர் என்.ரி.சிவஞானம் சட்டத்தரணி........**

அமரர் திரு. என். ரி. சிவஞானம் அவர்களைச் சந்தித்திருப்பதென்பது ஒரு பெரும் பேறாகும். அவரை அறிந்து வைத்திருக்கும் நல்வாய்ப்பினைக் கொண்டிருப்போர் மனதில் அப்போது மிகவும் பெறுமதி வாய்ந்ததாயிருக்கும். அவரது ஒவ்வொரு செயலும் வருத்துவதற்குப் பதிலாக இதந்தரும் சுகமான வருடலாக இருக்கும் வகையில், மிருதுவான அவரது எளிமை மிக உயர்வான அவரது சிந்தனா சக்தியைப் பக்குவப்படுத்தியது. அவரது இரக்க சிந்தனையால் நன்மையடைந்தோர் அநேகம். தமது கட்சிக்காரர்களின் நலன்களை விட்டுக்கொடுத்து அதன்மூலம் பெரும் சிறு வெற்றிமூலம் ஒருபோதும் குளிர்காய முனையாத கூர்மதி கொண்ட வழக்கறிஞராக அவர் விளங்கினார். பல்வேறு விதமான சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளைக் கையாண்டு வந்த அவர் அவை குறித்த உண்மைகள் மற்றும் சட்ட நுணுக்கங்களுடன் எப்போதும் அவர் ஆயத்தமாய் இருந்தார். நடுவர் ஆயத்திற்கு அவர் மிகப் பெரிய உதவியாகவும் தன் கட்சிக்காரர்களுக்கு மிகப்பெரிய பலமாகவும் இருந்தார். சோம்பியிருப்பது அவருக்கு மகிழ்ச்சி தராத ஒன்று. நீதிமன்றங்களுக்கு வெளியே இருக்கும் போது பல்வேறு விடயங்கள் குறித்து அவர் தம்மைத் தாமே சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வார். மனிதருக்குச் சேவை செய்து அதன் வழியாகக் கடவுளை மகிமைப்படுத்திய அவரது இறை பக்தியானது அவரது ஆழ்ந்த சமயப்பற்றினை விரித்துரைத்தது. அவரது பிரிவாற்றாமையை அனைவருமே நெஞ்சில் ஆழமாக உணர்வார்.

**எம்.ஜமீல் -**
இளைப்பாறிய உச்ச உயர்நீதிமன்ற நீதிபதி
(அமரர் என்.ரி.சிவஞானம் அவர்களது நினைவுமலரிலிருந்து.......)

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.ரி.சிவஞானம் மறைந்து விட்ட போதிலும் விவசாயிகள் மத்தியில் என்றும் அவர் பெயர் நிலைத்து நிற்கும்.

**க.இ.குமாரசாமி, (இளைப்பாறிய ஆசிரியர்)**

**எல்லோருக்கும் நல்லவர்.....**

தீவுப்பகுதி மக்களின் தொண்டராய் ஈழத்தமிழரின் அன்பராய் வாழ்ந்தவர் திரு.நா.த.சிவஞானம் அவர்கள். இவர் தமது சட்டத்தரணி வேலையோடு நின்றுவிடாது, யாழ் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களின் சமாசத் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். இவர் தீவுப் பகுதிவாழ் உழுதுண்டு ஊர்காக்கும் உழவர் பெருமக்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் பசளை, விதைநெல் போன்றவற்றையும் அரசாங்கத்திடம் பெற்று மலிவு விலைக்கு வழங்கி உணவு உற்பத்தியைப் பெருக்க உதவினார். சட்டத்துறையில் எமக்கொரு கூட்டாளியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய திரு.சிவஞானம் அவர்கள் அதிக உணவு பயிரிடுதல் நன்செய், புன்செய் விளைச்சல்களில் புதுமை சேர்த்தல் மூலம் கமக்காரப் பெருமக்கள் தமது வாழ்க்கையில் ஏற்றம்பெற வழி சமைத்தார்.

**ப.கதிரவேலு (J.P.,U.M.)**

(அமரர் என்.ரி.சிவஞானம் அவர்களது நினைவு மலரிலிருந்து..........)

**கல்வியில் ஒளிவளர் விளக்கம் பொ.கேதாரநாதன்**

அமரர் அவர்கள் தமது இளமைக்கல்வியை புகழ் பூத்த தமது சொந்தப் பகுதியான வேலணையிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்று சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த பின்னர் புனித ஆசிரியப் பணியை முதலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்திலும் மேற்கொண்டு மாணவர் பாராட்டுக்கள் பெற்ற நல்லாசானாகத் திகழ்ந்தார். ஆசிரிய வாண்மை விருத்தியைக் கருத்திற் கொண்டு கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்று சிறந்த மாணவர்களை உருவாக்கினார்.

**- இரா.சுந்தரலிங்கம்,**

(முன்னாள் யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர்)

**கேதாரநாதன் என்ற அரும்பெறல் மாமணி.....**

கேதாரநாதனும் அவரது அருமைத் துணைவியாரும் தத்தம் துறையில் நிறைபுலமை எய்தி ஆசிரிய திலகங்களாகத் துலங்கிய நிலையில் பல பதவிகளை அவர்கள் விரும்பினால் பெற்றிருக்க முடியும். ஆனால் அவர்களோ ஊர் அபிமானம் மிக்கதாம் பிறந்து வளர்ந்த பிரதேசத்துக்கே தமது சேவை அமைய வேண்டுமென்று விரும்பித் தமது ஆசிரியப் பணியை தாம் ஆரம்ப கல்வியைப் பயின்ற வேலணை மத்திய கல்லூரியிலேயே தொடர்ந்தும் பணியாற்றினார்கள். இறுதிக் காலத்தில் கேதாரம் மத்திய கல்லூரியின் அதிபராகவும் அவரது பாரியார் பிரதி அதிபராகவும் கடமையாற்றினார்கள். இருவரும் விஞ்ஞானப் பாடங்களில் நிரம்பிய புலமை பெற்றவர்கள். பல ஆசிரியத் தகைமைகளையும் சிறப்புப் பட்டங்களையும் பெற்றவர்கள். திறமைமிக்க நல்லாசிரியர்கள். ஆகவே மாணவ குழாம் அவர்களைச் சூழ்ந்து நின்று நற்புலமையும் பயனும் பெற்றார்கள். வேலணைப் பிரதேசத்தின் தகைமைகள், மாணவர் சிறப்புப் பெறுபேறுகள் இவர்கள் காலத்தில் இவர்களின் சிறந்த பங்களிப்பின் பயனாக எக்காலத்திலும் இல்லாதவாறு உயர்ந்தது.

இலக்கியச் செம்மல் **செ.குணரத்தினம்,**

(முன்னாள் தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்)

(அமரர் பொ.கேதாரநாதன் அவர்களது நினைவு மலரிலிருந்து......)

**தினக்குரல் (09.03.2008)**

**கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் புதிய உசாத்துணைப் பிரிவு ஆரம்பம்**

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்று 9ஆம் திகதி புதிய உசாத்துணைப் பிரிவின் (முதன் முதலாக சட்டப்பிரிவு உட்பட உயிரியல், விஞ்ஞானம், பௌதீகம், கணிதம், வர்த்தகம், கலை, தமிழ் இலக்கணமும் இலக்கியமும் விஸ்தரிக்கப்பட்ட) திறப்பு விழாவின் போது நியாயவாதி எஸ்.ஆர்.கனகநாயகம், சிரேஷ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியில் ஒளிவளர் விளக்கு**

அமரர் தமது இளமைக்கல்வியை புகழ் பூத்த தமது சொந்தப் பகுதியான வேலணையிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்று சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த பின்னர் புனித ஆசிரியப் பணியை முதலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்திலும் மேற்கொண்டு மாணவர் பாராட்டுக்கள் பெற்ற நல்லாசானாகத் திகழ்ந்தார். ஆசிரிய வாண்மை விருத்தியைக் கருத்திற் கொண்டு கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்று சிறந்த மாணவர்களை உருவாக்கினார். பல்லாண்டு ஆசிரியச் செம்மலாக விளங்கிய அமரர், பாடசாலை நிர்வாகத்திலும் சமத்தராகி தான் முதலில் பயின்ற அதே கல்லூரியின் பிரதி அதிபராகவும் ஈற்றில் அதிபராகவும் தனது பதவிக் காலத்தில் உயர்ச்சிகள் பெற்று கல்லூரியையும் வெற்றிப் பாதையிட்டு கல்விச் சமூகத்தின் நன்மதிப்புகளையும் பெற்று மகிழ்ந்தார்.

**இரா. சுந்தரலிங்கம் -**

முன்னாள் யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர்

**கேதாரநாதன் என்ற அரும்பெறல் மாமணி.........**

கேதாரநாதனும் அவரது அருமைத் துணைவியாரும் தத்தம் துறையில் நிறைபுலமை எய்தி ஆசிரிய திலகங்களாகத் துலங்கிய நிலையில் பல பதவிகளை அவர்கள் விரும்பினால் பெற்றிருக்க முடியும். ஆனால் அவர்களோ ஊர் அபிமானம் மிக்கதாம் பிறந்து வளர்ந்த பிரதேசத்துக்கே தமது சேவை அமைய வேண்டுமென்று விரும்பித் தமது ஆசிரியப் பணியை தாம் ஆரம்பக் கல்வியைப் பயின்ற வேலணை மத்திய கல்லூரியிலேயே தொடர்ந்தும் பணியாற்றினார்கள். இறுதிக் காலத்தில் கேதாரம் மத்திய கல்லூரியின் அதிபராகவும் அவரது பாரியார் பிரதி அதிபராகவும் கடமையாற்றினார்கள். இருவரும் விஞ்ஞானப் பாடங்களில் நிரம்பிய புலமை பெற்றவர்கள். பல ஆசிரியத் தகைமைகளையும் சிறப்புப் பட்டங்களையும் பெற்றவர்கள். திறமைமிக்க நல்லாசிரியர்கள். ஆகவே மாணவ குழாம் அவர்களைச் சூழ்ந்து நின்று நற்புலமையும் பயனும் பெற்றார்கள். வேலணைப் பிரதேசத்தின் தகைமைகள், மாணவர் சிறப்புப் பெறுபேறுகள் இவர்கள் காலத்தில் இவர்களின் சிறந்த பங்களிப்பின் பயனாக எக்காலத்திலும் இல்லாதவாறு உயர்ந்தது. இப்பிரதேசத்து மாணவர்கள் தமது மேற் கல்வியின் பொருட்டு பிற பாடசாலைகளைத் தேடிச் செல்லும் நிலைபோய் மத்திய கல்லூரியில் தொடர்ந்து படித்தே பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்த இந்த நல்லாசிரியத் தம்பதிகளை நாடு என்றும் மறக்காது என்பது உறுதி. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாகத் தகைசால் பெருமை பெற்ற இவர்கள் சேவை காலத்தால் மறக்க முடியாதவொன்று. எமது பிரதேச மக்கள் பதியெழுவறியாப் பழம்பதி மக்கள், காலத்தின் கோலத்தால் அலைக்கழிந்து ஊரைவிட்டு வெளியேறிய நிலையிலும் கேதாரம் அவர்கள் தமது பணியினை யாழ்ப்பாணத்திலும் தொடர்ந்தார்கள். மத்திய கல்லூரியை யாழ்ப்பாணத்திலும் புதிய இடம் கண்டு அமைத்துக் கல்விப்பணியை இடைவிடாது தொடர்ந்தார்கள். புதிய நிலையில் இயங்கிய பாடசாலைக்கு உதவி பெறும் பொருட்டு தமது சிரமத்தையும் பாராது கொழும்பு வந்து பழைய மாணவர்கள், ஊரவர்களைத் தொடர்பு கொண்டு ஆதரவு திரட்டிக் கல்லூரிப் பணியைத் தொடர்ந்தார் என்றால் இவரின் பாடசாலை அபிமானமும் ஊர் அபிமானமும் எத்தகையது என்று நாம் கண்டு வியந்தோம். அரும்பெறல் மாமணியான அருமை நண்பன் கேதாரநாதன் ஆத்மசாந்திக்கு வேண்டுவதோடு அவரது அருமைப் பாரியாருக்கும் அன்புச் செல்வங்களுக்கும் இந்நேரத்தில் ஆறுதல் கூற விரும்புகின்றேன். தனது கடமைகளை இனிது நிறைவேற்றிய ஆத்ம திருப்தியோடு இவ்வுலகு நீத்த எங்களூரின் மாமணி இறைவன் நிழலில் வீற்றுப் பிறவா இன்பம் துய்க்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இலக்கியச் செம்மல் **செ. குணரத்தினம்** -

முன்னாள் தலைவர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(அமரர் பொ. கேதாரநாதன் அவர்களது நினைவுமலரிலிருந்து.......)

3 பெரியார்களின் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்யப்படுகிறது.

**உதயன் பத்திரிகை (05.03.2008)**

**சமூக நலனுக்காக தம்மை அர்ப்பணித்து உழைத்த பெருமையும் தகுதியும் மிகுந்த பெரியோர் மூவர்.**

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 2008ம் ஆண்டு பங்குனி மாதம் 9ந் திகதி புதிய உசாத்துணைப் பிரிவின் (முதன் முதலாக சட்டப்பிரிவும் உட்பட, உயிரியல் விஞ்ஞானம், பௌதீகம், கணிதம், வர்த்தகம், கலை, தமிழ் இலக்கணமும் இலக்கியமும் விஸ்தரிக்கப்பட்ட) திறப்பு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் திரு. நியாயவாதி எஸ். ஆர். கனகநாயகம், சிரேஷ்ட சட்டத்தரணி உயர் திரு. என். ரி. சிவஞானம், மேலும் வேலணை மத்திய மகாவித்தியாலய (தற்காலம் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயம்) முன்னாள் அதிபர் உயர்திரு. பொ. கேதாரநாதன் ஆகிய மூவர்களினதும் உருவப்படங்கள் திரை நீக்கம் செய்யப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்பட்டது.

உயர் திரு நியாயவாதி
**எஸ். ஆர். கனகநாயகம்.....**
**"மலையொன்று மறைந்து விட்டது"**



தன் கட்சிக்காரரின் வழக்கின் நிகழ்வுகள் மிக நுணுக்கமாக நினைவில் வைத்திருப்பார். பல இளம் சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரரின் வழக்கைப் போதுமான அளவு புரிந்து கொள்ளாமல் வரும் மன்றில் எண்பது வயதைத் தாண்டிய இளையதம்பி ஐயா அவர்களும் கனகநாயகம் அவர்களும் மிக நுணுக்கமாக நிகழ்வுகளைத் தெரிந்து வைத்திருந்தமை என்னை மலைக்கச் செய்தது. வயதினால் அவர்களின் விழிப்புத் தன்மையைக் குறைக்க முடியவில்லை. அலட்சியமாகப் பேசும் சுபாவம் உடைய வராயினும் திரு. கனகநாயகம் அவர்கள் எவர்மீதும் குரோதமோ, கோபமோ, அசூசையோ கொள்ளாதவர். குழந்தைகள் போல் எல்லாவற்றையும் மறந்துவிட்டு வாய்விட்டுச் சிரிப்பார். தம்மைத் தாமே பார்த்துச் சிரிக்கும் நிறைகுணம் படைத்தவராகத் திகழ்ந்தார். உலகின் போக்கு அனைத்திலும் ஹாஸ்யம் நிறைந்திருந்தது அவருக்கு. ஒரு முறை அவரின் கட்சிக்காரர் சார்பில் தமிழில் பதியப்பட்ட வழக்காவணங்களில் பல முரண்பாடுகளும், பிழைகளும் இருக்கக் காணப்பட்டன. இதை எதிர்க் கட்சிக்காரரின் சட்டத்தரணி வெகுவாகக் கண்டித்து வழக்காவணம் திருத்தப்பட வேண்டும். செலவு கட்டப்படவேண்டும் என்று வாதாடினார். திரு. கனகநாயகம் அவர்களோ அதைப்பதிய எத்தனிக்கும் போது இப்பேர்ப்பட்ட பிழைகள் எழுவது சகஜம் என்றுகூறி, கட்சிக்காரர் எதைக் கூறவந்தார் என்பதே முக்கியம் என்றும் எவ்வாறு அதைக் கூறினார் என்பது முக்கியமல்ல என்று வாதாடினார். கனகநாயகம் அவர்களின் மறைவுடன் வட இலங்கைச் சட்ட அரங்கிடை இதுகாறும் ஓங்கிநின்ற மலையொன்று மறைந்துவிட்டதென்றே நினைக்கின்றேன்.

- **சி. வி. விக்னேஸ்வரன்**
(இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதியரசர்)

**"சிறந்த தலைவர்"**

எஸ். ஆர். கனகநாயகம் ஐயா அவர்கள் தனது தொழிலுக்கும் மேலாக தான் சார்ந்த தமிழ் சமூகத்திற்கு தனது வாழ்வை அர்ப்பணித்திருந்தார். அவர் எப்பொழுதுமே தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பாடுபட்டவர். எங்கு சென்றாலும் சைவ மரபினைப் பெருமையுடன் பறைசாற்றியவர். அவரின் தமிழ்ப்பற்றும் தேசப்பற்றும் காரணமாக முன்னைய இலங்கைப் பாராளுமன்றத்தின் மேற்சபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டதுடன் சிறந்த தமிழ்ப் பிரதிநிதியாகவும் விளங்கினார். ஐயா அவர்கள் இராமநாதன் நம்பிக்கை நிதியத்தில் தலைவராக்கப் பட்டதும் யாழ் பல்கலைக்கழகத்தின் முதலாவது ஆளுநர் சபையின் உறுப்பினராக நியமிக்கப் பட்டதும் சேர். பொன். இராமநாதனின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் மக்களுக்கு அவர் மீது இருந்த அபிமானத்தையும் பிரதிபலிக்கின்றது. 1970ம் ஆண்டு திரு. இராசரத்தினம் அவர்களின் மறைவிற்குப் பின் திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் அவர் இப்பதவியை 1987ம் ஆண்டு வரை தொடர்ந்து வகித்து வந்ததும் அல்லாமல் இச்சிறுவர் இல்லத்தை பல கஷ்டங்களுக்கிடையேயும் மிகச் சிறப்பாக நடாத்தி வந்தார். தனது வயது காரணமாக சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் பொறுப்பினை 1987ல் புதிய இயக்குநர் சபையிடம் கையளித்தார். ஐயா அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் பல இன்னல்களிடையிலும் அவரது ஆர்வம் காரணமாக பல முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இல்லத்து சிறார்களுடன் மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் பழகி வந்த ஐயா அவர்கள் இல்லத்தில் கொண்டாடப்படும் சமய விழாக்களில் தவறாது பங்குபற்றினார்.

- **ச. வை. பரமேஸ்வரன்**
பேராசிரியர் வைத்தியகலாநிதி

சிரேஷ்ட சட்டத்தரணி **உயர் திரு. என். ரி. சிவஞானம் ......**
**மறைந்த என். ரி. சிவஞானம்**



அமரர் திரு. என். ரி. சிவஞானம் அவர்களைச் சந்தித்திருப்பதென்பது ஒரு பெரும் பேறாகும். அவரை அறிந்து வைத்திருக்கும் நல்வாய்ப்பினைக் கொண்டிருப்போர் மனதில் அப்போது மிகவும் பெறுமதி வாய்ந்ததாயிருக்கும். அவரது ஒவ்வொரு செயலும் வருத்துவதற்குப் பதிலாக இதந்தரும் சுகமான வருடலாக இருக்கும் வகையில், மிருதுவான அவரது எளிமை மிக உயர்வான அவரது சிந்தனா சக்தியைப் பக்குவப்படுத்தியது. அவரது இரக்க சிந்தனையால் நன்மையடைந்தோர் அநேகம். தமது கட்சிக்காரர்களின் நலன்களை விட்டுக்கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மூலம் பெரும் சிறு வெற்றிமூலம் ஒருபோதும் குளிர்காய முனையாத கூர்மதி கொண்ட வழக்கறிஞராக அவர் விளங்கினார். பல்வேறு விதமான சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளைக் கையாண்டு வந்த அவர் அவை குறித்த உண்மைகள் மற்றும் சட்ட நுணுக்கங்களுடன் எப்போதும் அவர் ஆயத்தமாய் இருந்தார். நடுவர் ஆயத்திற்கு அவர் மிகப் பெரிய உதவியாகவும் தன் கட்சிக்காரர்களுக்கு மிகப்பெரிய பலமாகவும் இருந்தார். சோம்பியிருப்பது அவருக்கு மகிழ்ச்சி தராத ஒன்று. நீதிமன்றங்களுக்கு வெளியே இருக்கும் போது பல்வேறு விடயங்கள் குறித்து அவர் தம்மைத் தாமே சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வார். மனிதருக்குச் சேவை செய்து அதன் வழியாகக் கடவுளை மகிமைப்படுத்திய அவரது இறை பக்தியானது அவரது ஆழ்ந்த சமயப்பற்றினை விரித்துரைத்தது.

- எம்.ஜமீல் -

இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதியரசர்

**"கூட்டுறவு இயக்கப் பெரியார்"**

யாழ்ப்பாண விவசாயிகளை முன்னேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட என்.டி.ஏ.பி.சி யூனியன் (வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசம்) 1952.10.11 தொடக்கம் தலைவராக இருந்த என்.ரி.சிவஞானம் அவர்கள் சட்டத்துறையோடு இந்த யூனியன் வளர்ச்சிக்கும் தமது மீதி நேரத்தை செலவிட்டார். 1967ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டு வரை தொடர்ந்து இதன் தலைவராக இருந்த காலம் யாழ் விவசாயிகள் சங்கங்களினதும் இச்சமாசத்தினதும் பொற்காலம் என்றால் மிகையாகாது. யாழ்ப்பாணத்தில் வெங்காயம், உருளைக்கிழங்கு உற்பத்தி செய்து கொழும்புச் சந்தைக்கு அனுப்புவது போன்ற முயற்சிகளில் சொல்லப்பட்ட சமாசமும் தலைவர் சிவஞானமும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. என்.டி.ஏ.பி.சி சமாசம்தான் சிவஞானம், சிவஞானம்தான் என்.டி.ஏ.பி.சி சமாசம் என்று சொல்லும் அளவுக்கு அவரது தீவிர முயற்சியும் திறமையும் அமைந்தன. கூட்டுறவு இயக்கத்தை பார்வையிட வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருவோர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும்போது என்.டி.ஏ.பி.சி சமாசத்தையும் திரு.சிவஞானம் அவர்களையும் தரிசித்தே செல்வது வழக்கம். அக்காலத்தில் வருகை தந்த வெளிநாட்டவர்கள் "கூட்டுறவுப் பெரியார் சிவஞானத்தையும் சமாசத்தின் நடைமுறைகளையும் நன்கு அவதானித்து விட்டு" ஓர் குட்டி வத்திக்கான் என்று புகழாரம் சூட்டியதனையும், அது பற்றிவியந்து எழுதியதனையும் நான் நன்கறிவேன். என்.ரி.சிவஞானம் மறைந்து விட்ட போதிலும் யாழ் கூட்டுறவாளர்கள் மத்தியில் - விசேடமாக விவசாயிகள் மத்தியில் - என்றும் அவர் பெயர் நிலைத்து நிற்கும்.

- க.இ.குமாரசாமி -

இளைப்பாறிய ஆசிரியர்

முன்னாள் அதிபர் **உயர் திரு.பொ.கேதாரநாதன்......**

**"கல்விப்பணி"**



அமரர் அவர்கள் தமது இளமைக்கல்வியை புகழ் பூத்த தமது சொந்தப் பகுதியான வேலணையிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்று சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த பின்னர் புனித ஆசிரியப் பணியை முதலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்திலும் மேற்கொண்டு மாணவர் பாராட்டுக்கள் பெற்ற நல்லாசானாகத் திகழ்ந்தார். ஆசிரிய வாண்மை விருத்தியைக் கருத்திற் கொண்டு கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்று சிறந்த மாணவர்களை உருவாக்கினார். பல்லாண்டு ஆசிரியச் செம்மலாக விளங்கிய அமரர், பாடசாலை நிர்வாகத்திலும் சமத்தராகி தான் முதலில் பயின்ற அதே கல்லூரியின் பிரதி அதிபராகவும் ஈற்றில் அதிபராகவும் தனது பதவிக் காலத்தில் உயர்ச்சிகள் பெற்று கல்லூரியையும் வெற்றிப் பாதையிட்டு கல்விச் சமூகத்தின் நன்மதிப்புகளையும் பெற்று மகிழ்ந்தார்.

- இரா.சுந்தரலிங்கம் -

இளைப்பாறிய யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளர்

**"இரசாயனவியல் பல் சிறப்பாசான்"**

ஆழமாக ஆழ்ந்து பேசும் இயல்பு, சிறந்த நகைச்சுவை உணர்வு என்பனவும் பாடத்துறையில் சிறப்பான மேத விலாசமும் அவற்றைக் கற்பித்தலில் கையாண்ட நுணுக்கங்களும் மாணவரிடத்தில் அமரருக்குப் பெரும் மதிப்பை ஏற்படுத்தின. இரசாயனவியலை மாத்திரமன்றி இலக்கியம், சமூகவியல், நாளாந்த வாழ்க்கைமுறை முதலானவற்றையெல்லாம் நகைச் சுவையுடன் கற்பிக்கும் வல்லாளர் அவர். குடும்பப் பின்னணி காரணமாகப் பெருமைகள் பல பெற்றிருந்த அமரருக்கு இந்த ஆசிரியத் தொழில் மேலும் நன் மதிப்புக்களையும் பெருமைகளையும் சமூகத்தில் அள்ளிக்குவித்தது. இச்சந்தர்ப்பத்திலே தான் அமரர் அவர்கள் எண்ணிலடங்காப் பெருமைகளையும் அளவற்ற பாண்டித்தியத்தையும் பெரும் புகழையும் பெற்று எங்கும் எப்போதும் தான் நினைத்த எக்காரியத்தையும் சாதிக்கக் கூடிய வல்லமையுடன் விளக்கி, தீவகத்தின் முடிசூடா மன்னராக இருந்த அமரர் இ.மருதையனார் அவர்களின் திருமகள் திருமகளாகத் திருமணம் செய்து கொண்டார். அரச நீதி, நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் சமூக நீதிக் கடமைகள் பலவற்றையும் குறிப்பாக மேன்முறையீடுகளையும் கவனிக்க வேண்டிய நிலை அமரருக்கு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கடமையாயினும் அனைத்தையும் தன் அதிஉயர் பண்பினாலும் திறமையினாலும் தர்ம சிந்தனையினாலும் சகலரும் ஏற்கும் விதத்தில் நீதி வழுவாது செய்து காட்டிப் பெருமை பெற்றார் அமரர் பொ.கேதாரநாதன் சமூகத்தில் வயதில் எந்த நிலையில் உள்ளவர்களும் அமரது குடும்பத்தில் இருந்தவர்களைப் பார்த்து பின்பற்றி முன்னேறக் கூடிய வகையில் அமரது குடும்பத்தினர் வாழ்ந்து காட்டினார்கள்.

**சுந்தரம்பிள்ளை கலாதரன்**
முன்னாள் அதிபர்

## சுடர்ஒளி (08.03.2008)

### உசாத்துணைப் பிரிவுத் திறப்பு விழா

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் உயர்கல்வி மாணவர்களுக்கு நூல் உசாத்துணைப் பிரிவுகளை ஆரம்பிக்கும் விழா நாளை நடைபெறுகிறது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நாளை 3.30 மணிக்கு நடைபெறவிருக்கும் விழாவில் எஸ்.ஆர்.கனகநாயகம், என்.ரி.சிவஞானம், பொ.கேதாரநாதன் ஆகியோரின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்படும்.

ஜனாதிபதி சட்டத்தரணியான யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனக்-ஈஸ்வரன், கொழும்பு பல்கலைக்கழகக் கல்விப்பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆகியோர் பிரிவுகளை திறந்துவைக்கவுள்ளனர்.

தமிழ் வாழ்த்தினை சங்கீத வித்துவாட்டி செல்வி பிரபாலினி கந்தசாமியும் வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனும் நிகழ்த்தவுள்ளனர். நினைவுரைகளை செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், கே.கனக்-ஈஸ்வரன், யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

உதவிகளைப் பெற்றுக் கொடுத்த க.மு.தர்மராசா (பிரசித்த நொத்தாரிசு) நன்றிக்கடன் செலுத்துவார். நூலகச் செயலாளர் க.சண்முகலிங்கம் 'சங்க நூலகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள்' பற்றிய உரையை நிகழ்த்துவார்.

சிறப்புரைகளில் 'சட்டமும் தமிழும்' பற்றி ஓய்வு நிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், 'கல்வியும் நூலகங்களும்' பற்றிப் பேராசிரியர் சோ.சந்திரசேகரமும், 'நன்றிக்கடன் பொருள்' பற்றி அருள் மொழியரசி, கலாபூசணம் திருமதி வசந்தா வைத்தியநாதனும் நிகழ்த்துவர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்துணைச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நன்றியுரை நிகழ்த்துவார். நாட்டார் கலை நிகழ்வு கலை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளன.

### கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் பூரணத்துவம்பெற செயற்திட்டம்

### உசாத்துணை பிரிவுகள் நாளை திறந்துவைப்பு

கொழும்புத் தமிழ்ச் சங்கம் வரலாற்றுப் பாரம்பரியத்தில் தோன்றியது. பல அறிஞர்களும், தமிழ் அபிமானிகளும் இணைந்து இந்நாட்டில் தமிழ்மொழிவளர்ச்சிக்காக 22.03.1942இல் இச்சங்கத்தை நிறுவினார்கள். இச்சங்கத்தின் தலைவராக முதலியார் சு.ச.பொன்னம்பலமும், துணைத்தலைவராகத் திருவாளர்கள் இ.தம்பிராசா, மு.வைரவப்பிள்ளை ஆகியோரும் பொறுப்பேற்றனர். இவர்களே இச்சங்கத்தை நிறுவிய முன்னோடிகள். இச்சங்கம் 1942 - 50 ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு 6 (வெள்ளவத்தை) 32ஆம் ஒழுங்கை, இல 18 இல் அமைந்துள்ள வீட்டில் சிலகாலம் இயங்கியது. பின்சென். லோரன்ஸ் வீதி இல.50இல் அமைந்துள்ள வீட்டிலும் பெரேரா ஒழுங்கை, இல.51 வீட்டிலும் இயங்கியது.
அலுவலகத்தின் ஒரு பகுதியில் நூலகம் ஒன்று இயங்கியது. இலங்கையிலும், தமிழகத்திலும் வெளிவந்த நாள் இதழ்கள், வார, மாதசஞ்சிகைகள் இந்நூலகத்திற்கு வருவிக்கப்பட்டன. பத்திரிகைப் படிப்பகம் அக்காலத்தில் சிறப்பாக இயங்கியது. தமிழ் நூல்களும் நூலகத்தில் வைக்கப்பட்டு வாசகர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் பின் நூலக விதிகள் வகுக்கப்பட்டு 1946ஆம் ஆண்டில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அப்போது தலைவராக இருந்த க.ச.அருணைந்தியும் பொதுச்செயலாளராக இருந்த வித்துவான் வ.மு.கனகசுந்தரமும் நூலக விருத்தியில் ஊக்கத்துடன் செயற்பட்டனர். காப்பாளராக இருந்த த.நடராசா ஒரு அலுமாரியை நன்கொடையாகக் கொடுத்தார். செட்டி நாட்டரசர் 101 ரூபாவை நன்கொடையாகக் கொடுத்தார். வே.அ.கந்தையா சில அகராதி நூல்களைக் கொடுத்து உதவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக சங்க நூலகம் பலரின் உதவியால் வளர்ச்சி பெறலாயிற்று. 1957 ஆம் ஆண்டு சங்க அலுவலகம் வெள்ளவத்தையில் 57ஆம் ஒழுங்கை, 7ஆம் இலக்க வளவிற்கு மாற்றம் பெற்றது. இந்த நிலத்தையும் சங்கம் விலைக்குப் பெற்றிருந்தது. அப்பொழுது தலைவராக இருந்த பண்டிதர் க. பொ. இரத்தினம் புதிய இடத்தில் சிறந்த நூலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என எண்ணினார். திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுரி ஆதீனம் ஆகிய இரு ஆதீனங்களும் நூல்களைக் கொடுத்து உதவின. கீரிமலை க. பொன்னம்பலம், வண்ணார்பண்ணை க. வைத்திலிங்கம், அதிபர் ந. இ. கந்தையாபிள்ளை, க. வை. சோமசுந்தரம், க. இராசையா ஆகியோரும் நூல்களை அன்பளிப்பாக வழங்கினர். 1963ஆம் ஆண்டு தலைவராக இருந்த மு. வைரவப்பிள்ளை நூலகத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கப்பணிகளை மேற்கொண்டார். அக்காலத்தில் நூலகத்திற்கு இரு அலுமாரிகள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆசிரியர் க. இ. கந்தசுவாமி இக்காலத்தில் தான் கொழும்புக்கு இடம் மாற்றலாகி வந்தார். அவர் சங்கத்தின் புதிய உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார். நூலகப் பொறுப்பாளராகவும் பதவியேற்றார். தமிழ் ஆர்வம் மிக்கவரான க. இ. கந்தசுவாமி தமது ஆசிரியர் தொழில் தவிர்ந்த நேரங்களில் முழுமையாக சங்கப்பணியில் ஈடுபட்டார். நூலகத்தின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டினார். பல அறிஞர்களிடம் பல நூல்களை அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டார். நூல் பதிவேடு ஒன்றையும் பேணிவந்தார். ஓய்வுபெற்ற ஆசிரியர் என். நாகரட்ணம் தம்மிடம் இருந்த 200 நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். ஆண்டுதோறும் புதிய நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டன. நூலகத்திற்கு அலுமாரிகளும் பெறப்பட்டன. சிறிய நூலகமாக ஆரம்பிக்கப்பட்ட சங்க நூலகம் பெரியதொரு ஆய்வு நூலகமாக வளர்ச்சி பெறலாயிற்று.

1975ஆம் ஆண்டில் க. இ. கந்தசுவாமி சங்கப் பொதுச்செயலாளராகப் பதவியேற்றார். அரச நூலக சபைப் பணிப்பாளராக இருந்த எஸ். எம். கமால்தீன் சங்கத்திற்குப் பல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கினார். தமிழ்ச் சங்க நூலகம் ஒரு ஆய்வு நூலகமாக அமைய வேண்டும் என்ற கருத்தை எடுத்துக் கூறியவர் கமால்தீன் ஆவார். 1981ம் ஆண்டு சிறப்புமிக்க யாழ். நூலகம் அழிவடைந்தது. இது தமிழ்கூறும் நல் உலகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகத்தை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இக்காலத்தில் ஏற்பட்டதில் வியப்பில்லை. 1980 - 1990 ஆம் ஆண்டுகளில் கொழும்பு தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் இ. க. கந்தசுவாமியின் முயற்சியால் தமிழ்ச்சங்கத்திற்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தோடு அப்போதைய தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர் பெருந்தொகை நூல்களை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். அவர் கொடுத்துதவிய நூல்கள் நூலகத்தைப் பெரியதொரு நூலகமாக ஆக்குவதற்கு உதவின. இன்றைய வளர்ச்சிகளும் அவர் அத்திபாரம் இட்டுக் கொடுத்தார். 1965இல் 200 நூல்களும் 3 அலுமாரிகளும் இருந்தன. 1996இல் 17 ஆயிரம் நூல்களும் 40 அலுமாரிகளும் இருந்தன. 30ஆம் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பெருமிதம் அளிப்பதாகும். இன்று நூலகத்தில் 45,000 நூல்கள் உள்ளன. நூலகத்திற்குத் தேவையான நூலகத் தளபாடங்களும் உள்ளன. அழகியதொரு கட்டடத்தில் நூலகம் அமைந்துள்ளது. 5000 அங்கத்தவர்கள் உள்ளனர். உசாத்துணைப்பிரிவு, சிறுவர்பிரிவு, சஞ்சிகைப்பிரிவு, இரவல் வழங்கும் பிரிவு ஆகிய பிரிவுகள் நூலகத்தில் சிறப்பாக இயங்கிவருகின்றன. பல்துறை நூல்கள் நூலகத்தில் இருந்தபோதும் தமிழியல் சிறப்பு நூலகமாகவே இது இருந்துவருகின்றது.

**- ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி -**
துணைச் செயலாளர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

**சட்டமேதைகள், கல்விமான்கள் மூவரின் உருவப் படங்கள் திறப்பு**

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எஸ். ஆர். கனகநாயகம், என். ரி. சிவஞானம், பொ. கேதாரநாதன் ஆகியோரின் உருவப்படங்கள் நாளை திறந்து வைக்கப்படவுள்ளன. அதனை முன்னிட்டு அந்த மூவர் நினைவாக வெளியிடப்பட்ட கருத்துகள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஆர். கனகநாயகம் நினைவுமலரில்
**நவ. சிவப்பிரகாசம் தெரிவித்த கருத்து,**

கனகநாயகம் மனோகரா நாடகத்தில் நடித்தார். யாவரும் கைகொட்டி இன்புற நடித்தார். ஆனந்தாக் கல்லூரியில் ஆசானாய் அமைந்த அந்நாளில், ஆனந்த மயமான கனகநாயக வாழ்க்கை நாடகக் காட்சியில் இன்னொன்று கொழும்பு மாநகர் ஆனந்தாக் கல்லூரி ஆசிரியராக அமைந்தமையாகும். நற்றமிழ்க் கல்விக் கொற்றவை ஆசான் ஆனார் நாயகம். பல்கலைப் பட்டம் அவர் இட்டப்படி எய்தியது. சட்டக் கலை தான் உயர் மட்டக் கலையெனப்பட்டது. இளம் பட்டதாரி இவருக்கு சட்டம் வாழ்க்கைக்கு நிறுதிட்டமானதென்று உணர்ந்தவர். இந்த வளர்மதி நுண்மான் நுழைபுல நுணுக்கத்தை உள்ளக்களிப்புடன் உய்த்துணர்ந்த வகையிலே சட்டம் இவரின் ஆற்றல் மிக்கநாளிலே காற்றில் ஏறிய பட்டம் போல உயர்ந்தது.

எஸ். ஆர். கனகநாயகம் நினைவுமலரில்
**ச. வை. பரமேஸ்வரன் தெரிவித்த கருத்து,**

எஸ். ஆர். கனகநாயகம் ஐயா அவர்கள் தனது தொழிலுக்கும் மேலாக தான் சார்ந்த தமிழ் சமூகத்திற்கு தனது வாழ்வை அர்ப்பணித்திருந்தார். அவர் எப்பொழுதுமே தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பாடுபட்டவர் எங்கு சென்றாலும் சைவ மரபினைப் பெருமையுடன் பறைசாற்றியவர். அவரின் தமிழ்ப்பற்றும் தேசப்பற்றும் காரணமாக முன்னைய இலங்கைப் பாராளுமன்றத்தின் மேற்சபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டதுடன் சிறந்த தமிழ்ப் பிரதிநிதியாகவும் விளங்கினார். ஐயா அவர்கள் இராமநாதன் நம்பிக்கை நிதியத்தில் தலைவராக்கப் பட்டதும் யாழ் பல்கலைக்கழகத்தின் முதலாவது ஆளுநர் சபையின் உறுப்பினராக நியமிக்கப் பட்டதும் சேர். பொன். இராமநாதனின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் மக்களுக்கு அவர் மீது இருந்த அபிமானத்தையும் பிரதிபலிக்கின்றது.

என். ரி. சிவஞானம் நினைவு மலரில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி **கே. பாலகிட்ணர்,** சிரேஷ்ட சட்டத்தரணி **என். ரி. சிவஞானம்** பற்றி தெரிவித்த கருத்து -

திருவாதிரை தினத்தன்று திரு. சிவஞானம் நல்லூர் சிவன் கோவிலில் எமக்கு இவ்வாறு விளக்கமளித்தார். "சிவபெருமானார் இங்கு சடங்கு முறைப்படி வலம் வருவாரானால் வழிநெடுக அவர் நடனமாடித்தான் செல்ல வேண்டும். இக்கூற்றானது திரு. சிவஞானம் அவர்களின் வாழ்க்கை முறை எத்துணை மெய் சிலிர்க்கக் கூடியதாயிருந்தது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. வெளியே அவர் சென்றால் துடிப்பான அவரது ஆளுமை உணரப்படும் வகையில் ஒரு தாக்கத்தை அவர் ஏற்படுத்த வேண்டியிருந்தது. நீதிமன்றங்களில் அவர் சிறிதளவே பேசினாலும் அதை விளை பயன்தரு வகையில் வெளிப்படுத்தினார். பற்றுறுதி கொண்ட நண்பனாக அவர் விளங்கினார். எதைச் சரியென்று அவர் உணர்ந்தாரோ அதன்மீது அவர் காட்டிய அசைக்க முடியாத பற்றுறுதியே அவர் உயிருக்கு விலையாக அமைந்தது. தடைகளைக் கண்டு தன்திட்டத்தை மாற்றுபவரல்லர் அவர். திண்ணிய அச்சில் வார்க்கப்பட்ட உறுதியான குணம் படைத்த அவருக்கு எதிர் நீச்சல் போடுவதென்பது பழக்கமாகிவிட்ட செயல். திறமையான தலைவர் ஒருவரை நாடு இழந்துள்ளது. இவரைப் போன்றோருக்கு நாட்டின் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. சட்டத்தரணிகள் சங்கம் ஆற்றல் வாய்ந்த வழக்கறிஞர் ஒருவரை இழந்து விட்டது. இவரைப்போன்ற சமயப்பற்று மிக்க ஒருவரை முன்மாதிரியான ஒரு பண்பாளரை, தன் தொழில்மட்டில் அற்பணிப்போடு செயற்படும் ஒருவரைச் சமூகம் இனிக்காணப் போவதில்லை.

என். ரி. சிவஞானம் பற்றி
பட்டயக் கணக்காளர் **இ. வி. தளையசிங்கம்** தெரிவித்த கருத்து -

என். ரி. அவர்கள் பண்பைத் தனது வாழ்வின் அடிநிலப் பாறையாகக் கொண்டிருந்தார். அரை நூற்றாண்டு காலமாக அவர் நடத்தி வந்த அறிவார்ந்த அவரது தொழிலில் மிளிர்ந்த அவரது நடத்தையானது உலகம் முழுவதிலும் அனைத்துக் காலங்களிலும் ஏற்றிப் போற்றப்பட்டு வந்த உன்னத கட்டளையான நற்பண்பினால் பளிச்சிட்டது. அவர் தோற்றிய அனைத்து நீதிமன்றங்களிலும் "அனைத்து அவதானிகளினதும் அவதானி என்ற தகுதியை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. பண்பைப் பற்றிக் கொண்டிருந்த அவரது பிடி அவரது தனிப்பட்ட வாழ்விலும் அவரது தொழில்சார் வாழ்விலும் எந்த அளவுக்கு உறுதியான செல்வாக்கைக் கொண்டிருந்ததென்றால் காலமென்னும் மணலில் அவர் தம் காலடியினைப் பதித்துச் சென்றார் என்று காண்பது சாலவும் பொருத்தமுடையதாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. கேதாரநாதன் நினைவு மலரில் இருந்து

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இரங்கல் செய்தியில் தெரிவித்த கருத்து -**

கேதாரநாதன் சிட்னியில் வாழ்ந்த குறுகிய காலத்திலேயே எமது சங்கத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். எமது கல்லூரியின் முன்னேற்றத்திற்கு நாம் உதவ வேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்ட எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டுக்கும் கேதாரநாதன் ஆலோசனையும் செயற்திறனும் உறுதுணையாக அமைய வேண்டும் என்ற ஒரே நோக்கில் நாம் அவரை எமது போஷகராக தெரிந்தெடுத்தோம். இன்று அவரின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பினை ஏற்படுத்திவிட்டது. அவரின் பிரிவு கண்டு துயருறும் நாம், அவர் நமக்கெல்லாம் இதுவரை ஆற்றிய சேவையையும் வழங்கிய அறிவுரைகளையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

பொ. கேதாரநாதன் பற்றி

**க. மு. தர்மராசா தெரிவிக்கும் கருத்து -**

பொ. கேதாரநாதன் ஆசிரியர் ஒரு சிந்தனைச் சிற்பி. இவர் யாழ்ப்பாணம் வேலணை மேற்கில் எழுந்தருளியிருக்கும் முடிப்பிள்ளையார் கோயில் அங்கு அருள்மிகும் ஆலயமாக விளங்கி வருவது யாவரும் அறிந்ததே. இவ்வாலயத்தைக் காலஞ்சென்ற சேதுபதி பொன்னையா அவர்களும் அவரது சகோதரர்களும் காலிப் பிரதேசத்திலிருந்து கொண்டு வந்த கருங்கல்லைக் கொண்டு கட்டிப் புணருத்தாரணம் செய்து பெரும்பேறு பெற்றவர்கள். அதே சேதுபதி பொன்னையா தம்பதிகளின் அரும்பெறல் மைந்தனே அமரர் கேதாரநாதன் ஆவர். இவர் பிறந்தவழி புகுந்தவழியாகிய இருவழிச் சிறப்புப் பெற்றவர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுடன் கற்றுத் தமிழ்ப் பேரறிவுமிக்க ஆசிரியமணி மருதையனார் (இ. ம) அவர்களே புகுந்த வழியினராவார். மதியூகம் வாய்ந்த ஆசிரியமணி மருதையனார் அவர்களின் அருமை மகள் திருமகள், (பட்டதாரி ஆசிரியை) தான் அமரர் கேதாரநாதனின் அருமை மனைவியாவர். இந்த ஆசிரியத் தம்பதிகள் இருவரும் நாட்டிற்காக கல்விக்காக வேலணை சேர் வை. துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்களாவர். வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் காலஞ்சென்ற சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும் பாராளுமன்றச் சபாநாயகராகவும் கடமையாற்றிய பொழுது அவரின் உறுதுணையாலும் ஆசிரியமணி இ. மருதையனாரின் பெரு முயற்சியினாலும் உருவாகிய ஒரு கல்வித் தாபனம் என்பதை மறக்க முடியாது. இந்த மத்திய மகா வித்தியாலயத்தை உருவாக்க ஆசிரியமணி இ. ம. அவர்கள் அயராதுழைத்த அதேவேளை அப்பாடசாலை மாணவர்களுக்கு அமரர் கேதாரநாதன் ஆற்றிய அளப்பரிய சேவையை மாணவர் உலகம் மறக்க மாட்டாதெனவே நம்புகின்றேன்.

தான் மாத்திரமல்ல தனது மனையாளின் நிறைவான சேவையையும் அளிக்கச் செய்த பெருமை திரு. கேதாரநாதனைச் சார்ந்ததாகும். இவர்களின் சேவையைத் தனிப்பட்ட முறையில் இவர்களின் எதிராளிகளும் மதித்து மரியாதை கொடுத்தார்கள் என்றால் சேவையின் பெருமையை வேறு சொல்லவும் வேண்டுமா?

***Daily Mirror Thursday March 06th, 2008***

## Ceylon Tamil Sangam Law Division Library Grows

### Appreciations of the late Advocate S.R.Kanaganayagam

***By S.Sharvananda, Former Chief Justice and Governor Western Province***

Though I did not belong to the generation of Mr.Kanaganayagam, I have appeared sufficiently in the Jaffna Courts when he was a reputed Senior to know what a sought after Counsel he was. A half century of civil practice, one need hardly say, had provided an unmatched legal armoury to a mind which inherently was exceptionally agile and receptive. But long before he reached this half century he had reached the top of his profession; the rest of his legal life matured his talents, as age matures wine in the cask. Years never aged him. Both in appearance and outlook on life, he remained youthful. He rarely lost his composure and calm. His personal knowledge of the people in Jaffna was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

extra-ordinary. You name anyone and, in a flash, he would give his pedigree and a thumb-nail sketch of his family history. With his death, not only a legal luminary but a landmark has disappeared from the Jaffna scene.

**Appreciations of the late Advocate S.R.Kanaganayagam**

***By S.Sivagnanam, former Government Agent, Vavuniya***

What Mr.S.R.Kanaganayagam greatly desired to happen at No.61, First Cross Street, Jaffna, happened quite unexpectedly in distant Australia on 15th May 1989. He passed away without giving an opportunity to his very large number of friends and admirers all over Jaffna to bid him the last farewell. Three score years of active life in several, varied fields of activity certainly deserve to be called an era. Politics, religion, education, law, social service, drama – all came within his sphere and in every one of them he performed his part with great distinction. President of the All Ceylon Tamil Congress, Senator, President and Manager of the Hindu Board of Education, Trustee of the Sangaraththai Temple, President of the Bar Association of Jaffna, Council Member of the Jaffna University, President of the Board of Directors of Parameshwara College (commonly kwon as the Ramanathan Trust) Vice President of the Educational Trust – these are some of the positions which he adorned. Mr.S.R.Kanaganayagam fought a lone battle to reconstitute the Board of Directors of Parameswara College (established under Chapter 298 of the Legislative Enactments of Ceylon) by decree and vesting order in Case No.TR 85 of the District of Jaffna.

**Appreciations of the late N.T.Sivagnanam**

***By Hon. M.Jameel, Judge of the Supreme Court.***

The privilege of having met the late Mr.**N.T.Sivagnanam** will be greatly priced by those who had the good fortune to have come to know him. His simplicity so mellowed tempered his high thinking. Every action of his was more a caress than a crush. Those who benefitted from his benevolence are legion. He was an astute lawyer who never sacrificed his client's best interests for a petty victory. He handled a wide range of cases both civil and criminal and was always ready, both on the facts and on the law. He was of immense help to the Bench and a tower of strength to his clients. He was not happy to be idle. He kept himself busy in a variety of matters outside the courts. A deeply religious personality, he was one whose devotion was characterized by the glorification of God through service to man.

**Appreciations of the late N.T.Sivagnanam**

***By Muhandiram E.P.Rasiah J.P., Commander, Order of St.John***

Mr.Sivagnanam has rendered marvelous service to the Jaffna cultivators. To save space and time I shall refer to three outstanding services of Mr.Sivagnanam.

1. Securing of seed onion from India and inaugurating the cultivation of red onion on a commercial scale in Jaffn.

2. On the request of Rev. Mather that mechanical irrigation be introduced to replace the present need for five men for manuel irrigation, Mr.Sivagnanam, sought the assistance of traders in Colombo and imported water pumps which became a belssing to the cultivators of subsidiary crops in the Jaffna penisula.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. As a prospective Parliamentarian, he had plans to render great service to the masses particularly the cultivators.

**Appreciations of the late Ponnaiah Ketharanathan**
***By Shanmugampillai Kathirgamanathan of Velanai presently of Australia***

On migration to Sydney, the first thing he did was to gather students of Velanani Central School, old teachers and people from the Kayts constituency. We all met at Strathfield Park, somewhere in 1992. Ketharam explained to us how the students of Velanai Central were displaced after the army occupation of Velanai and the adjoining islands. He made such an impressive speech that melted the hearts of every one present. Subsequently a substantial amount of money was collected and sent to the School. He was instrumental in the formation of the OBA of Central School - Velanai at Sydney and Melbourne. Today the OBA functions this OBA constitutes past students, old teachers and people from the Kayts constituency.

It was a concidence that it was Thursday 31st October 1996. He went to the Sai Baba Centre at Strathfield for "Bajans". He returned home about 9.00 pm, had his dineer, cracked his well practiced usual jokes with his wife, children and daughter in law, and went to bed at 11.00 pm. At about 1.30 am in the morning he passed away peacefully.

**Appreciations of the late Ponnaiah Ketharanathan**
***By Old Student's Association, Velanai Central College.***

In 1991, this college was compelled to shift to Jaffna due to the problems at Velanai and the College started functioning in a temporary shed without adequate place and furniture. In the latter part of year 1992, it was almost impossible to travel from Jaffna to Colombo. The traveling was very hazardous and many people had to sacrifice their lives when they attempted to travel to Colombo. Despite these difficulties and his ill – health Mr.P.Ketharanathan came to Colombo and personally met several old students and summoned a meeting on 30th August 1992, at the Old Town Hall. This paved the way for the inaugural meeting of J/Velanai Sir Vythialingam Duraisamy Madya Maha Vidyalayam Old Students Association Colombo. He was the founder and the first President of this Association. He rendered yeoman service in helping to collect funds to develop the College. Due to his personal endeavour a large amount of money was collected and sent to the College to purchase required furniture and other items needed by the School.

> The Colombo Tamil Sangam is a service oriented and non-religious, non-ethnic Society providing free services in the fields of education and culture A long time dream of the Sangam to provide its readers, particularly the student population, an expanded reference section in its library has at last come true with the assistance of a few well-wishers. One of them is Mr.K.M.Tharmarajah, Notary Public and Legal Assistant, who has donated the necessary funds for the Law Division of the reference section,in memory of the late S.R.Kanaganayagam, Advocate and the late N.T.Sivagnanam, Attorney-at-Law and Notary Public, under whom Mr.Tharmarajah had learned his Law. Mr.Tharmarajah has also been instrumental in raising funds for the science division, donated in memory of the late P.Ketharanathan, Principal, Velanai Central College, by the members of the family of the

**Compiled by**
**K.M.Tharmarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருள் காண்பதறிவு

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## புதிய உசாத்துணை நூலகப் பிரிவின் திறப்புவிழா

சட்டமா மேதையாகவும் சமய, சமூக சேவையாளராகவும் நாட்டார்க்கு நற்பணியாற்றிய அருங்குணத் தோன்றல் நியாயதுரந்தரர் **எஸ்.ஆர்.கனகநாயகம்** அவர்களிடமும்,
சிரேஷ்ட சட்டத்தரணியும் சிறந்த சமூக சேவையாளருமாகிய
**உயர்திரு. என்.ரீ.சிவஞானம்** அவர்களிடமும்,
சட்டக்கல்லூரி செல்லாது சட்டம் பயின்ற காரைநகரைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளருமான **திரு.க.மு.தர்மராசா** அவர்கள்
மேற்போந்த பெரியோர்களுக்கு தனது **நன்றிக்கடனாக** எமது நூலகச் சட்டப்பிரிவை ஆரம்பிக்க பொருண்மிய ஆதரவை நல்கியதோடு நூலகச் சட்டப்பிரிவில் அவர்களிருவரினதும் உருவப்படங்களைத் திரைநீக்கம் செய்விப்பதற்கும் ஏற்பாடு செய்துள்ளார்.

மேலும் திரு.க.மு.தர்மராசா அவர்கள் மூலம் வேலணை மத்திய மகாவித்தியாலய (தற்காலம் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயம்) முன்னால் அதிபர் **திரு.பொ.கேதாரநாதன்** நிறைவாக அவரது குடும்பத்தினர் எமது நூலகத்தின் உயிரியல், விஞ்ஞானம், பௌதீகம், கணிதம், வர்த்தகம், கலை, தமிழ்இலக்கணமும் இலக்கியமும் ஆகிய பிரிவுக்குப் பொருளுதவி புரிந்தமையைக் குறிக்கும் முகமாக அவர்களுடைய உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.


நியாயதுரந்தரர் **உயர்திரு எஸ்.ஆர்.கனகநாயகம்**


கல்லூரி அதிபர் **உயர்திரு பொ.கேதாரநாதன்**


சிரேஷ்ட சட்டத்தரண **உயர்திரு.என்.ரீ.சிவஞானம்**

**இடம்** : **கொழும்புத் தமிழ்ச் சங்கம் - சங்கரப்பிள்ளை மண்டபம்**

**காலம்** : **09.03.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி**

**தலைமை** : **பேராசிரியர் சபா ஜெயராசா**
(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

உருவப்படங்கள் திரைநீக்கம் :

| உருவப்படம் | | திரைநீக்கம் செய்பவர் |
|---|---|---|
| உயர்திரு. எஸ். ஆர். கனகநாயகம் | : | **செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்**<br>ஜனாதிபதி சட்டத்தரணி (P.C.)<br>யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் |
| உயர்திரு. என். ரி. சிவஞானம் | : | **திரு. கே. கனக்-ஈஸ்வரன்**<br>ஜனாதிபதி சட்டத்தரணி (P.C.) |
| உயர்திரு. பொ. கேதாரநாதன் | : | **பேராசிரியர் சோ. சநிதிரசேகரம்**<br>கல்விப் பீடாதிபதி<br>கொழும்புப் பல்கலைக்கழகம். |

**தமிழ்வாழ்த்து** : சங்கீதவித்துவான்
**செல்வி பிரபாலினி கந்தசாமி**

**வரவேற்புரை** : **திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**
(பொதுச் செயலாளர் கொழும்புததமிழ்ச்சங்கம்)

**தலைமையுரை** : **பேராசிரியர் சபா ஜெயராசா**

**நினைவுரைகள்** : **செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்**
**திரு. கே. கனக்-ஈஸ்வரன்**

**பேராசிரியர் இரா சிவச்சந்திரன்** (யாழ் பல்கலைக்கழகம்)

**நன்றிக்கடன் செலுத்தும் உரை** : **திரு. க. மு. தர்மராசா**

**நூலகச் செயலாளர் உரை** : **"சங்கநூலகத்தின் வளர்ச்சிக்கானதிட்டங்கள்"**
**திரு. க. சண்முகலிங்கம்** (நூலகச் செயலாளர்)

**சிறப்புரைகள்**
**"சட்டமுந் தமிழும்"**
**திரு. சி. வி. விக்கினேஸ்வரன்** (எழுத்துரை)
ஓய்வுநிலை உச்சநீதிமன்ற நீதியரசர்
**"கல்வியும் நூலகங்களும்"**
**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**
**"நன்றிக்கடன்"**
அருள்மொழியரசி, கலாபூஷணம், வித்துவாட்டி
**திருமதி. வசந்தா வைத்தியநாதன்**

**நன்றியுரை** : **திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசுவாமி**
(துணைச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்)

**கலைநிகழ்ச்சி** : **நாட்டார் கலைநிகழ்வு**

**தமிழ்வாழ்த்து**


**கல்விச் செல்வத்தை அழியவிடாமல் பாதுகாக்கும் நோக்குடன் நூலக உசாத்துணைப் பிரிவின் திறப்புவிழா நடைபெறவுள்ளதால், இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

| | | |
|---|---|---|
| **ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**<br>பொதுச்செயலாளர் | இல. 7, 57வது ஒழுங்கை<br>கொழும்பு - 06. | **க. சண்முகலிங்கம்**<br>நூலகச் செயலாளர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யமுன் அன்று காலை சமயகலாசார முறைப்படி நடைபெற்ற நிகழ்ச்சிப் படங்களும் அதன் விளக்கங்களும் :-**

பிரதமகுரு விசுவநாதஐயர் சமயக்கிரியை ஆரம்பித்து ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக்-ஈஸ்வரன் அவர்களும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியவர்கள் சமயக்கிரிகைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக் கிரியையின் போது சமூகமளித்தவர்களுக்கு தேங்காய், பூ அடங்கிய தட்டம் காட்டப்படுகிறது.







சமூகமளித்தவர்களுக்கு கற்பூர தீபம் தொட்டுக் கும்பிடுவதற்கு கொடுக்கப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக்கிரியை முடிவில் ஓய்வுநிலைபெற்ற உதவி அரசாங்க அதிபரும், பிரசித்த நொத்தாரிசுமாகி திருவாளர் சண்முகம் இராமலிங்கம் அவர்கள் தேவாரம் ஓதுகின்றார்.





சமயக் கிரியை முடிவுற்றவுடன் கற்பூரதீபம் காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பிரதமகுரு விசுவநாதஐயர் புதிய சட்டநூலக நூல்கள் அடங்கிய அலுமாரிகளுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவை சமயமுறைப்படி வைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக்கிரிகைகள் முடிவுற்றதும் பிரதமகுருவால் ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக்-ஈஸ்வரன் அவர்களுக்கு காளாஞ்சி வழங்கப்படுகிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் ஓதிய திருவாளர் சண்முகம் இராமலிங்கம் அவர்கள்
பிரதம குருவிடம் காளாஞ்சி வாங்குகிறார்.







சட்டப்பிரிவுக்கு பொருண்மிய ஆதரவை நல்கியவரும் சமூகசேவையாளருமாகிய
திரு. க. மு. தர்மராசா அவர்கள் பொதுச் செயலாளருடன் சட்டநூல்களை
பார்வையிடுவதுடன் சந்தோசப் புன்முறுவலுடன் காட்சியளிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமயக்கிரிகைகள் முடிவுற்றதும் பிரதமகுருவால் ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக்-ஈஸ்வரன் அவர்களுக்கு காளாஞ்சி வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை சட்டமேதைகள், கல்விமான் மூவரின் உருவப்படங்கள் திரைநீக்க நிகழ்ச்சியின் போது அவ்வுருவப்படங்கள் திரைநீக்கம் செய்யும் மூன்று முக்கிய பிரமுகர்களை வரவேற்று மங்கள விளக்கேற்றி அதனைத் தொடர்ந்து உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டு மாலை சூடும் படங்கள் 4ம் அத்தியாயத்தை பார்க்கவும்.

**தமிழ் வாழ்த்து -**

நீராரும் கடலுடுத்த நிலமடைந்தைக்கு எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநற் றிருநாடு
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே
நின் சீரிளமைத்திறம் வியந்து
செயல் வியந்து வாழ்த்துதுமே.

**- செல்வி பிரபாலினி கந்தசாமி -**
சங்கீத வித்துவாட்டி

**நிகழ்ச்சித் தொகுப்பு அறிவிப்பாளர் : திரு. எழில்வேந்தன்**

சற்று முன்னர் நூலகப் பிரிவின் புதிய உசாத்துணை நூலகப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களுடைய தலைமையிலேயே இந்த நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உயர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்களுடைய உருவப்படத்தை யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி ஜனாதிபதி சட்டாலோசகர் செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து உயர் திரு என். ரி. சிவஞானம் அவர்களுடைய உருவப்படத்தை ஜனாதிபதி சட்டாலோசகர் திரு. கே. கனக்-ஈஸ்வரன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார்கள். அதனை அடுத்து உயர் திரு. பொ. கேதாரநாதன் அவர்களுடைய உருவப்படத்தை கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் திறந்துவைத்தார்கள். இப்போது இதனைத் தொடர்ந்து ஏனைய நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற இருக்கின்றன. ஆரம்பத்திலே மங்கள விளக்கேற்றுமாறு பிரமுகர்களை அன்புடன் அழைக்கின்றோம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராஜா அவர்கள் முதலில் மங்கள விளக்கேற்றுவார்கள். அவரை அடுத்து யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி ஜனாதிபதி சட்டாலோசகர் செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம் அவர்கள் மங்கள விளக்கேற்றுவார்கள். அவரைத் தொடர்ந்து ஜனாதிபதி சட்டாலோசகர் திரு. கே. கனக்-ஈஸ்வரன் அவர்களை அன்புடன் அழைக்கின்றோம் மங்கள விளக்கேற்றுமாறு, கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களை அடுத்ததாக அன்புடன் அழைக்கின்றோம், அடுத்ததாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஆ. ரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் மங்கள விளக்கேற்றுவார்கள். நூலகத்தின் புதிய உசாத்துணை பிரிவின் திறப்பு விழாவுக்கு தனது பங்களிப்பை வழங்கிய திரு. க. மு. தர்மராசா அவர்களை மங்கள விளக்கேற்றுமாறு அடுத்ததாக அன்புடன் அழைக்கின்றோம். கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகச் செயலாளர் திரு. க. சன்முகலிங்கம் அவர்கள் அடுத்ததாக மங்கள விளக்கேற்றுவார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர். இரா. சிவச்சந்திரன் அவர்களை அடுத்து மங்கள விளக்கேற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் அடுத்து மங்கள விளக்கு ஏற்றுவார்கள். அவரைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றோம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராஜா அவர்கள் முதலில் மங்கள விளக்கேற்றுவார்கள். அவரை அடுத்து யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி ஜனாதிபதி சட்டாலோசகர் செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம் அவர்கள் மங்கள விளக்கேற்றுவார்கள். அவரைத் தொடர்ந்து ஜனாதிபதி சட்டாலோசகர் திரு. கே.கனக்-ஈஸ்வரன் அவர்களை அன்புடன் அழைக்கின்றோம் மங்கள விளக்கேற்றுமாறு, கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களை அடுத்ததாக அன்புடன் அழைக்கின்றோம், அடுத்ததாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஆ. ரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் மங்கள விளக்கேற்றுவார்கள். நூலகத்தின் புதிய உசாத்துணை பிரிவின் திறப்பு விழாவுக்கு தனது பங்களிப்பை வழங்கிய திரு. க.மு.தர்மராசா அவர்களை மங்கள விளக்கேற்றுமாறு அடுத்ததாக அன்புடன் அழைக்கின்றோம். கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகச் செயலாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் அடுத்ததாக மங்கள விளக்கேற்றுவார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர். இரா.சிவச்சந்திரன் அவர்களை அடுத்து மங்கள விளக்கேற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் அடுத்து மங்கள விளக்கு ஏற்றுவார்கள். அவரைத் தொடர்ந்து கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிதிச் செயலாளர் திரு. சிவலோகநாதன் மங்கள விளக்கேற்றுவார். மங்கள விளக்கேற்றல் நிகழ்விலே கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். அடுத்து தமிழ் வாழ்த்தினை சங்கீத வித்துவாட்டி. செல்வி பிரபாலினி கந்தசாமி அவர்கள் இசைப்பார்கள். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகம் உலகளாவிய ரீதியிலே புகழ்பெற்றதொரு நூலகம். தமிழ் நூல்களை அதிக எண்ணிக்கையிலும் பெரும்பாலாகவும் கொண்ட தலைநகரில் அமைந்துள்ள ஒரேயொரு நூலகம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகமே என்று துணிந்து கூறலாம். இங்கு தினமும் எத்தனையோ பேர் வந்து தங்களது அறிவுப் பசியைச் தீர்த்துச் செல்கிறார்கள் என்பதை யாரும் அறிவர். இந்நூலகத்திலே உசாத்துணைப் பிரிவுகளை அமைக்க வேண்டுமென்ற தனது எண்ணக்கருவை கொழும்புத் தமிழ்ச் சங்கம் முன்வைத்த போது, அதிலும் குறிப்பாக சட்டக்கல்வி பயிலுகின்ற மாணவர்கள் தங்களது கல்விக்கு, கற்கைநெறிக்கு தேவையான நூல்களைப் பெற்றுப் பயில்வதிலே சிரமங்களை எதிர்நோக்குகின்ற வேளையிலே அதனை தீர்த்து வைப்பதற்காக திரு க.மு. தர்மராசா அவர்கள் முன்வந்தார். சட்டக்கல்லூரி செல்லாமலே சட்டம்பயின்ற திரு.க.மு.தர்மராசா அவர்கள் அவரின் அபிமானத்திற்குரிய நியாயவாதி எஸ்.ஆர்.கனகநாயகம், மற்றும் சட்டத்தரணி என்.ரி.சிவஞானம் ஆகிய இருவரது நினைவாக சட்டதுறை தொடர்பான உசாத்துணை பிரிவை அமைப்பதற்கு தன்னால் இயன்ற பொருள் உதவிகளை வழங்கினார். இதன் பயனாகவே உசாத்துணை பிரிவு இன்று நனவாகியுள்ளது. அதே போன்று உயிரியல், விஞ்ஞானம், பௌதீகம் கணிதம் போன்ற பாடங்களில் உயர்கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு பயன்தரத்தக்க உசாத்துணைப் பிரிவுக்கான உதவிகளை, திரு.பொ.கேதாரநாதன் அவர்களுடைய நினைவாக அவரது குடும்பத்தினரிடமிருந்து பெறுவதற்கும் திரு.க.மு. தர்மராசா அவர்களே பெரிதும் உதவினார். இதன் பிரகாரம் இந்த உசாத்துணை பிரிவுகள் இன்று கொழும்பிலே தமிழ்மொழி மூலம் கல்வி கற்கின்ற எமது மாணாக்கருக்கு மிகவும் பயன்தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்று ஆரம்பிக்கப்படுகின்ற உசாத்துணைப் பிரிவுகள் மேலும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்ற நற்செய்தியினையும் கூறிக்கொள்கின்றோம். அடுத்ததாக வரவேற்புரையினை நிகழ்த்துவதற்காக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களை அன்போடு அழைக்கின்றோம்.

**வரவேற்புரை -**

**திரு.இரகுபதி பாலஸ்ரீதரன்,**

பொதுச் செயலாளர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்

எழில்வேந்தனுக்கு எனது நன்றிகள். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்வதற்கே. இன்று இந்த அருமையான விழாவுக்கு தலைமை தாங்கும் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. சபா ஜெயராசா அவர்களே! தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உருவப்படங்களை திரை நீக்கம் செய்து வைத்த திருவாளர்கள் கனக்-ஈஸ்வரனையும், பேராசிரியர் சோ. சந்திரசேகரனையும் அன்போடு வரவேற்கிறோம். நிகழ்ச்சி நிரலில் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் எனக் குறிப்பிட்டிருப்பினும், அதற்குப்பதிலாக உருவப்படம் திரைநீக்கம் செய்த திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களையும் அன்போடு வரவேற்கின்றோம். தற்போதைய காலகட்டம் நெருக்கடி நிறைந்ததாக இருப்பினும் அருமையான விழாக்கள் அருமையான நிகழ்வுகள் அடுத்தடுத்து நிகழ்ந்து கொண்டு வருகின்றன என்பதை ஏற்கனவே இரண்டாண்டு காலம் பொதுச் செயலாளராக பணியாற்றியவன் என்ற கோதாவில் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகின்றேன். அதற்கு எமது புதிய தலைவர் திரு. சபா ஜெயராசாவின் ராசியோ தெரியவில்லை. தமிழ் வாழ்த்து இசைத்த செல்வி. பிரபாலினி கந்தசாமி அவர்களை அன்புடன் வரவேற்கிறேன். நினைவுரைகள் வழங்கவிருக்கும் செல்வி.சாந்தா அபிமன்னசிங்கம், திரு. கனக்-ஈஸ்வரன், எனது நீண்ட கால நண்பனும் எமது இலங்கை வங்கி கஸ்டமருமான பேராசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவச்சந்திரன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், திரு. சண்முகலிங்கம் (நூலகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் இன்று விழா நன்றாக நடைபெறுகின்றதென்றால் சிறப்பாக நடைபெறுகிறது என்றால் சண்முகலிங்கம் ஆள்வார்பிள்ளை கந்தசாமி போன்றவர்கள் முக்கிய காரண கர்த்தாக்களாக இருக்கின்றார்கள்) ஆகிய அனைத்துப் பெரியோர்களையும் வருக வருக என்று அன்புடன் வரவேற்கின்றேன். சட்டமுந் தமிழும் என்ற தலைப்பிலே மாண்புமிகு சி. விக்கினேஸ்வரன் அவர்களுடைய எழுத்துரையை வாசித்தளிக்க வருகை தந்திருக்கும் சட்டத்தரணி. சோ. தேவராஜா அவர்களையும் அன்போடு வரவேற்கின்றேன். நன்றிக் கடன் என்ற தலைப்பிலே சொற்பெருக்காற்ற வந்து கொண்டிருக்கும் எமது மரியாதைக்குரிய கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன் அம்மையார் அவர்களை கௌரவத்தோடு வரவேற்கின்றோம். ஒரு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு சபையோரின் ஊக்கமே அத்தியாவசியமாகும். இந்த வகையில் எமக்கு இன்று மிகவும் திருப்திதரத்தக்கவாறு நீங்கள் எல்லோரும் இங்கே கூடியிருக்கிறீர்கள். சுருங்கச் சொல்வதாயின், மேலதிக இருக்கைகளை தருவிக்க வேண்டிய அளவுக்கு திரண்டுள்ளீர்கள். உங்கள் இந்த அமோக ஆதரவிற்காக உங்கள் எல்லோரையும் நன்றியுடனும் அன்புடனும் வருக வருகவென வரவேற்கின்றோம். மேலும் எமது ஆட்சிகுழு உறுப்பினர்கள் அனைவரையும் நிர்வாகச் செயலாளர் தம்பி சிவாசுப்பிரமணியம் அவர்களையும் (அடிக்கடி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து இவ்வாறு கடுமையாய் உழைத்தால் குருதி அழுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது), துணைச் செயலாளர் திரு. சிவராஜா அவர்களையும் எமது வலது கை போல் இயங்கும் ஆள்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களையும் மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள், சிற்றூழியர்கள், பகுதிநேர ஊழியர்கள் எல்லோரையும் வருக வருக என வரவேற்கின்றோம். ஆக இந்த மாலைப் பொழுது ஒரு இனிய மாலைப் பொழுதாக அமையும் என்ற நம்பிக்கையுடன் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

**தலைமையுரை**

பேராசிரியர் சபா. ஜெயராஜா -

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர்

அன்புசால் பெரியோர்களே சான்றோர்களே இங்கு குழுமியிருக்கின்ற சட்ட வல்லுனர்களே தமிழ்ப் புலமைவாய்ந்த பெரியோர்களே தமிழ்ச் சங்கத்தினுடைய உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய நாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினுடைய வளர்ச்சியிலே, அபிவிருத்தியிலே, மேம்பாட்டிலே ஒரு மிக முக்கியமான திருப்புமுனையாக அமைகின்றது. உசாத்துணைப்பகுதி எங்களுடைய நூல்நிலையத்திலே ஏற்கனவே இருந்தாலும் இரண்டு சிறப்புத் துறைகளைக் கருத்தில் கொண்டு இன்றைய உசாத்துணைப் பிரிவை நாங்கள் திறந்து வைத்துள்ளோம். ஒன்று வெளிவாரியாகப் பட்டப் படிப்பு படிக்கின்ற எங்கள் மாணவர்கள் பல்கலைக்கழக நூல்நிலையத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளனர். அவர்களுக்கென ஓர் ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும் என்று கொழும்பில் வாழும் தமிழ்ப் பேசும் பெரியார்கள், ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் போன்றோர் எங்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய அபிலாசையை நிறைவேற்றும் வகையிலும் எங்களுடைய மாணவர்களுக்கு உதவி செய்யும் வகையிலும் இந்த கலை, விஞ்ஞானம் போன்ற பகுதிகளுக்குரிய உசாத்துணைப் பிரிவை விரிவாக்கி திறந்து வைத்திருக்கின்றோம். எமது நாட்டிலே பல்வேறு சட்டத்தரணிகள் சட்ட வல்லுனர்கள் இருக்கின்றார்கள். பல மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்திலே வெளிவாரியாக சட்டத்தைப் பயின்று கொண்டிருக்கிறார்கள், ஆனால் இவர்களுக்கு கொழும்புப் பல்கலைக்கழகத்திலே உள்ள நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்புக்கள் இல்லை. அத்துடன் இத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்த வேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது சட்ட விரிவுரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே நடத்துவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்திருக்கின்றது. அங்குள்ள விரிவுரையாளர்கள் கொழும்புக்கு வந்துவிட்டபடியால் அம்மாணவர்கள் சட்டப்படிப்பை தொடர்வதற்கு இங்கு எங்களுடைய இரண்டாம் மாடியைத் தரும்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தர் என்னைக் கேட்டுக்கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க அம்மாணவர்களது நலன் கருதி இந்த வாரம் சட்ட விரிவுரைகள் ஆம்பிக்கப்பட்டுள்ளன. அந்த இலட்சியம் நிறைவேறுவதற்கு ஒரு உறுதுணையாக, ஒரு உதவியாக, ஒரு அடிநிலையாக அத்தோடு அதிஷ்டவசமாக சட்ட உசாத்துணைப் பிரிவு உட்பட நூலக உசாத்துணைப் பிரிவு திறந்து வைக்கப்படுகின்றது. இந்த முயற்சிக்கு முன்னோடியாக செயற்பட்டு கடந்த ஒரு மாத காலமாக ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் தமிழ்ச் சங்கத்திற்கு வந்து இந்த சட்ட நூலகப் பிரிவு சிறப்பாக ஒழுங்கமைந்த முறையிலே அமைய வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தவர் எம்மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. க. மு. தர்மராசா அவர்கள் என்பதை குறிப்பிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அவர் பல இலட்சம் ரூபா செலவிலே பல அரிய சட்ட நூல்களை பல்கலைக் கழகத்திலே இருப்பதைப் போன்ற உசாத்துணைச் சட்ட பிரிவு நூல்களை அவர் தேடிச் சென்று சேகரித்து இந்த நூலகத்திற்கு தந்திருக்கிறார். அவர் எங்களுடைய நூலகச் செயலாளரின் அனுசரணையோடு பல நூலகங்களுக்கும், புத்தக விற்பனை நிலையங்களுக்கும் சென்று வெளிநாடுகளுடனும் தொடர்பு கொண்டு பல கிடைத்தற்கரிய சட்ட நூல்களை சேகரித்து வழங்கியுள்ளார். சட்டம் என்பது சட்டம் பயில்பவர்களுக்கு மட்டுமல்ல, அது பொது மக்கள் எல்லோரும் அறிந்திருக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதொரு அறிவுத்துறையாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலே கிரேக்க நாட்டில் வாழ்ந்த அறிஞன் பிளேட்டோ, சட்டங்கள் என்ற நூலை எழுதினான். அந்த நூலை எழுதியதன் நோக்கம் சட்டங்களை நிர்வகிப்பது அல்லது சட்டங்களை இயக்குவது அல்லது சட்டங்களை ஆக்குவது மட்டுமல்ல. ஆய்வறிவாளர்களைக் கொண்டதும் சட்ட ரீதியானதுமான ஒரு அரசாங்கம் அமையும் போது தான் அந்த நாட்டிலே நல்லாட்சி நிலவும் என்பதை வலியுறுத்துவதே சட்டங்கள் என்ற நூலிலே பிலேட்டா வலியுறுத்தியுள்ளார். சட்டக்கல்வி என்பது இன்று வெறுமனே சட்டத்துறையில் மாணவர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கல்வித்துறையல்ல. பல நாடுகளிலே பொதுசனத் தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், பொது மக்களுக்கு சட்டங்களை எளிய முறையிலே எடுத்துக் கூறுகின்ற மரபு வளர்ந்துகொண்டு வருகின்றது. ஏனென்றால் சட்டத்தரணிகள் மட்டுமல்ல சாதாரண மக்களும் அடிப்படை சட்டங்களை அறிந்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. சட்டம் தெரியாது என்பதற்காக ஒருவர் தப்பித்துக்கொள்ள முடியாது. ஆகவே நாங்கள் திறந்திருக்கின்ற இந்த சட்ட நூலகம் சட்ட வல்லுனர்கள் அல்லது சட்டம் படிக்கின்ற மாணவர்களுக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் உரியதாகும். பொதுமக்கள் தங்களுடைய சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதற்கு அல்லது சட்டத்துறையிலே தாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய பகுதிகளை அறிந்து கொள்வதற்கு இந்த உசாத்துணைப் பிரிவினை பயன்படுத்திக் கொள்ளலாம். கொழும்புத் தமிழ்ச் சங்கம் இந்த விரிவு பெற்ற நடவடிக்கைகளிலே வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருப்பதற்கு எங்களுடைய ஆட்சிக்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் கூட்டுறவுமே காரணமாகும். அத்தோடு கொழும்பு வாழ் தமிழ் மக்கள் நாம் கோரும் எந்த உதவிகளையும், கேட்டமாத்திரத்திலே மனங்கோணாது தயாளமாக செய்துகொண்டிருக்கின்றார்கள். மேலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழுபவர்களும் சங்கத்தின் வளர்ச்சிக்கு தங்களால் ஆன பங்களிப்பை செய்யத் தவறுவதில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ஆகவே முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் யாவும் தனியொருவரினதோ அல்லது குழுவினதோ முயற்சியல்லாது முழு தமிழ்ச் சமூகத்தினதும் ஒட்டுமொத்த முயற்சியாக, வெற்றியாக நோக்கப்பட வேண்டும். இன்று இங்கு பேசுவதற்கு பல அறிஞர்கள், பல சான்றோர்கள், பல சட்ட வல்லுனர்கள், பல பேராசிரியர்கள் வருகை தந்திருக்கிறார்கள். ஆகவே என்னுடைய தலைமையுரையினை நீடிக்காது அவர்களுடைய உரைகளை நீங்கள் செவிமடுக்க வேண்டும் என்பதற்காகவும் நேர அட்டவணைப்படி நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டுமென்பதற்காகவும் எனது உரையை சுருக்கி நிறைவு செய்கின்றேன். நாங்கள் தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்திலே இந்தக் கூட்டத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக தலைமை உரையை மிகச் சுருக்கமாக நிறைவு செய்கின்றேன் வணக்கம்.

**நினைவுரைகள்**

**நியாயவாதி எஸ்.ஆர்.கனகநாயகம் பற்றிய நினைவுரை**
**யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவியும்**
**ஜனாதிபதி சட்டாலோசகருமான செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம்**

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அவர்களே, ஜனாதிபதி சட்டத்தரணி கனக்-ஈஸ்வரன் அவர்களே, பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களே, எனது சட்டத்தரணி நண்பர்களே, இங்கு வருகை தந்திருக்கும் அன்பு உள்ளங்களே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கங்கள். எஸ்.ஆர். ஐயாவின் நிழலும் அவருக்கு உறுதுணையாய் இருந்தவருமான பிரசித்த நொத்தாரிசு கே. எம். தர்மராசா அவர்களுக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கும், என்னை இந்த நிகழ்வுக்கு அழைத்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சட்டத்துறையில் யாழ்ப்பாணச் சமுதாயத்திற்கு ஒரு பெருவிருட்சமாக நின்று நிழல் தந்து மறைந்த எஸ்.ஆர் ஐயா அவர்களைப் பற்றி பேசவுள்ளேன். சுருக்கமாக எஸ்.ஆர் ஐயா என்றும் செனேற்றர் கனகநாயகம் என்றும் அழைக்கப்பட்ட சட்டத்தரணி அட்வகேட் அமரர் சுப்பையா இரத்தினசிங்கம் கனகநாயகம் அவர்கள் 1904ம் ஆண்டு மே மாதம் 16ஆந் திகதி வட்டுக்கோட்டைப் பகுதியைச் சார்ந்த சங்கரத்தைக் கிராமத்தில் தனது பெற்றோருக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்தார். சிறு வயதில் தந்தையை இழந்த அவரை தாயார் அன்புடன் வளர்த்து வந்ததை அவர் நெகிழ்வுடன் கூறுவார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், சிறிது காலம் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியிலும், கற்று இலங்கை பல்கலைக் கழகத்தின் முன்னோடியான யுனிவசிட்டி கொலேஜில் பயின்று பின்னர் லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர் கொழும்பு ஆனந்தா கல்லூாயில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டே இலங்கைச் சட்டக்கல்லூரியில் அட்வகேட் கற்கைநெறியை முடித்து 1933ம் ஆண்டு நியாயவாதியாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் தனது தொழிலை ஆரம்பித்த அவர் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு, 61ஆம் இலக்க இல்லத்திலே வசித்து தனது தொழிலையும் செய்து வந்தார். கலகலப்பான வீடு, அது யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்திலிருந்து சுமார் 200 யார் தூரத்தில் அமைந்துள்ளது. தனது நல் மச்சாளான சத்தியம்மாவை 1933ம் ஆண்டு காலப்பகுதியில் திருமணம் செய்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். ஏகபுத்திரியும் மூத்த பிள்ளையுமான திருமதி. சாவித்திரி தேவி பாலசுப்பிரமணியம் (தேவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனது கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் கடந்த நாலு தசாப்தங்களாக அவுஸ்திரேலியாவில் ஸிட்னியில் வசித்து வருகின்றார். இங்கு வீற்றிருக்கும் ஜனாதிபதி சட்டாலோசகர் திரு. கனக்-ஈஸ்வரன் அவர்கள் இரண்டாவது பிள்ளையாவார். அவர் சட்டத்துறையில் தனக்கென தடம் பதித்தவராவார். தமிழருக்கு பெருமை சேர்க்கும் கனக்-ஈஸ்வரனின் மூன்று பிள்ளைகளுள் ஒருவரான கூஷிவான் மூன்றாம் தலைமுறைச் சட்டத்தரணியாக தொழில் புரிகின்றார். பொறியியலாளரான மகேஷ்வரன் தனது மனைவி, பிள்ளைகளுடன் கடந்த பல வருடங்களாக அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். 1987ம் ஆண்டில் யாழ்ப்பாண நீதிமன்றங்கள் செயலிழந்ததாலும் யுத்தத்தினால் எஸ். ஆர். ஐயாவின் வீடு பாதிப்படைந்ததனாலும் அவர் சிறிது காலம் சங்கரத்தையிலும் சிறிது காலம் யாழ்ப்பாண வீட்டிலும் வசித்து வந்தார். பின்னர் தனது பாரியாரினதும் பிள்ளைகளினதும் வேண்டுகோளுக்கு இசைந்து அவுஸ்திரேலியா சென்று அங்கு வாழ்ந்தார். அவர் அங்கிருக்கும் பொழுது யாழ்ப்பாணத்து சட்டத்தரணிகள் பலருடனும் அவர் கடிதமூலம் தொடர்பு கொள்வார். மனிதனாகப் பிறந்ததினால் செய்ய வேண்டியிருந்த கடமைகள் அனைத்தையும் முடித்துக்கொண்டு அவுஸ்ரேலியாவில் வசித்த காலத்தில் 1989ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி தனது 86வது வயதில் தான் வணங்கும் சங்கரத்தை பத்திரகாளி அன்னையின் நிழலைச் சேர்ந்தார். அவரின் அன்புத் துணைவியார் தனது கணவரின் ஆண்டுத்திவசத்தை சங்கரத்தையில் சிறப்பாக நடத்தி மீண்டும் அவுஸ்ரேலியா சென்று அமரத்துவம் எய்தினார். இது தான் மனிதனாக பிறந்த ஒவ்வொருவரினதும் கதையாகும். இக் கதை எப்படிக் காவியமானது என்பதில் தான் எஸ். ஆர். ஐயாவின் சிறப்புள்ளது. சட்டத்தரணியாக தொழில்புரிய சத்தியப்பிரமாணம் எடுக்கும் ஒவ்வொரு சட்டத்தரணியும் தொழிலைப் புரிந்து, உழைத்து, பிள்ளைகளை வளர்த்து, படிப்பித்து, செல்வங்களை விட்டு விட்டு இறக்கின்றார்கள். எஸ். ஆர். ஐயா எப்படியாகத் தனது தொழிலைச் செய்தார் என்பதில் தான் அவரது வாழ்க்கையின் இரகசியமே அடங்கியுள்ளது. மற்ற எல்லாத் தொழிலையும் விட சட்டத்தரணி தொழில் முற்றிலும் மாறுபட்டது. ஒரு வைத்தியர் ஒப்பரேஷன் செய்து கொண்டிருக்கும் பொழுது அவருடன் மாறுபட்ட அல்லது வேறு ஒரு டொக்டரோ டொக்டர்களோ அங்கு சுற்றிவர நின்று அதனைப் பார்ப்பதில்லை அது பற்றி தன்னுடைய கொமென்ட்சைக் கொடுப்பதில்லை ஆட்சேபனைகளைச் செய்வதில்லை. ஆசிரியர் தொழிலும் அப்படித்தான். அவர்கள் படிப்பிக்கும் பொழுது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் வேறு யாரோ அவர்களைப் பார்ப்பதில்லை. எப்போதாவது ஒரு நாள் இன்ஸ்பெக்டஸ் ஒப் ஸ்கூல்ஸ் வந்து அவரைப் பார்ப்பார் கதைப்பார். அதே மாதிரித் தான் மற்றைய எந்தத் தொழிலும். தோளுக்கு மேலாக ஒருவர் நின்று பிழை கண்டுபிடிப்பதற்கு நிற்பதில்லை. பட்டிமன்றத்தில் கூட மாற்றுக் கருத்து வாதப்பிரதிவாதங்கள் ஒருவரின் பேச்சு முடிந்த பின்னர் தான் எழும். ஆனால் சட்டத்தொழிலோ எழுந்து நின்று வழக்குப் பேசினால் உடனுக்குடன் ஆட்சேபனைகள், இடைக்கதைகள், வாதப்பிரதி வாதங்கள் எழும். இவ்வாறாக எந்தநேரமும் காலில் நிற்கும் பொழுது கொம்பியூட்டர் மாதிரி சகலதையும் நினைவுக்குக் கொண்டு வந்து ஆட்சேபனை எழுப்புவதில் அல்லது அதற்கு எதிரான வாதத்தைச் சொல்வதில் குறுக்குக் கேள்விகள் தொடுப்பது தொடுக்கும் தேவை சட்டத் தொழிலுக்குத்தான் ஏற்படுகின்றது. ஏனைய தொழில்களுக்கு இவை எல்லா நேரங்களிலும் எழுவதில்லை. சீவியம் முழுவதும் இப்படியான ஒன்றுக்கு முகம் கொடுப்பதனால் இரத்த அழுத்தம், வழக்கு பற்றி வெற்றி தோல்விகளினால் வரும் டென்ஷன், அதனால் வரும் அல்சர், டயபெடிக், காட்டிசீசஸ், போன்றவை சட்டத்தரணிகளுள் பெரும்பான்மையினரை தாக்குகின்றன. நான் எஸ். ஆர். ஐயாவிடம் தொழில் பழகச் சென்றபொழுது அவருக்கு வயது 70. அவ்வாறு இருந்தும் எஸ். ஆர். ஐயாவை இந்த நோய்கள் ஏன் அனுகவில்லையென்றால், தான் புரிந்த தொழிலை அவர் மிகவும் சீறியசாக எடுத்தமை தான். சீறியசாக எடுத்தால் தானே நோய்கள் வரும் என்று நீங்கள் கேட்கக் கூடும். அப்படியல்ல வழக்கொன்றை தனது அபாரமான சட்ட நுணுக்கங்களின் அடிப்படையில் முற்றும் முழுதுமாகப் படித்துவிடுவார். இரவில் அவற்றை எல்லாம் அவர் வைத்திருக்கும் சிவப்புநாடாவினால் கட்டி வைப்பார். அதைக் கட்டி வைத்துவிட்டால் பின்னர் நற்சிந்தனைதான். இரவு உணவின் பின்னர் ஒரு மணித்தியாலம் தனக்குப்பிடித்த சேக்ஸ்பியர், சால்ஸ் டிக்கன்ஸ், ரீடர்ஸ் டைஜெஸ்ட் போன்ற புத்தகங்களைப் படித்துவிட்டு படுக்கும் எஸ். ஆர், கர்மவீரனைப் போல் வழக்கின் தீர்ப்பினால் பாதிக்கப்படவே மாட்டார். வெற்றியானாலும் அதைப் பற்றி அலட்டிக்கொள்வதில்லை. தோல்வியானாலும் நோட்டிஸ் ஒப் அப்பீலை எழுதுவோம் என்று தான் சொல்லுவார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எப்படியோ ஐயோ இன்னும் கவனமாகப் படித்துவிட்டு இன்னும் சாட்சிகள் சிலவற்றைக் கூப்பிட்டு விட்டு இன்னும் திறமையாக வழக்கை நடாத்தியிருக்கலாமே என்ற கவலை அவருக்கு இருந்ததே இல்லை. தனது முழுத்திறமையையும் பாவித்து சகல வழிகளிலும் சிந்தித்து வழக்கை நடாத்தி முடித்த பின் வெற்றி தோல்வி அவரை என்றுமே பாதித்ததில்லை. அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கை மற்றவர்களுக்குச் சொல்லி போஸ்மோட்டம் செய்ததும் இல்லை. மாலையில் சிலவேளை நாலு மணிக்கு முன்னர் நீதிமன்றத்தில் வழக்குகள் முடியும் என்றால் சட்டத்தரணிகளின் மத்தியில் போய் வயது வித்தியாசம் பார்க்காமல் பம்பல் அடிப்பார். மனோகரா நாடகப் பாடல்களை எங்களுக்கும் பாடிக் காண்பிப்பார். பழைய கதைகளை சகலருடனும் பகிர்ந்து கொண்டு வாய்விட்டுச் சிரித்து மகிழ்வார். அமரர் எஸ். ஆர். ஐயா அவர்கள் சினமடைந்ததை நான் ஒரு போதும் கண்டதில்லை. எப்போதும் நிரந்தரப் புன்னகையொன்று அவர் முகத்தில் பூத்திருக்கும். அவர் பதற்றப்பட்டதை நான் காணவில்லை. சதாகாலமும் அழுத்தங்களுடனும் டென்சனுடனும் வாழவேண்டிய காட்டாயம் தொழில் ரீதியாக இருந்த போதிலும் அவர் முகத்தில் எந்நேரமும் அமைதியும் புன்னகையும் நிறைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகளை நற்சிந்தனைகளாக படைப்பதற்கும் நடாத்துவதற்கும் அவருககு மிகுந்த மனவுறுதியிருந்தது. இவற்றுக்கெல்லாம் அவரது அன்புத் துணைவியாரான சக்தியம்மாவே காரணம் என்பதை, அவரிடம் தொழில் பழகி யூனியராகவிருந்த 14 வருட காலப்பகுதிக்குள் நான் தெரிந்து கொண்டேன். அவருடைய வாழ்க்கைத் துணை அவருடைய சுக துக்கங்களில் எவ்வாறு கடமை புரிந்தார் என்பது யாரும் கண்டறிந்திருக்க முடியாதவொன்று. எஸ். ஆர். ஐயா நீதிமன்றத்தில் நடத்தும் சாதாரண வழக்குக்கூட சட்டத்தரணிகள் பொருந்திருந்து கேட்கும் வழக்காகி விடும். எவ்வாறு நேரம் போனது என்பது எங்களுக்கு தெரிவதில்லை. வழக்குகளை நடத்தும் பொழுது அவர் சொல்பவை எல்லாம் அவரது அபிப்பிராயங்கள் அல்ல. தனக்கு கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரதிபலிப்பே அவை என்பதால் அவற்றை அந்தக்கனமே எஸ். ஆர். ஐயா மறந்து விடுவார். அவர் களைத்து வீட்டுக்கு வந்தாலும் அவர் தலைவராக இருந்து நடத்தி வந்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தேவைகளை உடனே அங்கு சென்று கவனிப்பார். சகல சட்டத்தரணிகளின் இன்ப துன்பங்களிலும் அவர் பங்கு கொண்டவர். அவர் கலந்து கொள்ளாத சட்டத்தரணிகளின் வீட்டு நன்மை தீமைகளே இல்லை எனலாம். எஸ். ஆர். ஐயா யாழ்ப்பாணத்தில் இறந்திருந்தால் அது ஒரு மாபெரும் நிகழ்வாகத் தான் இருந்திருக்கும். சட்டத்தரணிகளின் நிகழ்வுகளில் மட்டுமல்ல தனது உற்றார், உறவினர், அயலவர், ஊர்மக்கள், நண்பர்கள் யாவருடைய சகல நன்மையான தீமையான விசயங்களிலும் அவர் கலந்துகொள்வார். அவரது சட்ட அறிவு, வாக்கு வன்மை, நயம்பட நிகழ்த்தும் ஆற்றல், அவரது சமயத் தொண்டுகள், தெய்வ பக்தி என்பன நாடறிந்த, யாழ்ப்பாணமறிந்த விடயங்களே. நல்ல மகனாக, நல்ல கணவனாக, நல்ல தகப்பனாக, நல்ல சட்டத்தரணியாக, நல்ல உறவினராக, அவை எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல மனிதனாக வாழ்ந்த அவர்தம் பெருமை பேசிமுடியாத ஒன்றாகும். அவருடைய வழிவந்தவன் நான் என்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இந்தத் தொழிலில் எனக்குக் கிடைத்த நற்பெயருக்கு அவரின் வழிகாட்டல் தான் காரணம் என்பதை நான் நிறைந்த மனத்துடன் சொல்வதில் பெருமைப்படுகின்றேன். இவ்வளவு நேரமும் பொறுமை காத்து எனது பேச்சைக் கேட்ட உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நியாயதுரந்தனர் என். ரி. சிவஞானம் பற்றிய நினைவுரை**
**ஜனாதிபதி சட்டாலோசகர் திரு. கே. கனக்-ஈஸ்வரன்**

மேடையில் வீற்றிருக்கும் கனவான்களே இங்கு சமூகமளித்திருக்கும் பெரியோர்களே அன்பர்களே அனைவருக்கும் வணக்கம். காலஞ்சென்ற திரு. என். ரி. சிவஞானம் அவர்களை, நான் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்விபயிலும் காலத்திலிருந்து நன்கறிவேன். அவர் எனது தந்தையாரின் இல்லத்திற்கு முன்னால் உள்ள முதலாம் குறுக்குத் தெரு, 48ஆம் இலக்கத்தில் பல வருடங்களாக வசித்து வந்தார். எனது தந்தையாருடன் பல வருட காலமாக தொடர்புடையவர். அது மட்டுமல்ல தான் தோன்றிய சிவில் வழக்குகளில் எனது தந்தையாரை அட்வகேற்றாக நியமித்து வழக்கு நடத்துவது வழக்கம். என். ரி. சிவஞானம் அவர்களின் மாமனாரும் சட்டசபை சபாநாயகருமான சேர் வைத்திலிங்கம் துறைசுவாமி அவர்கள் சிரேஷ்ட அட்வகேற்றாக செயற்பட்ட காலத்தில் எனது தந்தையார் அவரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். ஆதலால் என். ரி. சிவஞானம் அவர்கள் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் புதல்வியை மணம் புரிவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே எனது தந்தையார் என். ரி. சிவஞானம் அவர்களை அறிந்திருந்தார். இதன் காரணமாக என். ரி. சிவஞானம் அவர்களை எனது தந்தையார் சேர் வைத்திலிங்கம் துறைசுவாமி அவர்களின் புதல்விக்கு திருமணம் செய்துவைப்பதை வெகுவாக சிபார்சுபண்ணினார் என்று திரு. தர்மராசா அவர்கள் அடிக்கடி சொல்லுவார். அந்தத் திருமணம் யோகர் சுவாமியின் ஆசியுடன் பின்னர் நடந்தேறியதற்கு எனது தந்தையாரும் ஒருவகையில் காரணமாய் இருந்தார். என். ரி. சிவஞானம் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறம்பட பேசுவதிலும் எழுதுவதிலும் ஆற்றல் உடையவர். அவர் சிவில், கிரிமினல், தாபரிப்பு, விவாகரத்து, தர்மச்சொத்து போன்ற வழக்குகளைத் யாழ்ப்பாணத்தில் தனிமையாகத் திறம்பட நடாத்தியுள்ளார். இதை நான் நேரிலும் யாழ்ப்பாணத்தில் பார்த்திருக்கின்றேன். அவர் பெரும்பாலும் கொழும்பு அப்பில் கோட் வழக்குகளுக்கு காலஞ்சென்ற சீ. தியாகலிங்கம் Q.C, சீ. ரங்கநாதன் Q.C, காலஞ்சென்ற சர்வானந்தா (பிற்காலத்தில் பிரதம நீதியரசர்) ஆகியோரை ஏற்படுத்துவார். அந்த மேன்முறையீட்டு வழக்குகள் விவாதத்திற்கு வரும் போது 1966ல் சட்டத்தொழில் ஆரம்பித்த என்னையும் யூனியராக ஏற்படுத்துவார். “கனக்-ஈஸ்வரன், நீ யூனியராக இரு” என்று பல தடவைகள் என்னை அமர்த்தினார். என். ரி. சிவஞானம் அவர்கள் வரைந்த மனுக்கள், துரட்சிகள், மறுமொழிகள், எழுத்து மூல சமர்ப்பணங்கள் ஆகியவற்றை மேலே கூறப்பட்ட சட்டத்தரணிகள் தியாகலிங்கம், ரங்கநாதன் ஆகியோர், அனேகமாக திருத்தஞ் செய்யாது ஏற்றுக் கொள்வது வழக்கம். அவர் சட்டத்தரணியாக மாத்திரமன்றி பிரசித்த நொத்தாரிசுவாகவும் நீண்டகாலமாக செயற்பட்டார். அந்தவகையிலும் பிரசித்தி பெற்றவர். அவர் சட்டத்துறையில் மாத்திரமல்ல யாழ்ப்பாண மக்களின் விவசாய அபிவிருத்திக்காக பெரும்பணி ஆற்றியவர் என்பதனை அக்காலகட்டத்திலிருந்த பலர் நன்கறிவர். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் இயங்கிய என். டி. ஏ. பி. வட இலங்கை விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (Northern District Agricultural Producers' Co-operative Union)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு தனிப்பெரும் சான்றாகும். அது மட்டுமல்லாது அரசியலிலும் நீண்டகாலமாக அவர் ஈடுபட்டிருந்தார். பொது ஸ்தாபனம் நடத்தும் இவ்விழாவில் அவரின் அரசியல் பற்றி பேசுவது பொருத்தமாகாது. அவரின் உருவப்படத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்று நான் திரை நீக்கம் செய்ததையிட்டு மிகவும் பெருமைப்படுகின்றேன், மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் எனது தந்தையாரின் உருவப்படத்திற்கருகில் அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் தர்மராசா சொல்வது போல ஏதோ எங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியின் துணை என்று எண்ணுகின்றேன். யாழ்ப்பாணத்தில் சில கட்சிக்காரரும் சட்டத்துறையில் உள்ளோரும் "எஸ். ஆரும் என். ரியும்" என்று அடிக்கடி குறிப்பிடுவதை இது பிரதிபலிக்கின்றது. ஏதோ அவர்கள் இருவருக்குமிடையிலிருந்த ஒரு இணைப்பாகவும் இருக்கலாம் என கருத முடியும் எனக் கூறிக்கொண்டு எனது பேச்சை முடிக்கின்றேன். வணக்கம்.

**அதிபர் பொ. கேதாரநாதன் பற்றிய நினைவுரை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய உசாத்துணை நூலகப் பிரிவு இன்று திறந்து வைக்கப்படுகின்றது அந்த நிகழ்வுக்கு தலைமை தாங்குகின்ற பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களே, இந்த நிகழ்விற்கு பல கௌரவமான முறையிலே வந்து கலந்து சிறப்பம்சங்களைச் செய்த செல்வி. சாந்தா அவர்களே, திரு. கனக்-ஈஸ்வரன் அவர்களே, பேராசிரியர். சந்திரசேகரன் அவர்களே, திரு. சண்முகலிங்கம் அவர்களே, திரு. க. மு. தர்மராசா அவர்களே, மேடையில் வீற்றிருக்கின்ற ஏனைய பெரியோர்களே இங்கு வருகை தந்திருக்கும் அன்பர்களே, முக்கியமாக சட்டத்தரணிகளே, இங்கே வருகைதந்துள்ள வேலணையைச் சார்ந்த மற்றும் வேலணை மத்திய கல்லூரியில் பயின்ற அன்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து இந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்ற உந்துதலால் நேற்று இங்கு வந்து சேர்ந்தேன். இங்கே இரண்டு அம்சங்களை அவதானித்தேன். ஒன்று உசாத்துணை நூல்கள் போன்றவற்றை ஒரு நண்பர் தனது நன்றிக்கடனாக வழங்கியிருக்கின்றார். அதை உண்மையாகவே ஒரு பெரும் கல்விப் பணியாக நாங்கள் மதிக்க வேண்டும். நியாயவாதி திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் பெயராலும் திரு. என். ரி. சிவஞானம் அவர்கள் பெயராலும், திரு. க. மு. தர்மராசா அவர்கள் நிறைந்த மனத்துடனும் அவர்களை நன்றியோடு நினைவுகூரும் முகமாகவும் பெரும் பணம் செலவில் பல்வேறு சட்டநூல்களை வழங்கியிருக்கின்றார். அதேபோன்றே வேலணை மத்திய கல்லூரியிலே அதிபராக இருந்து பல அரிய சேவைகளைச் செய்த திரு. பொ. கேதாரநாதன் அவர்களின் நினைவாக அவர்களது குடும்பத்தினரும் பல்வேறு வகையான நூல்களை அன்பளிப்பு செய்திருக்கின்றார்கள். புத்தகங்களின் பெறுமதி ஏறத்தாழ மூன்று லட்சம் ரூபாய் என்று அறிகின்றேன். திரு. க. மு. தர்மராசா அவர்கள் இந்தக் கல்விப்பணியை ஒரு தனிமனிதனாக நின்று நன்றிகடனாக ஒரு புதுமையான முறையிலே நிறைவேற்றியுள்ளார். இவ்வாறு நூல்களை வழங்கி அத்தர்மத்தை நன்றிக்கடனாக செலுத்துவது என்பது மிக முக்கியமான அம்சம், புதுமையான அம்சம் யாவரும் பின்பற்ற வேண்டிய விடயம். இதற்காக அவரை பாராட்டுகின்றேன். அவர்தான் என்னையும் இங்கு அழைத்தார் அதற்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஏறத்தாழ இன்று அறுபத்தைந்து வயதை எய்துகிறது. மனித வாழ்வில் அறுபது வயதுடன் வாழ்க்கையின் முக்கிய பருவம் முடிவடைகின்றது. எனினும் அறுபத்தைந்து வயதில் இச்சங்கம் புதுப்பொலிவொன்றினைக் காண்கின்றது. அது தனது நூலகத்தை விரிவாக்கியுள்ளது. சட்டத்துறையுள்ளிட்ட உசாத்துணைப் பிரிவுகளை ஆக்கியுள்ளது. இங்கே கிட்டத்தட்ட 45,000 நூல்கள் இருப்பதாக அறிகின்றேன். நாளுக்கு நாள் மேம்பட்டுவரும் இந்த நூல் நிலையத்தில் மேலும் ஒரு வெற்றியாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்டபீட விரிவுரைகளை இங்கு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1974ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் ஆரம்பித்த காலம் தொட்டு சட்டத்துறையை அங்கு நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வந்தபோதிலும் கடந்த ஆண்டு தான் அது எமக்கு சாத்தியமாயிற்று. இருந்தாலும் அந்த சட்ட பீடத்தை அங்கு வைத்து நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. ஏனென்றால் தகுதியான ஆசிரியர்கள் அங்கு இல்லை. சட்டத்தரணிகள் எல்லோரும் கொழும்பை நாடி வந்துவிட்டார்கள். யாழ்ப்பாண மண்ணில் சைவமும் தமிழும் வளர்ந்ததைப் போல சட்டத்துக்கும் ஒரு பாரம்பரியம் உண்டு. விரிவுரையாளர்களுக்கான தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டபீடத்தின் ஒரிரு வருடங்களை கொழும்புத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் கடந்த மாதம் 3ஆந் திகதி முதல் நடத்திவருகின்றோம். மாணவர்கள் இங்கே சட்டத்தை பயிலுகின்ற வசதி செய்து கொடுக்கின்ற அதேவேளை அவர்களுக்கு உசாத்துணை நூலகமாக சட்ட நூல்கள் பல தேவைப்பட்டன. அதிஷ்டவசமாக அச்சட்ட நூல்களை தர்மராசா அவர்கள் இப்போது வழங்கியிருப்பது உண்மையில் கடவுள் சித்தமாக நிகழ்ந்தது என்று சொல்லலாம். அப்பணி மனநிறைவைத் தருவதோடு பேருதவியாகவும் அமைந்துள்ளது. இன்று தமிழர்கள் எங்கெல்லாம் பரந்திருக்கிறார்கள். வெளிநாடுகளில் ஆறு இலட்சம் மக்கள் வாழுகிறார்கள். கனடாவில் ஐம்பத்தைந்து வீதமானவர்கள் இருக்கிறார்கள் இந்த ஆறு இலட்சத்திலே இந்த நாடுகளில் எல்லாம் தமிழர்கள் உயிர்வாழ வேண்டுமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கல்வியில் மிக முக்கியமான ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் இன்று உலகம் கல்வி உலகமாக அறிவு உலகமாக மாறிவருகின்றது. பல்கலைக்கழகங்கள் அறிவை உருவாக்கும் செயலைச் செய்கின்றன. அறிவை வளர்ப்பதில் நூலகங்கள் பெரும் பங்காற்றுகின்றன. பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வு கூடங்களில் விஞ்ஞானிகள் பற்பல கண்டுபிடிப்புக்களைச் செய்து அங்கே அறிவை உருவாக்குகிறார்கள். அதனை ஆசிரியர்கள் கற்றுக் கொள்கிறார்கள் அங்கே கற்பித்தல் செயற்பாடு நடக்கிறது. அதன்பின்னர் மாணவர்கள் கல்வியறிவை பரவலாக்குகின்றார்கள். இவ்வாறு ஒரு சுழற்சிமுறையாகத் தான் அறிவுப் பரம்பல் இடம்பெறுகிறது. இலங்கையிலே மொத்த மாணவர்களின் தொகையில் கிட்டத்தட்ட மூன்று வீதமானவர்கள் தான் பல்கலைக்கழகம் செல்கின்றனர். வெளிநாடுகளிலே இந்த தொகை முப்பது வீதமாக இருக்கின்றது. அந்தளவுக்கு நாமும் முன்னேறாவிடின் பெரிய அபிவிருத்தியை எம்மால் எய்த முடியாது. அந்தவகையில் நூல்நிலையங்களை உருவாக்குதல் உசாத்துணை நூல்களை வழங்குதல் போன்ற இவ்வாறான செயல்கள் மிகவும் போற்றுதற்குரியன. பாரதி நூறுவருடங்களுக்கு முன்னர் பாடிய வரிகள் நினைவுக்கு வருகின்றன. அன்ன சத்திரங்கள் ஆயிரம் வைத்தல் ....... இவற்றையெல்லாம்விட ஏழைக்கு எழுத்தறிவித்தல் மட்டுமே அதிசிறந்த புண்ணியம் என்ற கருத்தில் அவர் பாடியுள்ளார். எங்கு சென்றாலும் அறிவுச் செல்வத்தை தேட நாம் முயல வேண்டும். தமிழ் இலக்கியங்கள் சொல்வதைப் பார்த்தால் எங்கே வறுமையிருக்கிறதோ அங்கே கல்வியிருக்கிறது. ஆனால் இன்று நிலைமைமாறி கல்வியுடன் தான் செல்வம் இருக்கிறது. எவருக்கு கல்வி கூடுதலாக இருக்கின்றதோ அவர் செல்வந்தராக இருக்கின்றார். பில்கேட்ஸ் என்பவரைப்பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் முதலாவது உலகப் பணக்காரராக சென்ற வாரம்வரை இருந்தார். இப்போது அவர் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். அவர் சொப்ட் வெயார் இன்ஜினியரிங் அதாவது கணினித் துறையிலே ஈடுபட்டதன் காரணமாக அந்த அறிவை பயன்படுத்தி மென்பொருள் கணணித்துறையில் பிரகாசித்தார். அதுபோலவே தற்போதைய உலகச் செல்வந்தரான பப்பெட் என்பவர் ஒரு பொருளியல் விற்பன்னர் ஆவார். கொக்ககோலா போன்ற கொம்பனிகளை வாங்கி உலகில் பெரிய பணக்காரனாக மாறினார். பார்க்கப் போனால் கல்வியுடன் செல்வம் சேர்ந்திருக்கிறது. எனவே ஒட்டுமொத்தமாக கல்விச் செல்வத்தை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்தவகையில் இன்று இங்கு இடம்பெற்ற நிகழ்ச்சியானது கல்வியை வளர்ப்பதற்கான ஓர் உன்னதமான பணியாகும். அதை நாங்கள் போற்ற வேண்டும் தட்டிக்கொடுக்க வேண்டும். அதேபோல் இதன் ஒரு அம்சமாக அமரர் திரு. பொ. கேதாரநாதன் அவர்கள் நினைவாக அவர்கள் உறவினர்கள் பல நூல்களை அன்பளிப்பு செய்திருக்கிறார்கள். அவரின் நினைவாக அவரது திரு உருவப்படமும் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிகழ்ச்சி மூலமாக கேதாரநாதனை நாம் ஏன் நினைவு கூருகின்றோம். அவரை உறவினர்களும் அவரது குடும்பத்தினர்களும் மட்டுமே நினைவுகூருகின்றனர் என்பதைவிட, வேலணையில் வாழ் மக்கள் அனைவரும் அவரை நினைவு கூருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது சேவை அவரது வாழ்க்கை வரலாற்றை நாம் பார்க்கும் போது அவர் எல்லோராலும் நினைவுகூறப்பட வேண்டியவர் மாத்திரமல்ல அவர் போற்றப்பட வேண்டிய ஒருவராக விளங்குவதை அவதானிக்கலாம். எனவே ஒரு சில நிமிடங்களிலே அவரது சில வாழ்க்கை குறிப்புக்களை நான் சொல்ல விரும்புகிறேன். வேலணைக் கிராமம் பொருளாதாரத்திலே, சைவ சமயப் பண்பாட்டிலே சிறந்த கிராமமாக விளங்கியது. தமிழாராச்சி மாநாட்டின் ஆரம்பகர்த்தாவும் பன்மொழிப்புலவருமாகிய வண. தனிநாயக அடிகளார் அவதரித்த தீவுப்பகுதியைச் சார்ந்த வேலணைக் கிராமம், க. பொ. இரத்தினம், வித்துவான் வேந்தனார், பண்டிதர் பொன்னுத்துரை, கேதாரநாதன் போன்றோரை ஈந்த கிராமமாகும். எல்லாக்கிராமத்திலும் நீங்கள் பார்த்ததைப் போல ஒரு வெள்ளை வேட்டிக் கலாச்சாரத்தைக் கொண்ட வெள்ளையையே உடுத்த ஒரு ஆசிரியர் குழாம் ஒன்று உருவாகி கல்விச்செல்வத்தை கிராமங்களிலே ஊட்டினார்கள். அதுதான் வித்தாகவும் அடிப்படையாகவும் எமக்கு உதவுகிறது. அந்த வெள்ளை வேட்டி கலாச்சாரத்திலே வந்த ஆசிரியர் பரம்பரையைச் சேர்ந்தவரே கேதாரநாதன் ஆவார். கேதாரநாதன் அவர்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே இரசாயனத்துறையில் பயின்று அதிலே சிறப்புப் பட்டதாரியாகி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே ஒரு சில காலம் படிப்பித்த பின்னர் வேலணையிலே கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக மத்திய கல்லூரியிலே இரசாயனவியலைக் கற்பித்தார். 27ம் 28ம் வயதிலே அவர் ஆசிரியராக வந்துவிட்டார். அப்போது வி. தம்பு என்ற பெருமைமிக்க அதிபர் அக்கல்லூரியை மிகவும் பிரபல்யம்பெறும் வகையில் நிர்வகித்து வந்தார். அவர் கருகம்பானையைச் சேர்ந்தவர். கருகம்பானையில் போய்க் கேட்டால் அவரைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனால் வேலணையிலே அவரைத் தெரியாதவர்கள் இல்லை. ஏனென்றால் வேலணையில் கல்வியை உருவாக்குவதற்கு பெரும் பங்கு ஆற்றியவர். திரு. வி. தம்பு அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. ஆனால் வேலணை மத்திய கல்லூரியின் அத்தனை மாணவ மாணவிகளையும் தனது சொந்தக் குழந்தைகளாக மதித்து சேவையாற்றிய பெருமகன் ஆவார். அப்போதைய ஆசிரியர் குழாத்தில் திரு. சிவஞானம், திரு. பொன்னுத்துரை, வித்துவான் சிவப்பிரகாசம், வித்துவான் ஆறுப்பிள்ளை, திரு. அலெக்ஸ்சாண்டர் போன்ற உயரிய ஆசான்கள் அடங்குவர். மத்திய கல்லூரியில் 20க்கு மேற்பட்ட பட்டதாரிகள் படிப்பித்தார்கள். அதிலே கேதாரநாதன், சண்முகநாதன், என்போரையும் குறிப்பிடலாம். பல மாணவர்கள் அங்கே உருவாகினார்கள். நாசா என்கின்ற அமெரிக்க ஆய்வு நிலையத்தில் கூட வேலணையைச் சேர்ந்த ஒருவர் பணியாற்றுகின்றார். கேதாரநாதன் தீவுப்பகுதியில் தொடர்ந்து வசித்து வந்ததன் காரணம் அங்குள்ள மாணவர்களுக்கு கற்பிப்பதே. தனது பிள்ளைகள் ஏழு பேரிலே நாலு பேரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சிக்கு போக வேண்டிய நிலையிருந்தது அப்போது அவர் இங்கிருக்கவில்லை அவர் அவுஸ்ரேலியா சென்றார். உண்மையிலே இந்த இடப்பெயர்ச்சியின் போது அவருக்கு ஏற்பட்ட துன்பகரமான நிகழ்வு தான் அவரது ஆயுலைக்குறைத்தது என்று சொல்வார்கள். அந்தவகையில் அவர் உண்மையில் அவரது 63வது வயதிலே அமரர் ஆனார். அது மட்டும் அவர் கல்விப் பணியை ஆற்றியவர் என அப்படியொரு அருமையானதொரு நினைவு கூறத்தக்கதொரு அதிபருக்கு நினைவாக திரு. க. மு. தர்மராசா நினைவு செலுத்தியிருக்கிறார். திரு. க. மு. தர்மராசா அவர்களை இதற்காக நாங்கள் பாராட்டுகின்றோம். முக்கியமாக வேலணை வாழ் மக்கள் சார்பாக அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த திரு. தர்மராசா அவர்களுக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கும் நன்றிகளைக் கூறிக்கொண்டு பொறுமையாக இதை செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன் வணக்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்த நொத்தாரிசு, சட்டஉதவியாளர்
**திரு.க.மு.தர்மராசா அவர்கள் ஆற்றிய நன்றிக்கடன் செலுத்தும் உரை**

இந்த விழாவுக்கு தலைமை தாங்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களே, கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரன் அவர்களே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் சிவச்சந்திரன் அவர்களே, சட்ட வல்லுனர்களே, "நன்றிக்கடன்" என்ற தலைப்பில் பேருரை ஆற்றுதற்கு வருகை தந்திருக்கும் வித்துவாட்டி வசந்தா வைத்தியநாதன் அம்மா அவர்களே, மேடையில் அமர்ந்திருக்கும் ஏனைய பெரியோர்களே சபையோர்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம். முதற்கண் எஸ்.ஆர்.ஐயா அடிக்கடி கூறும் ஒரு கூற்று எனக்கு ஞாபகம் வருகின்றது. சபாரத்தினம் மாஸ்ர் மூலம் அறிந்தது என்னவெனில் எஸ்.ஆர்.ஐயா சொல்லுவார் ஐந்து நிமிடங்கள் உரையாற்றினாலும் கேட்போரை சிரிக்க வைக்க வேண்டும், அல்லாவிடின் அப்பேச்சிலே அருமையில்லை, என்று. எஸ்.ஆர்.ஐயா அவர்கள் ஹாஷ்யமாகப் பேசுவதில் கைதேர்ந்தவர். எஸ்.ஆர்.ஐயா அவர்களின் ஹாஷ்யம் நிறைந்த பேச்சைப் பற்றி அவரது நினைவு மலரில் சபாரத்தினம் மாஸ்ரர் எழுதிய தனது கட்டுரையில், சிரிப்பூட்டுதல் கேட்போருக்கு ஊசி மூலம் உசார் ஏற்றுவது என எழுதியிருந்தார்.

இவ்விழாவுக்கான நிகழ்ச்சி நிரலின் வரைபுக்கு தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுவினரே இறுதி வடிவம் கொடுத்தனர். அந்நிகழ்ச்சி நிரலின் முதல் இரு பந்திகளிலும் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு, எழுத்துமூல ஆதாரங்களை தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அவை அங்கீகரிக்கப்பட்டன. பொதுத் தாபனம் எதையும் துர்ப்பிரயோகம் செய்யலாகாது. இந்த நோக்கோடு தான் இன்று நினைவு கூரப்பட்ட நியாயவாதி எஸ்.ஆர்.கனகநாயகம், சட்டத்தரணி என்.ரி.சிவஞானம் மற்றும் பாடசாலை அதிபர் பொ.கேதாரநாதன் ஆகியோரது வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கையடக்க நூல்கள் சபையோர் மத்தியிலே இன்று விநியோகிக்கப்படுகின்றன. முதற்கண் எஸ்.ஆர்.ஐயாவின் ஹாஷ்யமான துனுக்குகளுள் ஒன்றை கூறவிரும்புகின்றேன். பாண் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றில் வியாபாரம் செய்யும் ஒரு யாழ்ப்பாண வர்த்தகருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இடைக்கால தடைக்கட்டளை கோரவிருந்தோம். ஆனால், அப்போதைய நீதிபதியோ இடைக்கால தடைக்கட்டளையை வழங்க மாட்டார் என்றும் அந்த முயற்சியை கைவிடுவதுதான் நல்லது என்றும் எஸ்.ஆர்.ஐயா சொன்னார். எனினும் எனது வற்புறுத்தலின் பெயரில் அந்த வழக்கை தாக்கல் செய்ய முன்வந்த எஸ்.ஆர்.ஐயா அவர்கள் அவ்வழக்கை ஆதரித்துப் பேசினார். நீதிபதி அறிவித்தல் அனுப்பும்படி கட்டளையிட்டார் ஆனால் தடைக்கட்டளை பிறப்பிக்கவில்லை. சற்று நேரத்தின் பின்னர், எஸ்.ஆர்.ஐயா நீதிபதிக்குச் சுடத்தக்கதாக கூறினார் "பாணை மட்டும் சாப்பிட்டால் பரவாயில்லை, பாணோடு ஐஸ்கிறீமையும் சேர்த்துச் சாப்பிட்டால் மூளை மந்தமடையும் தானே" என விகடமாக நீதிபதிக்கு சுடத்தக்கதாகக் குறிப்பிட்டார். இவ்வாறு எஸ்.ஆர்.ஐயாவின் ஹாஷ்யத் துனுக்குகளைப் பற்றி பல மணிநேரம் பேசினாலும் அடங்காது.

திருவாளர் என்.ரி.சிவஞானம் அவரைப்பற்றி கூறுவதானால் அவர் சட்டத்தொழிலில் ஒரு தனித்தியங்கும் ஆற்றல் பெற்றவர் எனலாம். பெரும்பான்மையான வழக்குகளில் நியாயவாதிகளை ஏற்படுத்தாமல் தானே தனித்து வாதாடும் ஆற்றல் மிக்கவர். பல அறிஞர்களுடைய உரைகளை நீங்கள் இதுவரை செவிமடுத்தீர்கள். சட்டத்துறை சார்ந்த சில விடயங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்கும் என நினைக்கின்றேன். என்.ரி.சிவஞானம் அவர்கள் ஊர்காவற்றுரை நீதிமன்றிலே தாக்கல் செய்து தானே வாதாடிய ஈட்டுறுதி சம்பந்தப்பட்ட கிறிமினல் வழக்கை ஒன்றைக் குறிப்பிடலாம். பணவசதி குறைந்த ஒரு ஏழை விவசாயி ஒருவருக்கு 5000 ரூபாவுக்கு ஈட்டுக்குக் கொடுத்தார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கடன்பட்டவர் தான் ஈடுவைத்த காணியிலுள்ள மண்ணை வெட்டி ஏற்றிச் சென்றார். இதனையறிந்து கடன்கொடுத்தவர் எங்களிடம் ஓடிவந்து விசயத்தைச் சொன்னார். வட்டியும் முதலுமாக 10000 ரூபா ஆகிவிட்டதே இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார். நான் உடனே என்.ரி.ஐயாவுடன் கலந்தாலோசித்தேன். கட்சிக்காரரிடம் விபரத்தைக் கேட்டபின் தண்டனைச் சட்டக்கோவையின் பக்கங்களை புரட்டினார் கிறிமினல் பிராதொன்றை தானே தட்டெச்சில் தயார் செய்தார். மறுநாள் மேற்குறித்த வழக்கை ஊர்காவற்றுரை நீதிமன்றத்தில் கடன்பட்டவருக்கு எதிராக பணம் கொடுத்தவர் சார்பாக அவர்மூலம் கிறிமினல் வழக்குத் தாக்கல் செய்தார். பிற்காலத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதியாய் இருந்த பெருமதிப்புக்குரிய ஜமீல் அவர்களே அப்போது ஊர்காவற்றுரை நீதவானாக இருந்தார். அவர் நீதி தவறாதவர். அவர் கடவுளுக்கு ஒப்பானவர் என்பது எனது கருத்து. கனம் ஜமீல் அவர்கள் முன்னிலையில் தான், நானும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டேன் என்பதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். குறித்த ஈட்டுறுதியில் விசேடமாக அடங்கியிருந்த ஒரு வாசகம் நீதவானுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. இதைப்பற்றி இன்றுள்ள சட்டநிபுணர்களுள் எத்தனைபேர் அறிவரோ நானறியேன். குறித்த ஈட்டுறுதியில் எழுதப்பட்ட வாசகம் "இக்கடன் தீர்க்கப்படும் வரையும் எவ்வகையிலும் இக்காணியைச் சேதமுறாவண்ணம் நான் பாதுகாத்து தருவேன் என்றும் இவ்வுறுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பவர் தாம் விரும்பும் போது அப்பாதுகாப்பை மேற்பார்வை செய்து கொள்ளலாம் என்றும் ........" என்பதாகும். இதை ஏற்றுக் கொண்ட கனம் நீதிபதி ஜமீல் அவர்கள் கடன்பட்டவரும் காணிச் சொந்தக்காரருமாகிய எதிரிக்கு எதிராக Bench Warrant எனப்படும் (நீதாசன வலிந்து பற்றாணை) ஒன்றினை அக்கணமே பிறப்பித்தார். இவ்வாறான காப்பு வாசகங்களை தற்போதைய நொத்தாரிசுமார் எழுதும் ஈட்டுறுதிகளில் காண்பது அரிது. நேரம் நெருங்குவதாலும் வேறுபல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாலும் எனது நன்றிக்கடன் செலுத்தும் உரையை சற்றுச் சுருக்க வேண்டியுள்ளது. அதற்கு முன்னர் எஸ்.ஆர். ஐயா அவர்களின் மறக்க முடியாத சேவையைப் பற்றி மேலும் குறிப்பிட விரும்புகின்றேன். முன்பு ஒரு முறை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் காணியை பெற்றுக் கொடுப்பதில் இராணி அப்புக்காத்து ரங்கநாதன் அவர்களும் அவருக்கு அனுசரணையாக திருவாளர். கனக்ஈஸ்வரன் அவர்களும் ஆற்றிய சேவைக்காக பின்னர் அவர்களை தமிழ்ச் சங்கம் பாராட்டி கௌரவித்தது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அதேவேளை எஸ்.ஆர். ஐயா அவர்களோ யாழ்ப்பாணத்திலே எத்தனையோ தர்மச் சொத்துக்கள், நம்பிக்கைச் சொத்துக்கள், கோயிற் சொத்துக்கள் போன்றவற்றை பாதுகாத்து உதவினார் என்பதை என்னைப் போன்ற ஒருசிலரைவிட பலர் அறியார். அவருக்கு ஒரு நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும் என்று அவரது நினைவு மலரில் சபாரட்ணம் மாஸ்ரர் அவர்கள் குறிப்பிட்டதை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன். இன்று மூன்று பெரியார்களது உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டமை தகுதியானதா என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அதற்குரிய சான்றுகள், ஆதாரங்கள் அவர்களைப் பற்றி இன்று வெளியிட்டு விநியோகிக்கப்பட்டுள்ள கைநூல்களில் அடங்கியுள்ளன. இன்னொரு வகையில் சொல்வதானால் இம்மூவருக்கும் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே நினைவாலயங்கள் உள்ளன எனலாம். எஸ்.ஆர். ஐயா அவர்களுக்கு சைவ வித்தியா விருத்திச் சங்கம் (Hindu Board Orphanage) ஒரு நினைவாலயமாக மிளிர்கின்றது. என்.ரி. ஐயா அவர்களுக்கு என்.டி.ஏ.பி.சி.யு (Northen District Agricultural Producers' Co-operative Union) என்ற ஸ்தாபனமும் பொ. கேதாரநாதன் அவர்களுக்கு வேலணை மத்திய கல்லூரியும் நினைவுச் சின்னங்களாக திகழ்கின்றன. இவர்களின் சேவை பற்றி கையடக்க நூல்களிலும் பத்திரிகைகள் வாயிலாகவும் விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் அவர்களைப் பற்றி அதிக விபரங்களை எனது பேச்சில் குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்கின்றேன். பிரதான வீதியை அண்மித்த முதலாம் குறுக்குத் தெரு 61ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள எஸ்.ஆர். ஐயாவுனுடைய இல்லத்தைப் பற்றி திரு. என். சபாரத்தினம் மாஸ்ரர் அவர்கள் எஸ்.ஆர். ஐயாவின் நினைவுமலரில் விசேடமாக குறிப்பிட்டுள்ளார். அந்த இல்லத்தைப் பற்றி சிறிதளவிலேனும் குறிப்பிடாமல் விடமுடியாது. இல்லம், இல்லாள் என்பவற்றின் முக்கியத்துவத்தை வேலணையூர் ஆசிரியமணி பண்டிதர் மருதையனார் அவர்களிடமிருந்து நான் கற்றேன். இதை 1ஆம் குறுக்குத் தெரு 61ஆம் இலக்க இல்லத்தில் நான் நிதர்சனமாகக் கண்டேன். எஸ்.ஆர். அம்மாவின் நினைவு மலரில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

> "40 ஆண்டுகளுக்குமேல் சட்டத்துறையிலே பல சட்டத்தரணிகளின்
> இல்லங்களுக்கு, அலுவலகங்களுக்கு சென்றிருக்கிறேன்.
> ஆனால் எஸ்.ஆர். ஐயாவின் வீட்டிற்கு கட்சிக்காரர்கள்
> சென்றால் எஸ்.ஆர். ஐயா இல்லாவிட்டாலும், சில சமயம்
> இருந்தாலும், கட்சிக்காரர்கள் எவ்வாறு அம்மாவால்
> உபசரிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்கள் என்பதை கூறி
> வைக்க விரும்புகின்றேன்.
>
> கட்சிக்காரர்கள், சட்டத்தரணிகளின் வீட்டுக்கு சென்றால்
> தாகம் ஏற்படும் போது தண்ணீர் கேட்பது வழக்கமல்ல.
> எஸ். ஆர் அம்மா கட்சிக்காரர்களின் குறிப்பறிந்து செம்பில்,
> போத்தலில், கிளாசில் அல்லது பேணியில் கட்சிக்காரர்களின்
> வேண்டுகோளுக்கிணங்க தேவைக்கேற்றவாறு தண்ணீர்
> கொண்டு வந்து அன்புடன் கொடுத்து தாகத்தை தீர்த்தவர்.
> அதுமட்டுமல்ல கட்சிக்காரர்கள் எஸ்.ஆர். ஐயா இல்லாத
> சமயங்களில் வந்தால் அவர்களின் குறிப்பையறிந்து மறுமொழி
> கூறி அனுப்பிவைப்பார். அம்மாவின் வார்த்தைகள்
> கட்சிக்காரர்களை அந்த அளவுக்கு சந்தோஷப்
> படுத்துவன என்பது குறிப்பிடத்தக்கது."

அடுத்ததாக திரு. கேதாரநாதன் அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை கூறவிரும்புகின்றேன். அவரின் மாமனார் வேலணையூர் பண்டிதமணி மருதையனார் அவர்கள் மூலமே கேதாரநாதன் அவர்களோடு பழக நேர்ந்தது. எனது திருமண வைபவத்திற்கு மருதையனார் சார்பிலும் தனது சார்பிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. கேதாரநாதன் குடும்பத்துடன் அவர்கள் வருகை தந்திருந்தார். நான் சில சமயங்களில் நூதனமாக இயங்குவதுண்டு. எனது திருமண வைபவத்திற்கு எவருக்குமே நான் அழைப்பிதழ் அனுப்பவில்லை. வந்த விருந்தினர்கள் அனைவரும் கேள்வியுற்று வந்தவர்களே, அன்று வந்திருந்த திரு. கேதாரநாதன் அவர்களின் கார் அன்று தீப்பற்றி எரிந்ததை என்னால் மறக்க முடியாது. எஸ். ஆர் ஐயாவுனுடைய ஞாபகார்த்த நிகழ்ச்சியொன்றின் போது நன்றியுரை கூறும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டிருந்தது. முன்னாள் அரசாங்க அதிபர் சிவஞானம் அவர்கள் தர்மராஜாவுக்கு நன்றியுரை கூறப்போவது யார் என்று கேட்டார். இத்தனைக்கு எல்லாம் பின்னணியிலிருந்து செயற்பட்ட தமிழ்ச் சங்கத்தினருக்கு நன்றியுரை கூறுவது யார் என்ற கேள்வி என் மனத்தில் எழுகின்றது. அந்தக் கடமையையும் நானே நிறைவேற்ற வேண்டியுள்ளது. தமிழ்ச் சங்கத்தைப் பற்றிச் சொல்வதானால் பலவற்றைக் குறிப்பிடலாம். நான் அறிந்த மட்டில் சட்ட உசாத்துணைப் பிரிவொன்று அரச சார்பற்ற ஒரு பொதுநிறுவனத்தில் அமைந்துள்ளதென்றால் அது நான் அறிந்தவரை கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் மட்டுமே இருக்கின்றது என்று கூறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் (கரைகோசம்). இந்த ஏற்பாடு அத்தியாவசியமானதும் போற்றப்படத்தக்கதுமானது. உசாத்துணைக்காக சட்டப்பிரசுரங்களை தேடியலையும் மாணவ சமூகத்திற்கு இதுவொரு நற்செய்தி. அரச நிறுவனங்களுக்கு வெளியே சட்ட உசாத்துணை வசதிகள் இல்லை. சட்ட அறிஞர்களிடம் அடிக்கடி போய் அவற்றை பெறுவதும் சிரமம். மாணாக்கர்களுக்கு மட்டுமல்ல வழக்கறிஞர்களுக்கும் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டேயுள்ளன. தம்பிரட்ணம் ஐயா போன்றோரிடம், என்னைப் பொறுத்தமட்டில், உசாத்துணை வசதியிருந்தது. அவரும் மறைந்துவிட்டார். இன்றைய சூழ்நிலையில் தமிழ்ச் சங்க நூலக சட்ட உசாத்துணைப் பிரிவை ஒரு பொக்கிசமாகவே கருதவேண்டும். ஆதலால் இதற்காக தமிழ்ச் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், நூலகச் செயலாளர், ஏனைய ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் சபையோர்கள் அனைவரும் இவர்களை நிச்சயம் பாராட்டுவார்கள் என்று நம்புகின்றேன். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இருவரைப் பற்றி என்னால் கூறாமல் இருக்க முடியாது. அதில் ஒருவர் நூலகச் செயலாளர் திரு. சண்முகலிங்கம். கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு சிறந்த ஒரு நூலகச் செயலாளர் கிடைத்திருக்கிறார் என்று ஒரு முறை பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் சொன்னார். பேராசிரியர் சிவத்தம்பி அவர்களே சண்முகலிங்கம் அவர்கள் பற்றி இப்படிக் குறிப்பிட்டிருக்கும் போது இதற்கு மேல் நான் கூறவேண்டியதில்லை. அடுத்ததாக திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை குறிப்பிட விரும்புகின்றேன். குடியியல் நடைமுறை சட்டக்கோவையை தமிழில் பெயர்க்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உதித்தது. குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையை தமிழில் பெயர்த்து முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு விக்னேஸ்வரன் ஐயா அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரு நிகழ்வின் போது அதனை வெளியிட்டு எஸ். ஆர். ஐயா, என். ரி. ஐயா ஆகிய இருவரின் உருவப்படங்களை அங்கு திரைநீக்கம் செய்யவேண்டும் என்ற ஒரு ஆசை எனக்கிருந்தது. அவ்விழாவை எனது துணைவியாரின் 3ஆம் ஆண்டு நினைவாக நடாத்தவிருந்தேன் நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு நான் எனது யோசனையை மீள்பரிசீலனை செய்துகொண்டிருந்த வேளையில் தான் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் என்னை அணுகி தமிழ்ச் சங்கத்தின் உசாத்துணைப் பிரிவு பற்றிய திட்டத்தை கூறினார். ஏதோ எங்கலெல்லோருக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியின் ஏற்பாடாகவே அந்த விழா இன்றைய விழாவாக அமைந்துள்ளது. உசாத்துணைப் பிரிவுக்காக என்னால் ஆனதை செய்வதற்கும் எஸ். ஆர். ஐயா, என். ரி. ஐயா மற்றும் கேதாரநாதன் ஆகியோருடைய உருவப்படங்களை திரைநீக்கம் செய்வதற்கும் எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புக்காக ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களுக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எனது துணைவியார் சொல்லும் ஒரு குறிப்பு எனக்கு ஞாபகம் வருகுது. "இந்த மனிசன் செத்தவர்களுக்கு மட்டுந்தான் படங்களும் கட்டுரைகளும் வெளியிடுகிது ஆனால் உயிரோடு இருப்பவர்களுக்கு ஒன்றும் செய்கிறதில்லை" என்று சொல்லுவா. ஆதலால் எனது துணைவியாருடைய 3ஆம் ஆண்டு நினைவாக பொதுத்தொண்டில், பொதுத்தாபனத்தில் மிக ஈடுபாட்டுடன் இயங்கிவரும் ஒருவரை கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணம் தான் என் மனதில் உதித்தது. அவ்வாறானோரில் ஒருவரை, அதாவது, திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களையே அவ்வாறு கௌரவிக்க நான் இன்று முடிவுசெய்துள்ளேன். பொதுத் தொண்டில் தன்னை அர்ப்பணித்துள்ள திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை தொடர்பு கொள்வதே சில சமயங்களில் கடினம். தமிழ்ச் சங்க காரியாலயத்தில் தொடர்பு கொண்டால் "அவர் வீடு சென்றுவிட்டார்" என்பார்கள் ஆனால் அவரது நீர்கொழும்பு இல்லத்திற்கு போன் செய்தால் "அவர் இன்னும் வீடு வந்து சேரவில்லை இரவு 9.30 மணிக்குப் பின் போன் பண்ணினால் அவருடன் பேசலாம்" என்று அவரது மனைவியாரோ அல்லது வீட்டில் உள்ள வேறு யாரோ மறுமொழி சொல்லுவார்கள். இரவு 9.30 மணிக்குப் பின்னர் வீடு வரும் ஒருவரோடு அதன்பின்னர் பேசலாம் என்று சொல்லும் பக்குவம் சாதாரணமாக காணக்கூடியதல்ல. இது எவரினதும் மனத்தைத் தொடும் மறுமொழியாகும். பிந்திய இரவு வேளையில் போன் செய்வதிலும் பார்க்க மறுநாள் காலை போன் செய்யலாம் என்று எண்ணி காலை 6.00 மணிக்கு போன் செய்தால் அவர் புறப்பட்டுவிட்டார் என்றே பதில் வரும். அவருடைய வயதென்ன, அவர் எங்கிருந்து வருகிறார், எப்படி வருகின்றார், எத்தனை மணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருந்து புறப்படுகின்றார், எங்கு சாப்பிடுகின்றார், எத்தனை மணிக்கு வீடு போய்ச் சேர்கின்றார் - இவையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டியன. கொழும்புத் தமிழ்ச் சங்க விவகாரங்களில் அவரது பங்களிப்பு மிகப் பெரியது. கூட்ட நிகழ்ச்சிகளில் சில குறிப்புக்கள் தவறுதலாக சொல்லப்படும் சந்தர்ப்பங்களில் பின்னர் அவற்றை திருத்தி சரியான, உண்மையான நிலைமையை தனது நன்றி உரையிலோ அல்லது மற்றையவர்களின் உரை மூலமோ விளக்குவதில் அவர் தவறுவதில்லை. இவ்வாறு ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை எனது உள்ளத்திலே பதிந்த ஒரு பொதுச் சேவையாளராக நான் கருதுகின்றேன். உண்மையிலேயே உருவப்படங்கள் திரைநீக்கம் செய்வதற்காக மாண்புமிகு விக்னேஸ்வரன் ஐயா அவர்களையும், மாண்புமிகு ஆனந்தகுமாரசாமி ஐயா அவர்களையும், மாண்புமிகு ஜமீல் ஐயா அவர்களையும் அழைப்பதாகவே எனது பூர்வாங்க திட்டமாகவிருந்தது. எனினும் அது கைகூடவில்லை இருந்தாலும் தெய்வ சித்தமாகவோ அல்லது ஒரு சக்தியின் ஆணையாகவோ வேறு மூவர் அப்பணியை நிறைவேற்றியுள்ளனர். செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் எஸ். ஆர் ஐயாவினது உருவப்படத்தையும், திரு. கனக்-ஈஸ்வரன் அவர்கள் என். ரி. ஐயா அவர்களின் உருவப்படத்தையும், பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள் திரு. கேதாரநாதனின் உருவப்படத்தையும் திரை நீக்கம் செய்து வைத்துள்ளனர். எனக்கு முன் பேசும் போது ஒரு சிறிய தவறும் நிகழ்ந்தது. எஸ். ஆர். ஐயா அவர்களுடைய உருவப்படத்தை விநாயகமூர்த்தி ஐயா அவர்கள் அல்ல செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்கள் தான் திரைநீக்கம் செய்தார். விநாயகமூர்த்தி அவர்கள் என். ரி. ஐயாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து கௌரவித்தார். சாந்தா அம்மா அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து எஸ். ஆர். ஐயா அவர்களின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைப்பதற்கு எஸ். ஆர். ஐயாவின் ஏற்பாடாகவும் இருக்கலாம். எஸ். ஆர். ஐயாவினுடைய அறிவாற்றலுக்கு சமமாக இல்லாவிடினும், யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவி என்ற கோதாவில் சாந்தா அம்மா அவர்களிடம் எஸ். ஆர். ஐயாவினுடைய கொள்கைப் பிடிப்பும், அந்தத் துடிப்பும் துணிவும் அவவிடம் இருக்கிறதென்பதை பகிரங்கமாக கூறி வைக்க விரும்புகின்றேன். எஸ். ஆர். ஐயா உள்ளிட்ட அப்போதைய மூத்த வழக்கறிஞர்களின் துணிவைப்பற்றி யாரும் அறிவர். ஒரு முறை ஒரு இளம் வழக்கறிஞரை அவமதித்த வெள்ளைக்கார நீதிபதியை மறுநாட் காலை அவரது அலுவலகக் கூடத்தில் சந்தித்த சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள், "நேற்றை சம்பவத்தை நாம் எல்லோரும் மறந்து விடுவோம்" என்று அந்த நீதிபதி கூறும்வரை அன்றைய நீதிமன்ற அலுவல்களை ஆரம்பிக்கவிடாது செயற்பட்டார் என்பதை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன். சட்டத்தரணிகள் சங்க தலைவர்களாக திறம்படச் செயற்பட்ட சேர்வைத்திலிங்கம் துரைசுவாமி, அட்வகேற் முத்துசாமிப்பிள்ளை, ஏ. வி. குலசிங்கம், அட்வகேற் எஸ். ஆர். கனகநாயகம் என்ற வரிசையில் இன்று சாந்தா அம்மா அவர்கள் தலைமைத்துவ ஆற்றல் படைத்தவர் என்றால் மிகையாகாது. ஒரு முறை சட்டத்தரணிகள் எல்லோரும் 9.45 மணிக்கு நீதிமன்றம் ஆரம்பிக்கும் போது சமூகமாய் இருக்க வேண்டும் என்று ஒரு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். முதல் நாள் அவரும் 9.45 மணிக்கு வந்தமர்ந்து விட்டார் ஆனால் சட்டத்தரணிகள் மிகவும் தாமதமாகவே வந்தார்கள். பிந்தி வந்த சட்டத்தரணிகள் பற்றி குறைகூறும் வகையில் சில குறிப்புரைகளை நீதிபதி கூறினார். சில நாட்களின் பின் ஒரு நாள் சட்டத்தரணிகள் எல்லோரும் வழமை போல் 9.45 மணிக்கு வருகை தந்திருந்தனர். ஆனால் அன்று நீதிபதியோ 10.30 மணியளவிலேயே வந்தமர்ந்தார். இதைச் சகித்துக் கொள்ளாத எஸ். ஆர். ஐயா அவர்கள் கோட்டாரையும் சுவர்க்கடிகாரத்தையும் மாறிமாறி உற்றுப் பார்த்த வண்ணம் இருந்தார். இதை அவதானித்த நீதிபதி ஒரு மூத்த வழக்கறிஞர் இவ்வாறு நடந்து கொள்ளலாமா என்று அவரிடம் கேட்ட போது எஸ். ஆர். ஐயா அவர்கள் மூத்த வழக்கறிஞரின் கடமை இதுதான் என்று கூறி, சட்டத்தரணிகள், பிந்தி வந்தபோது குறிப்புரை சொன்ன கோட்டார் அவர்கள் இன்று முக்கால் மணித்தியாலமாக காத்திருந்த சட்டத்தரணிகளுக்கு என்ன கூறவிருக்கிறீர்கள் என்று வினவினார். இந்தச் சம்பவத்தை நான் நேரில் கண்டேன். அப்போதைய நீதிபதிகளின் பெருந்தன்மையையும் மறக்க முடியாது. பீரங்கித் தாக்குதல் நடந்து கொண்டிருப்பதால் எஸ். ஆர். ஐயாவை வீடுவரை கூட்டிச் சென்றுவிட்டு வரும்படி தனது ஏவலாலை அதே நீதிபதி அதேதினம் நண்பகல் பணித்தார் என்றால் இதிலிருந்து அவரின் பெருந்தன்மை மாத்திரமல்ல அன்றைய நீதிபதிகள் - சட்டத்தரணிகள் நல்லுறவு எத்தகையதாய் இருந்தது என்பதும் புலப்படுகின்றது.

அடுத்ததாக திருவாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை கௌரவிப்பதற்கு இந்த மேடையில் அமர்ந்திருப்பவர்களில் எல்லா வகையிலும் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களே பொருத்தமானவர் என்பது எனது எண்ணம், அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள் என நான் நம்புகின்றேன். ஆகையினால் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் கௌரவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை - பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து தங்கப்பவுனும் கொடுக்கின்றார். அதற்குரிய புகைப்படங்கள் நாலாம் அத்தியாயத்தில் வெளியிடப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவ்விழாவிற்கு உதவிபுரிந்தவர்களுக்கு நன்றி கூறவேண்டியது எனது கடமை, ஆகவே இவ்விழாவிற்கு எனக்கு பக்கபலமாக நின்ற ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபரும் பிரசித்த நொத்தாரிசுமாகிய திருவாளர். சண்முகம் இராமலிங்கம் அவர்களுக்கும், அவருக்கு உதவியாக கடமையாற்றும் கணனி தட்டச்சாளர் செல்வி நீதா சதாசிவம் அவர்களுக்கும், ஓய்வுநிலைபெற்ற நீதிமன்ற பதிவாளரும் பிரசித்த நொத்தாரிசுமாகிய திருவாளர். குமாரவேலு குலசிங்கம் அவர்களுக்கும் அவரின் அலுவலகத்தில் கடமையாற்றும் கனணி தட்டச்சாளர்கள் இருவருக்கும் மேலும் இன்று உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்ட மூவர்களின் சேவைபற்றியும் இவ்விழாவைப் பற்றியும் விளம்பரம் செய்த வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, டெய்லி மிரர், யாழ்ப்பாணத்தில் வெளியான உதயன் ஆகிய ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் கொழும்புத் தமிழ்ச்சங்க நிர்வாக உத்தியோகத்தர் சிவா மற்றும் உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் அனைவருக்கும், கையடக்கநூல் அச்சிட்ட அச்சக நிர்வாகி திருவாளர். சிவராஜா அவர்களுக்கும், இவ்விழாவில் படம் பிடித்துக் கொண்டிருக்கும் எஸ். எம். சுரேந்திரனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலகச் செயலாளர் **க. சண்முகலிங்கம்**
ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பட்டது
**கொழும்புத் தமிழ் சங்க நூலகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள்**

தலைவர் அவர்களே, உரையாற்ற வந்திருக்கும் பெரியோர்களே, க. மு. தர்மராசா அவர்களே, சபையோர்களே! நூலக வளர்ச்சித் திட்டம் பற்றி இந்தச் சிறப்பான விழாவிலே பேசும் வண்ணம் நான் கேட்கப்பட்டுள்ளேன். எனக்குத் தரப்பட்ட தலைப்பை நூலகம் ஏன், எதற்காக? என்றவாறு சற்று மாற்றியுள்ளேன். ஆட்சிக்குழுவின், குறிப்பாக கந்தசாமி அவர்களின், வேண்டுகோளுக்கு இணங்க நூலக வளர்ச்சித் திட்டமொன்றை நான்கு பக்கத்தில் தயாரித்து ஏற்கனவே கொடுத்துள்ளேன். அதன் நகலொன்று தற்செயலாக திரு. கந்தசாமி மூலம் திரு. தர்மராசா அவர்களின் கைக்கெட்டிவிட்டது. அதன்விளைவே இன்றைய பெருவிழாவாகும். நூலக வளர்ச்சித் திட்டங்களைப்பற்றி சிந்திப்பதற்கு முன்பாக எமது தற்போதைய உயர்கல்வி நிலையைப் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. உயர் கல்வியைப் பொறுத்தவரையில் அது இன்று பெரும்பாலும் பல்கலைக்கழகங்களுக்கு வெளியே தான் இருக்கின்றது. இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பு எழுபத்தைந்து வீதமான உயர்கல்வி வாய்ப்புக்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளேயிருந்தது இன்று எழுபத்தைந்து வீத உயர்கல்வி பல்கலைக்கழகங்களுக்கு வெளியே இருக்கும் நிலை தோன்றியுள்ளது. இத்தகவல் சிலருக்கு ஆச்சரியத்தையோ அதிர்ச்சியயையோ தந்தாலும் அதுவே இன்றைய யதார்த்த நிலையாகும். அரச உதவிபெறுவனவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான பற்பல நிறுவனங்கள் பல்கலைக்கழகங்களுக்கு வெளியே இயங்குகின்றன. தகவற்றொழிநுட்பம் மற்றும் கணக்கியல், சட்டம், வங்கியியல், கல்வியியல், இரசாயனம், ஆகுசெலவியல், முகாமைத்துவம் போன்ற பல துறைகளிலான உயர்கல்விக் கழகங்கள் பல்கலைக்கழகங்களுக்கு வெளியிலேயே இயங்குகின்றமை கண்கூடு. இரசாயனவியல் நிறுவனம், வணிக நிர்வாக தேசிய நிறுவனம், கொத்தலாவல பாதுகாப்பு கல்வி நிறுவனம், திறந்த பல்கலைக்கழகம் போன்றன இவற்றுட் சிலவாகும். மேலும் பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்டப்படிப்பு வசதிகளும் உள்ளன. இதைவிட பெருந்தொகையான மாணவர்கள் பட்டப்படிப்புக்காக இந்தியா, ஐக்கிய ராச்சியம், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், சீனா, ரஷ்சியா போன்ற நாடுகளுக்கும் செல்கின்றனர். சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தியும் உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியும் பெற்று விட்டாலே போதுமென்றும் எவ்வித போட்டிப் பரீட்சைகளுக்கும் தோற்ற வேண்டிய அவசியம் இல்லையென்றும் இலங்கையில் இருந்தவாறே இலண்டன் பல்கலைக்கழக சட்டத்துறை இளமாணிப்பட்டத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் விளம்பரங்கள் வெளிவருவதை நீங்கள் அறிவீர்கள். ஆண்துதோறும் மூன்று அல்லது நான்கு சிறுபான்மையின மாணாக்கர்களே இன்று சட்டக்கல்லூரிக்கு நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். சட்டத்துறையில் உயர்கல்வி வாய்ப்பும் கிடைப்பதில்லை. பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்கு இரண்டு லட்சம் வரையிலான மாணவர்கள் வருடாவருடம் தோற்றுகின்றனர் அவர்களுள் சுமார் தொண்ணூறு ஆயிரம் பேர் பல்கலைக்கழகம் புகுவதற்கான அடிப்படைத் தகுதியை பெறுகின்றனர். ஆனால் பல்கலைக்கழகத்திற்கு உண்மையிலே அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வருடாந்தம் சுமார் 15,000 மட்டுமே. பல்கலைக்கழகம் புகுவதற்கு தகுதி பெற்றோரில் 80 வீதத்திற்கு மேற்பட்டோருக்கு அனுமதி கிடைப்பதில்லை. பல்கலைக்கழக தேர்வில் சித்தியடையத் தவறும் மாணவர்கள் எல்லோரும் தகுதி குறைந்தவர்கள் அல்லர். அவர்களுள் அதியுயர்ந்த விவேகிகளும் உள்ளனர். சாதாரண தரப்பரீட்சையில் 6, 8, 10 அதிவிசேட சித்திகளை பெற்றவர்கள் கூட இதில் அடங்குவர். ஆகவே உயர்கல்விக்காக பல்கலைக்கழகங்களையா மாணவர்கள் நம்பியிருக்கிறார்கள்? இல்லை. நான் சொன்ன இரண்டு லட்சம்பேரில் கனிசமானோர் கடன்பட்டோ தமது சொத்துக்களை விற்றோ பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயிருக்கும் உயர்கல்வியை நாடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களின் இரு முக்கிய பணிகளாவன உயர்கல்வி வழங்குதலும் ஆராய்ச்சி அல்லது ஆய்வு செய்தலும் ஆகும். பல்கலைக்கழகங்களை விட்டு உயர்கல்விதான் வெளியே போய்விட்டதென்று சொல்வதற்கில்லை. ஆய்வுப்பணியும் கூட அகன்று செல்கின்றது. இந்தியாவிலே உள்ள பல்கலைக்கழகங்கள் உயர்கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்திலும் பார்க்க ஆய்வுப்பணிக்கே அதிக முக்கியத்துவம் தருகின்றன. இலங்கையில் ஆய்வுப் பணியில் பல்கலைக்கழகங்களைவிட அவற்றுக்கு வெளியே உள்ள நிறுவனங்கள் தான் முன்னணியில் உள்ளன. ஆய்வுச் செயற்பாடுகள் இன்று மத்திய வங்கி, கொள்கைகள் பற்றிய கற்கைக்கான நிறுவனம் (ஐ.பி.எஸ்), உலக வங்கி போன்ற நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. உயர்கல்வி பல்கலைக்கழகங்களுக்கு வெளியே சென்றுவிட்டது என்ற கருத்து எனது சொந்தக் கருத்தல்ல. இதை ஏற்கனவே 2007ஆம் ஆண்டில் களனிப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சேனநாயக்க பண்டாரநாயக்க அவர்கள் The University of the Future and the Culture of Learning என்ற தனது நூலில் மிகத் தெளிவாக கூறியுள்ளார். ஆராய்ச்சிப்பணி பல்கலைக்கழகங்களுக்கு வெளியே போய்விட்டது என்பதை கோடிட்டுக் காட்டும் பேராசிரியர் சேனநாயக்க பண்டாரநாயக்க அவர்கள், அதற்கான 5 காரணங்களை கூறுகின்றார். நேரக் கட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு அவற்றுள் இரண்டை மட்டும் ஈண்டு குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று கோட்பாட்டு வறுமை (Powerty of Theory) கோட்பாட்டு வறுமை என்று பேராசிரியர் கூறியிருப்பதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கல்விப் புலத்திலும் அவ்வத்துறைகள் சார்ந்த அடிப்படையான கோட்பாடுகள் உள்ளன. இக்கோட்பாடுகளை ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டும். கல்வி என்பது வெறும் தகவல்களைத் திரட்டி மூளையில் சேகரித்து வைப்பதல்ல. அது ஒரு திட்டவட்டமான அறிவுத்தேடல் முறை. இந்த அறிவுத்தேடல் ஒரு கட்டமைப்பு முறையானது என்றும் கூறுவர். நூல்களின் துணையின்றி கல்வியைத் தொடரும் போது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டவன் நிலையில் தான் ஒரு மாணவன் இருப்பான். இதனால் தான் நூலகங்கள் இன்றி உயர்கல்வி பூரணம் பெற முடியாது என்று கூறுவர். பல்கலைக்கழகங்களில் நடைபெறும் கல்வியை முத்தரப்பு விவாதம் என்று கூறலாம். ஆசிரியர்கள் - மாணவர்கள் என்ற இருதரப்பினர் உள்ளனர். அவர்கள் பல விடயங்களைத் தம்மிடையே விவாதிக்கின்றனர். விரிவுரை மண்டபங்களிலே இவ்விவாதம் நடைபெறுகிறது. மாணவர்கள் இந்த விவாதத்தை நூலகத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். நூலகத்தில் கல்விமான்கள் எழுதிய நூல்கள் இருக்கின்றன. அங்கே அவர்கள் அந்த நூல்களோடு, அதன் ஆசிரியர்களோடு விவாதம் நடத்துகிறார்கள். விவாதம் விரிவுரை மண்டபத்தில் இருந்து நூலகத்திற்குச் செல்கிறது. அங்கிருந்து மீண்டும் விரிவுரை மண்டபத்தில் விவாதம் தொடர்கிறது. இதனைத்தான் இத்தரப்பு விவாதம் என்று கூறுகின்றோம். துரதிஷ்ட வசமாக தமிழில் போதிய நூல்கள் இல்லை. ஆங்கில நூல்களையும் மாணவர்கள் படிக்க வேண்டும். சேனக பண்டாரநாயக்க அவர்கள் குறிப்பிடும் இரண்டாவது விடயம் ஆங்கில அறிவின்மை. ஆங்கில அறிவின்மையால் மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்துவதில்லை. ஆசிரியர்களும் பயன்படுத்துவதில்லை என்று அவர் கூறுகிறார். தமிழ் நூல்களை ஆங்கில நூல்களோடு ஒப்பிட்டு கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு அற்றுப் போய்விட்டது. எங்கள் நூலகத்தில் தரம் வாய்ந்த பல நூல்களை கிடைக்கச் செய்வதற்காக நாங்கள் ஆவன செய்துள்ளோம். நான்கு லட்சம் ரூபா பெறுமதியான பல அரிய சட்டநூல்களை கொள்வனவு செய்து நூலகத்தில் வைத்துள்ளோம். சட்ட இளமாணிப் பட்டம் பயிலும் மாணக்கர்களுக்கு இவை மிகவும் உபயோகமாய் இருக்கும். இதைவிட ஏனைய துறைகளுக்கான அடிப்படை நூல்களையும் கொள்வனவு செய்து தந்துள்ளோம். பல்கலைக்கழகங்களுக்கு வெளியே சென்றுவிட்ட உயர்கல்வியை பெறுவதற்காக துடிக்கும் மாணவர்களுக்கு உதவுவதற்கு எமது நூலகம் தயார்படுத்தப்பட்டுள்ளது. உயர்கல்விக்கு ஆங்கில அறிவு மிக முக்கியமானது. அதை நாம் நீண்ட காலம் புறக்கணித்துள்ளோம். ஆங்கில அறிவை நாடி நாம் கட்டாயம் திரும்பிச் செல்ல வேண்டும். ஆங்கில அறிவின் முக்கியத்துவத்தை புறக்கணித்தது நாம் செய்தபெரிய தவறாகும். இதையும் பேராசிரியர் சேனக பண்டார நாயக்க சுட்டிக்காட்டுகிறார். எனவே தான் நாங்கள் எமது நூலகத்தை இவ்வாறு விரிவாக்கியுள்ளோம். படியுங்கள், நூல்களைப் படியுங்கள், எல்லா நூல்களையும் படியுங்கள் என்று நாம் நமது பிள்ளைகளுக்கு வலியுறுத்திக் கூற வேண்டும். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, அதற்கு வெளியே உள்ள நிறுவனங்கள் மூலம் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு எடுத்துரைப்போம். கல்வியில் ஆர்வம் வேண்டும், படிப்பதில் அக்கறை வேண்டும். நூல்களை வாசிக்க வேண்டும். இதன் மூலம் உயர்கல்வியின் உச்சத்தை அடைய முடியும் என்பதை நமது பிள்ளைகளுக்கு நாம் உணர்த்தவேண்டும். இந்த நோக்கத்திற்காகவே எமது நூலகம் இருக்கின்றது என்பதைக் கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்புரைகள் :**

**"சட்டமும்தமிழும்"**

என்ற தலையங்கத்தில் ஓய்வுநிலை உச்சநீதிமன்ற நீதியரசர் **சி.வி.விக்னேஸ்வரன்** அவர்களின் (எழுத்துரையை அவரின் சட்ட மாணவனும் சட்டத்தரணியுமான **சோ.தேவராஜா** அவர்களால் வாசிக்கப்பட்டது.)

மேற்படி தலையங்கம் எனக்குத் தரப்பட்டதொன்று. நான் தேர்ந்தெடுத்த ஒன்றல்ல. காலஞ்சென்ற திரு.எஸ்.ஆர்.கனகநாயகம், திரு.என்.ரி.சிவஞானம் ஆகியோர் நினைவாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் நூலகச் சட்டப்பிரிவை ஆரம்பிக்கவும், வேலணை மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் பொ.கேதாரநாதன் நினைவாக மற்றைய நூலகப்பிரிவுகளை விரிவடையச் செய்யவும், அவர்கள் மூவரதும் உருவப்பட திரை நீக்கத்துக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் எழுத்துரை ஒன்றை என் சார்பில் வழங்கத் தலையங்கமானது அடியெடுத்துத் தரப்பட்டது. இந்த தலையங்கத்தின் கீழ் சட்டப்பிரிவுக்குத் தமிழ் மொழி பயன்படுத்தப்படலாமா? எந்த அளவுக்கு பயன்படுத்தப்படலாம் என்று ஆராய்ந்து கட்டுரை வடிப்பது ஒரு வழி. சட்டக்கருத்துக்கள் தமிழ் இலக்கியத்தில் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. உதாரணமாகத் திருக்குறள் கூறுஞ் சட்டநெறியைக் கூறலாம். அவற்றை ஆராய்ந்து தமிழ் கூறும் சட்டநெறி பற்றி இந்தக்கட்டுரையில் வெளிப்படுத்துவது இன்னோர் வழி.

(மிகுதி கனம் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் உரைகள் அடங்கிய கையடக்க நூலில் பிரசுரிக்கப்படுகிறது. அக்கையடக்க நூலும் இந்நிகழ்ச்சித் தொகுப்புடன் வெளியாகிறது.)

**"கல்வியும் நூலகங்களும்"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய
**பேராசிரியர் சோ.சந்திரசேகரன்**
கல்விப்பீடாதிபதி கொழும்புப் பல்கலைக்கழகம்

"கற்பதற்குக் கற்றுக்கொள்ளல் (Learning to Learn) என்ற ஒரு புதிய கருத்து இப்போது தோன்றியுள்ளது. எவ்வாறு கற்றுக் கொள்ளுதல் என்பதை முதலில் கற்றுக் கொள்ளல் இன்றைய கல்வி முறையில் மிக முக்கியமாகின்றது. எவ்வாறு கலைக் களஞ்சியங்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் மூலமாக மக்களும் இளைஞர்களும் தாமாகவே கற்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்வது முக்கியமானது. இத்தத்துவம் மேலைநாடுகளில் மட்டுமன்றி கீழைத்தேயங்களிலும், ஏன் எமது மொனராகலை பாடசாலையிலும் கூட, அறிமுகமாகியுள்ளது. நவீன உலகில் யாவும் அறிவு அடிப்படையில் நிகழ்கின்றன. அறிவுசார் பொருளாதாரம், (knowledge economy) அறிவுசார் சமூகங்கள், அறிவுசார் கம்பனிகள், அறிவுசார் ஊழியர்கள், அறிவுசார் நிறுவனங்கள் போன்று யாவுமே அறிவுசார்ந்தவையான ஒரு புதிய போக்கிலே உலகம் செல்கின்றது. நமது நாடு உட்பட வளர்முக நாடுகள் அனைத்தும் அறிவுசார் பொருளாதாரத்தை இலக்காகக் கொண்டு பயணிக்க வேண்டுமென உலக வங்கி அறிவுறுத்தியிருக்கின்றது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தற்போதைய முயற்சி இப்புதிய கோட்பாட்டுக்கு உறுதுணையாக அமைவதாக இருக்கிறது. இணையத்தளம் மூலம் அனைத்தையும் கற்க முடியும் என்று கூறுகின்றார்கள். அதன் எண்ணற்ற வசதிகள் பற்றி கூறத்தேவையில்லை. எனினும் இந்தப் பின்னணியை மாத்திரம் கருத்தில் கொண்டு நூலகங்களின் முக்கியத்துவத்தை எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில் மின்சாரம் இன்றேல் இணையத்தளத்தை அணுக முடியாது. நமது பாடசாலைகளுள் 30 வீதமானவற்றுக்கு மின்சார வசதியில்லை. இலங்கை மக்களில் 10 வீதமானவர்கள் மட்டுமே இணையத்தளத்தை பயன்படுத்திவருகின்றனர். கல்வி அறிவானது சமூகத்துள் முழுமையாக ஊடுருவ வேண்டுமாயின் எமது நாட்டைப் போன்ற வளர்முக நாடுகளில் அது இப்போதைக்கு இணையத்தளங்கள் மூலம் மாத்திரம் சாத்தியப்படாது. இந்தச் சூழ்நிலையிற்றான் நூலகங்கள் முதன்மை வகிக்கின்றன. நூல்களைப் பொறுத்தமட்டில் அவற்றை, பயணத்தின்போதோ, பூங்காவிலோ படுக்கையில் ஓய்வெடுக்கும் போதோ வேறெங்காவதோ எடுத்துச் சென்று படிக்களாம். ஆனால் இணையத்தளத்தையோ அவ்வாறு பயன்படுத்த முடியாது. இணையத்தளத்தை பயன்படுத்துவதற்கு ஒரு பயிற்சி அவசியம். ஒரு புத்தகத்தைப் படிப்பதற்கு அப்படியான எதுவும் தேவையில்லை. இணையத்தளங்கள் மூலமாக மாத்திரமன்றி நூலகங்கள் மூலமாகவும் அறிவார்ந்த பொருளாதாரத்தை அடையலாம் என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாகும். வளர்முக நாடுகளைப் பொறுத்தமட்டில் இணையத்தளத்தைவிட நூலகங்களே கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன. இலங்கையில் இன்று கல்வியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில் 9700க்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. போதனா மொழியாக தாய்மொழி இருப்பினும் 40 வீதமான மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைகின்றனர். இந்த நிலையை மாற்றி தரமான கல்வி கிடைக்கத்தக்கதான சீர்திருத்தங்களை புகுத்தும் நோக்கோடு நாங்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகளின் பிரகாரம் சில பாடவிதான மாற்றங்களை செய்துவருகின்றோம். கற்பித்தலில் அதிசிறந்த செயன்முறை எது என்பது பற்றியும் சிந்தித்து வருகின்றோம். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு சிறந்த நூல்நிலையம் அமைய வேண்டும் என்ற இலக்கோடு செயற்பட்டுவருகின்றோம். 4000 பாடசாலைகளில் 4000 நூலகங்களை அமைத்துள்ளோம் ஆசிரியர்களுக்கு நூலகவியல் பற்றி பயிற்சியளிக்கப்படுகிறது. ஆகவே கல்வித்துறையில் நூலகங்களின் அந்தஸ்து அத்தியாவசியமாகவுள்ளது. ஒருவர், தான் படித்து பெற்றுக் கொண்ட பட்டத்தோடு மட்டும் நிறுத்திக் கொண்டால் அவர் ஒரு அறிஞராக திகழ முடியாது. கல்விமான்களின் இல்லங்கள் தோறும் ஒரு சிறிய நூல்நிலையம் இருப்பதைக் காணலாம். ஒருவர் எப்போதும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதையே இது காட்டுகின்றது. பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் நாம் இடித்துரைத்துவரும் ஒரு முக்கிய செய்தி யாதெனில் அவர்கள் தங்கள் இல்லங்களில் சிறு நூல் நிலையங்களை அமைத்தல் வேண்டும் என்பதே. இல்லங்கள் யாவும் கற்பிக்கும் இல்லங்களாக மாறவேண்டும். கொழும்புத் தமிழ்ச்சங்கம் போன்ற நிறுவனங்களின் நூல்நிலையங்களில் மட்டும் தங்கியிருத்தலை தவிர்க்க வேண்டும். சமூகமே கற்பிக்கும் சமூகமாக மாறவேண்டும் என்பது போன்ற பல மாற்றங்கள் இன்று கல்வித்துறையில் ஏற்பட்டு வருகின்றன. இளைய தலைமுறையினரின் எதிர்கால கல்வி அபிவிருத்தியில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் சேவை மகத்தானது. அதன் சேவை என்றும் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன். திரு. க. மு. தர்மராசா அவர்கள் இந்த நூலகத்திற்காகவும் இந்த விழாவிற்காகவும் பெருநிதியுதவி செய்துள்ளார். என்று எனக்கு முன் பேசிய பலர் அவரை பெரிதும் புகழ்ந்து பேசினார்கள். அவரைப் பற்றி நான் நன்கறிவேன். பெயரிலேயே அவர் தர்ம ராசா. அதுவே காரணம்.

"**நன்றிக்கடன்**" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய
**திருமதி. வசந்தா வைத்தியநாதன்**
அருள்மொழியரசி, கலாபூஷணம், வித்துவாட்டி

தொடர்ந்து நன்றிக்கடன் என்ற மகுடத்தில் சொல்விருந்தளித்த அருள்மொழியரசி, கலாபூஷணம், வித்துவாட்டி திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள், உண்மையாகவே நன்றி கூறுவது என்பது பேசுவதல்ல. நன்றி என்பது நினைப்பதற்குரியது. அதற்கு இந்த விழா ஒரு எடுத்துக்காட்டு. ஒரு சட்டமேதை உட்பட இரண்டு பெரிய சட்டவறிஞர்கள் பற்றியும், ஒரு கல்விமான் பற்றியும் காலம் கடந்து போற்றுவதற்கும் காலம் கடந்து நினைப்பதற்கும் ஒரு வாய்ப்பு இன்று கிடைத்துள்ளது. அது தான் நன்றி நினைதல் என்பது. நன்றி ஒருவர்க்கு செய்தக்கால் அந்நன்றி என்று வருங்கொல் எனவேண்டாம் நின்று தளரா வளர் தெங்கு தாழுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால். தென்னங்கன்றுக்கு வார்த்த தண்ணீரை அது மரமாக வளர்ந்த பின்னர் இளநீராக தனது தலையாலே கொடுக்கின்றது. அதுபோல மனிதர்களும் எண்ண வேண்டும். ஆனால் எத்தனை பேர்கள் அப்படி எண்ணுகிறார்கள்? தாங்கள் ஏறிவந்த ஏணியையே மிதித்து தள்ளிவிடுகின்ற மக்களைத்தானே நாங்கள் பார்க்கின்றோம். தங்களுடைய ஏற்றத்திற்கும் ஊற்றத்திற்கும் காரணமாக இருந்தவர்களை யார் இன்று நினைக்கிறார்கள்? நன்றியை நினைவு கூருவோர் யார்? நன்றி மறவாதோர் இன்று யாருமில்லை என்று சொல்லுமளவுக்கு அருகிவிட்டனர். நெருஞ்சி முள்ளானது காலில் தைத்த மாத்திரத்தே நமது இரத்தத்தை ஈர்த்துக் கொள்ளுகின்றது. நாம் முள்ளை அகற்றி வீசி விடுகின்றோம். அந்த முள்ளானது தானுறிஞ்சிய இரத்தத்தைக் கொண்டே முளைவிட ஆரம்பிக்கின்றது. மற்றவர்களின் இரத்தத்தை உறிஞ்சி அதைக் கொண்டு பயனடையும் நெருஞ்சி முள்ளைப் போன்ற மனிதர்களே இப்போது மலிந்து காணப்படுகின்றனர். யாரிடமிருந்து வளர்ந்தோமோ அவர்களையே அழித்துவிடும் சுபாவம் உள்ளவர்கள் அதிகரித்துவிட்டனர். இன்று முதியோர் இல்லங்கள் நாடு முழுவதும் பெருகிவிட்டன. மூப்பு என்பது எல்லோருக்கும் ஏற்பட்டே தீரும். சமீபத்தில் ஒரு மூதாட்டி என்னிடம் வந்து கண்ணீர் விடாக்குறையாக தனது நிர்க்கதியான நிலையை விபரித்தார். நான் வளர்த்த ஒரேயொரு மகன் என்னை தவிக்க விட்டுவிட்டான். அவனையே நான் கொழுகொம்பாக பற்றிக் கொண்டிருந்தேன். வெளிநாட்டு மோகம் கொண்ட தன் மனைவியின் உந்துதலால் அவன் வெளிநாடு சென்றுவிட்டான். தன் உதிரத்தையே பாலாக்கி ஊட்டிய அந்த மூதாட்டி, அவனது ஏற்றத்திற்கு காரணமாயிருந்த தந்தை இவர்களை கடலில் வீசிவிட்டுச் செல்வதா? அல்லது உதறிவிட்டுச் செல்வதா? அல்லது முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டுச் செல்வதா? பணம் அனுப்பினால் மட்டும் போதாது பணம் பாசமாகாது பாசாணமாகத் தான் மாறும். அந்த மூதாட்டி கூறினார், அம்மா சாப்பிட்டாயா, அம்மா உறங்கினாயா என்று கேட்பதற்கு யாருமில்லாமல் நிர்க்கதியாய் நிற்கின்றேன். என்று கண்ணதாசனின் வரிகள் தான் எனக்கு அப்போது ஞாபகத்திற்கு வந்தன. பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு, தென்னையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தால் இளநீரு இன்று நமது வாழ்க்கையில் நன்றி என்ற சொல் மறைந்துவிட்டது. இன்றைய கூட்டமே நன்றிக்கடன் செலுத்துவதற்கான ஒரு வைபவம். நன்றி, கூறுவதற்கோ அல்லது நவிலுவதற்கோ உரியதல்ல. நுனி நாக்கினால் நன்றி (Thank you) என்கிறோமே தவிர அது நமது இதயத்திலிருந்து வருவதில்லை. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்றார் ஔவையார். நன்றி மறவாமை என்பது இராமாயணம் நமக்குத் தந்த போதனை. நாங்கள் நன்றி மறவாதவர்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. என்றாலும், சட்டக்கல்லூரி செல்லாது சட்டம் பயின்றமை பற்றி தர்மராசா அவர்கள் சொன்னார்கள், அவர் உண்மையாகவே சட்ட நுனுக்கங்களை நன்கறிந்தவர் என்பது அவருடைய உரையிலிருந்தே புலனாகிற்று. அவரை எனக்கு அதிகம் தெரியாது. அவருடைய மனைவியின் நினைவு நாள் வைபவத்தில் கலந்திருக்கிறேன். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை, பதிவிரதைக்கேற்ற பர்த்தா அமையவேண்டும். அன்றில் பேடு போன்ற அந்த அம்மை திலகவதியாருடைய நினைவு நாளில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த இல்லத்தைப் பற்றி, அந்த இல்லாளைப் பற்றி அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு அப்போது கிட்டியது. அதன்பின்னர் இன்று தான் தர்மராசா அவர்களை நான் சந்திக்கின்றேன். நன்றிக்கடன் என்ற தலைப்பில் உரையாற்றுங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டார். நன்றிக் கடன் என்பது ஒரு மணிநேரம் பேசுவதல்ல, நன்றிக்கடன் என்று சொல்வதல்ல, அது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்க வேண்டிய நன்றியுணர்வாகும். வருங்காலச் சந்ததியினருக்கு நாம் ஒழுக்கத்தை புகட்டிச் செல்லல் வேண்டும். அந்த வகையிலேயே நன்றி செலுத்துதல் என்ற மகுடத்திலான இன்றைய வைபவம் இளஞ் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் ஒரு ஒழுக்க விழுமியமாகும். எனக்கு முன் பேசிய பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள், கல்வி போன்ற செல்வங்களை எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்ல வேண்டும் என பொருத்தமாகச் சொன்னார். ஒவ்வொருவருக்கும் கடமையிருக்கிறது அவற்றைப் பற்றி கீதையையும் பிற காப்பியங்களையும் மேற்கோள் காட்டி பலமணி நேரம் பேசுவோம். ஆனால் மேடையைவிட்டு இறங்கியதும் அந்த கடமைகள் எல்லாம் காற்றாய் பறந்துவிடும். நமது முன்னோர்கள் அப்படி வாழ்ந்ததில்லை. கற்பித்த ஆசிரியரை எக்காலத்திலும் எந்த இடத்திலும் எந்த அந்தஸ்த்தில் இருப்பினும் பயபக்தியோடு அவர்களுக்கு மரியாதை செலுத்த நமது முன்னோர்கள் தவறியதில்லை. ஆனால் இன்றோ காலுக்கு மேல் கால் போட்டு உட்கார்ந்த வண்ணம் ஒரு ஹலோ - அவ்வளவுதான். நன்றியுணர்வு குன்றிவரும் இந்நாட்களிலே நன்றிக்கடன் செலுத்துவதற்காக ஒரு விழாவையே எடுத்து முன்மாதிரி காட்டியமைக்காக தர்மராசா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஏறிய ஏணிப்படிகளை உதைத்து தள்ளிவிடல் ஆகாது என்பதற்கான ஒரு எடுத்துக் காட்டே இன்றைய விழா என்று கூறினால் மிகையாகாது. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு முதுகெலும்பாக, சுறுசுறுப்புள்ள ஒரு தேனீயாக, தொண்டே உருவெடுத்தாற் போன்ற, அப்பர் பெருமான் கூறியது போன்று என்கடன் பணி செய்துகிடப்பதே என்ற தாரக மந்திரத்தோடு இயங்கும் திரு. ஆழ்வாய்பிள்ளை கந்தசாமி அவர்கள் இம்மேடையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். பணி செய்து இருப்பதல்ல, பணி செய்து கிடப்பதே. இவ்வாறு அடக்கமாக பணி செய்து கிடக்கும் திரு. ஆழ்வாய்பிள்ளை கந்தசாமி அவர்களை தர்மராசா அவர்கள் எத்துணை உயர்வாகப் பாராட்டினார். அது தான் எனக்கு இன்று மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்த அம்சமாகும். இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு கைமாறு செய்தல் வேண்டும். நன்றியை மறத்தல் ஆகாது. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு. எந்த பாவச் செயலுக்கும் பிராயச்சித்தங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் நன்றி மறத்தலுக்கு பிராயச்சித்தமே கிடையாது. நன்றியுள்ள மாணவர்கள் உருவாக வேண்டும், சீடர்கள் உருவாக வேண்டும், ஆச்சாரியார்கள் உருவாக வேண்டும், இந்த நல்ல நேரத்திலே நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்ட இந்த விழாவையும் திருவாளர் தர்மராசா அவர்களையும் (பேராசிரியர் குறிப்பிட்டார் தர்மராசா என்பது கொடுக்க மட்டுமல்ல அந்தப் பெயரிலேயே அடங்கிய குணமாகும் என்று.) சில பேருக்கு பெயர் மட்டும் அப்படியிருக்கும் ஆனால் கொடுக்க மாட்டார்கள். அவ்வாறன்றி, தர்மராசா அவர்கள் கொடுப்பதிலும் வள்ளலாக, வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியாதவாறு செயற்படுபவர். அதுபோலவே, அவர் விலை மதிக்க முடியாத அருமையான உசாத்துணை நூல்களை சட்ட மாணவர்களுக்காக வழங்கியுள்ளார். சட்டம் என்பது நம் எல்லோருக்கும் தேவையானதொன்று. சட்ட நூல் அறிவு மாணவர்களுக்கு அவசியமானது. ஊடகங்களும் கல்வியை பல வழிகளில் புகட்டி வருகின்றன. பேராசிரியர் குறிப்பிட்டார் மருத்துவர்களும், சட்ட வல்லுனர்களும், ஆசிரியர்களும் சமுதாயத்தினுடைய கண்கள் என்று. இது மிகவும் உண்மையான வார்த்தை. அறிஞர்களைத்தான் நாங்கள் உருவாக்க வேண்டும். நன்றியுணர்வுடைய மனிதன் உருவாக வேண்டும். இதைத்தான் நன்றிக்கடன் செலுத்தும் இவ்விழா வலியுறுத்தி நிற்கின்றது. இந்த விழாவுக்கு என்னையும் அழைத்தற்காக தர்மராசா அவர்களுக்கு நன்றி பாராட்டி வணக்கமும் கூறி எனது பேச்சை நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களின் நன்றியுரை**

அனைவருக்கும் வணக்கம் இதுவரை நிகழ்த்தப்பட்ட உரைகளைக் கேட்டு நீங்கள் மகிழ்ந்திருப்பீர்கள். கலைநிகழ்ச்சியும் தொடரவிருப்பதால் நான் அதிக நேரம் எடுக்காது ஒருசில வார்த்தைகளை மட்டும் கூறவிரும்புகின்றேன். கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தின் உசாத்துணைப் பிரிவை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நூலகச் செயலாளர் திரு. சண்முகலிங்கம் ஐயா அவர்களிடம் சமர்ப்பித்ததையடுத்து அதற்கான நிதியுதவிகளை பலரிடமிருந்து கோரியிருந்தோம். எமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் செயற்பாடோ தெரியவில்லை. திரு. தர்மராசா ஐயா அவர்களை நான் சந்திக்க நேர்ந்தது. உசாத்துணைப் பிரிவின் துரித அபிவிருத்திக்கும் அதைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற இன்றைய விழாவிற்கும் அந்தச் சந்திப்பே கால்கோலாய் அமைந்தது. அனைத்தும் இறையருளாலேயே இடம்பெறுகின்றன என்பது எமது நம்பிக்கை. எமது நூலகத்தில் சட்டத்துறை உட்பட ஏனைய கல்விப்பிரிவுகளுக்கான உசாத்துணைப் பகுதியை மேம்படுத்தும் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த அதேசமயம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தனது சட்டபீடத்திற்கான விரிவுகளை எமது சங்க கட்டடத்தில் நடாத்துவதற்கு முன்வந்தமை இதற்கு இன்னும் ஒரு சான்றாகும். அவ்விரிவுரைகள் சமீபத்தில் ஆரம்பித்துவிட்டன. இதற்கிடையில் எமது சங்கம் ஒரு சிற்றூண்டிச் சாலையையும் சமீபத்தில் ஆரம்பித்துள்ளதால் குறித்த விரிவுரைகளில் பங்குபற்றும் விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நூலகத்தை பயன்படுத்துவோருக்கும் சிற்றூண்டிச்சாலை மிகவும் பயனுள்ளதாகும். இதுவும் ஒரு சக்தியாகும். இன்று காலை பம்பலபிட்டி வயிராப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு புதிய உசாத்துணை நூலகப்பிரிவில் ஒரு பூசை செய்து ஆண்டவனுடைய அருளாசியையும் பெற்று இச்சங்க நூலகத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் அப்பூசையை நடாத்திய பிரதம குருவுக்கும் வழிபாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு இவ்விழாவிற்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் இச்சங்கத்திற்கு பேராசிரியர் தலைவராக செயற்படுவதும் பெரும் பாக்கியமாகும் அவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மற்றும் மங்கள விளக்கேற்றிய முக்கிய பிரமுகர்களும் அறிஞர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று உயர்திரு அட்வகேற் எஸ். ஆர். கனகநாயகம், சிரேஷ்ட சட்டத்தரணி. என். ரி. சிவஞானம் அவர்களினதும் உயர்திரு. அதிபர். பொ. கேதாரநாதன் ஆகியோரினது உருவப்படங்கள் உசாத்துணைப் பிரிவு நூலகத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. திரு. எஸ். ஆர். கனகநாயகத்தின் உருவப்படத்தை யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவியும் முதற்பெண் ஜனாதிபதி சட்டாலோசருமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் திரைநீக்கம் செய்து அவருடைய நினைவுரையையும் ஆற்றியுள்ளார். அவர் யாழ்பாணத்திலிருந்து இதற்காக இங்கு வந்து கலந்துகொண்டமைக்காக எத்தனையோ இடையூறுகளின் மத்தியிலும் சமூகமளித்தமைக்காக எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எஸ். ஆர். கனகநாயகம் அவர்களின் மைந்தனும் ஜனாதிபதி சட்டாலோசகருமான திரு. கனக்-ஈஸ்வரன் அவர்கள் சிரேஷ்ட சட்டத்தரணி என். ரி. சிவஞானம் அவர்களின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்து அவரின் நினைவுரையை ஆற்றியமைக்காகவும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உயர்திரு. பொ. கேதாரநாதன் அவர்களுடைய உருவப்படத்தை பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார். பேராசிரியர் சந்திரசேகரன் அவர்களைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும் அவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு பலவழிகளிலும் உதவி செய்துவருகிறார். அவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நிகழ்ச்சிக்கு அறிவிப்பாளராக செயற்பட்டுக் கொண்டிருந்த திரு. எழில்வேந்தனுக்கும், தமிழ் வாழ்த்துப் பாடிய செல்வி கந்தசாமி கிருபாலினிக்கும், வரவேற்புரை நிகழ்த்திய இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ரகுபதி பாஸ்ரீதரன் அவர்களுக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வருகை தந்து திருவாளர். பொ. கேதாரநாதன் அவரைப்பற்றிய நினைவுரையாற்றிய யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்விழாவில் நன்றிக்கடன் உரையாற்றிய திரு. க. மு. தர்மராசா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு மூலகர்த்தாவாகச் செயற்பட்டமைக்காகவும் இதற்கு முன் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சில நூல்கள் அச்சிட்டு அந்நூல்கள் விற்கும் பணத்தை இச்சங்கத்திற்கு சேர்வதற்காகவும் வேறு வழிகளிலும் உதவி செய்தமைக்காகவும் அவருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்ததாக நூலகச் செயலாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களை உங்களுக்கு நன்குதெரியும் அவர் தனதுரையில் நூலக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார் அவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் இங்கு வருகை தராவிட்டாலும் அவர் வழங்கிய சட்டமுந் தமிழும் என்ற தலைப்பில் அனுப்பிய எழுத்துரையை சட்டத்தரணி சோ. தேவராஜா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தமைக்காக அவர்கள் இருவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்ததாக நன்றிக்கடன் என்ற தலைப்பில் குறுகிய நேரத்தில் மிக அருமையாக உரையாற்றிய வசந்தா அம்மா என்றழைக்கும் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். நன்றிக்கடன் உரை முடிவடைந்ததும் இங்கு மேடையேறவிருக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் நாட்டார் கலைநிகழ்வு நடைபெறவிருக்கின்றது. பலநாட்களாக இங்கு பயிற்சி பெற்று மேடையேறுவதற்கு ஆயத்தமாகவுள்ள அனைத்துக் கலைஞர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் உயர்திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவரின் மைந்தன், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், அவரின் ஊரைச் சேர்ந்தவர்கள், அன்பர்கள், மற்றும் சட்டத்தரணிகளும் பிரபல்யமிக்க சட்டவாதிகள் அத்துடன் உயர்திரு. என். ரி. சிவஞானம் அவரைத் தெரிந்த அவருடன் பழகிய பலரும் இங்கு வருகை தந்துள்ளீர்கள், அடுத்ததாக திரு. பொ. கேதாரநாதன் அவர்கள் வேலணை மத்திய கல்லூரி தற்போது சேர்வைத்திலிங்கம் துரைசுவாமி என்றழைக்கப்படும் கல்லூரியின் அதிபராக கடமையாற்றியவர் என்றும் இன்று வேலணையூர் மக்கள் வேலணை மத்தியகல்லூரி பழைய மாணவர்கள், அவரின் உறவினர்கள், அன்பர்கள், பெரியோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மழைபொழிந்து கொண்டிருக்கும் போதிலும் இவ்விழாவை சிறப்பிப்பதற்காக பொறுத்திருந்து தொடர்ந்து சமூகமளித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும், பெரியோர்கள், தாய்மார்கள், பிள்ளைகள், அறிஞர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ்விழாவின் நிகழ்ச்சியை விளம்பரம் செய்த ஊடகவியளாளர்களான வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, யாழ்ப்பாணத்தில் வெளியாகும் உதயன் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களான ரூபவாஹினி, ஐ. ரி. என், சக்தி தொலைக்காட்சி ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ்விழாவிற்கு பலர் உதவி செய்துள்ளார்கள். ஒவ்வொருவரினதும் பெயர்களை தனிப்பட்ட முறையில் கூறுவதற்கு நேரமில்லாத காரணத்தினால் பொதுவாக இச்சங்க ஊழியர்கள், நூலக ஊழியர்கள், தமிழ்ச் சங்க நிர்வாகிகள், ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இறுதியாக இவ்விழாவை சிறப்புற ஒளிபரப்புச் செய்து கொண்டிருக்கும் திரு. எழில்வேந்தன் அவர்களை உங்களுக்கு நன்றாக தெரியும் அவர் இச்சங்கத்தின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார் அவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு. நான் எனது ஆத்ம சாந்திக்காக ஒரு பக்கத்தில் நின்று கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றேன். என்னை கௌரவிக்க வேண்டாம் என்று தலைவர் அவர்களுக்கும், திரு. சண்முகலிங்கம் அவர்களுக்கும் திரு. தர்மராசா அவர்களுக்கு கூறும்படி நான் கூறியும் அவர்கள் அதனை மறுத்து திரு. தர்மராசா அவர்கள் என்னை கௌரவிப்பதற்கு துணையாக நின்று இப்பெரியோர் சபை முன்னாள் என்னை கௌரவித்தமைக்காகவும் நான் இங்கு வருவதற்கு எனக்கு துணையாக நின்று துணைபுரிந்த துணைவியாரையும் கௌரவித்தமைக்காக திரு. க. மு. தர்மராசா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது நன்றி உரையை முடித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கலை இலக்கியப் பேரவை வழங்கும்

## "புது வரலாறும் நாமே படைப்போம்"

-இசைப்பா அரங்கு-

இவ் இசைப்பா அரங்கில் 1980களில் எங்களோடு உழைத்த கலைஞர் எஸ்.ஜெயக்குமார் நினைவுகளை நினைந்து இவ்வரங்கை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உசாத்துணை நூலகப்பிரிவுத் திறப்பு விழாவில் ஈழத்திருநாட்டின் ஆற்றல் மிகு கவிஞர்களின் கவிதைகளை இசைப்பா அரங்காக நிகழ்த்திக் காட்டுவதில் மகிழ்வெய்துகிறோம்.

- எங்கள் நிலத்தில் எங்களுக்கான தொழில்
- எங்கள் உழைப்பில் எங்கள் மகிழ்வு
- எங்கள் சொந்த பலத்தில் எங்கள் உயிர் மூச்சு
- ஆம், எங்கள் உழைப்பாளர் வெல்லும் காலம் வரும். இந்த உலகம் ஓர்நாள் மாறும்.

## வானம் தொடுகின்ற வயல் வெளியில்....





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தந்தனத்தானே தனத்தன தந்தனத்தானே தந்தனத்தானே
தந்தனத்தானே தனத்தன தந்தனத்தானே தந்தனத்தானே

வானம் தொடுகின்ற வயல் வெளியில் ஆ...... ஆ..... ஆ......
தன் ஈனம் போக்கிட உழைக்கின்றான்
கானல் நீரென வாழ்க்கை என்று – தன்
கோலம் கண்டவன் நொந்து நின்றான்

ஏனோ தானோ வாழ்க்கை என்றாயினும்
விளைவைக் கண்டவன் மகிழ்கின்றான்.
சொந்த நிலத்தில் தொழில் கண்டான் - தன்
சொந்த பலத்தில் உயிர் கொண்டான்

(வானம் தொடுகின்ற)

பனையும் மலையும் பணி செய்யும் - அவன்
சொல்வதைக் கேட்டு வினை செய்யும்
காடும் மேடும் கதை சொல்லும் - அவன்
கைத்திறன் மீது நிலை மாறும்.

(வானம் தொடுகின்ற)

-சோ.தேவராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் எமது வளவில் எமது வீடுகளில் நாம் வாழ்ந்த வாழ்வு ஏன் இல்லாது போனது ? எங்கள் நாட்டில் வாழ்ந்த மானுடர் எங்கே போனார். என்ன நடந்தது. ஏன் நடந்தது. 1983 ஆடி மாத நினைவுகள் எங்கள் மீது ஏன் தாக்கம் செலுத்தின? என்னதான் எங்கள் மண் மீது நடந்தது?

## ஆடிக்காற்றும் அறுதுயில் கொள்ளும்



நிகழ்ச்சியில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்
பார்வையாளர்களின் ஒரு பகுதியினர்

ஆடிக்காற்றும் அறுதுயில் கொள்ளும்
அமைதியான நடு நிசி நேரம்
அசைவுகள் இன்றி ஊரே உறங்கும்
ஓசைகள் இல்லா இரவின் மௌனம்
(ஆடிக்காற்றும்)

எங்கோ ஊர்ந்த வாகனம் நிற்க
எழுந்த ஓசையில் எல்லாம் கலைந்தது
அக்கம் பக்கம் எல்லாம் அதிர்ந்தது
இடியும் மின்னலும் தன்கதை தொடர்ந்தது
ஏதும் அறியா மனிதரின் தலைகள்
மள மள வென்று சரிந்தன மண்ணில்
மறைந்து கிடந்த இனவெறி உணர்வுகள்
எழுந்து தீயாய் இலங்கையை எரித்தது.

கைதிக் கூண்டில் குதறிய உடல்கள்
குண்டுகள் பாய்ந்து சிதறிய தலைகள்
வீதிகள் தோறும் விழுந்த பிணங்கள்
வெந்து சாம்பலில் அழிந்த சுவடுகள்
மனித மலர்கள் கருகிய விடியல்கள்
மாறி ஒரு நாள் விடியல்கள் தோன்றும்
மனிதன் மனிதனாய் மனிதனை மதிக்க
புதிய மனிதன் எழுந்து நடப்பான
(ஆடிக்காற்றும்)

-க.தணிகாசலம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பிள்ளைகளின் உயிர்கள் ஏன் பறிக்கப்படுகின்றன. பாரத யுத்தத்தில் கூட கர்ணன் கொல்லப்பட்ட போது அவனது தாய் குந்தி "ஐயோ, என் பிள்ளை" என்று அழுது, அணைத்து ஒப்பாரி வைத்தாளே, அவ்வாறு கூட எங்கள் தாயாரால் ஏன் ஒப்பாரி பாடவும், என் பிள்ளை என்று சொல்லி அழவும் அணைக்கவும் முடியாமல் போனது.

## தெருப்புழுதியிலே உன் உடம்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருப்புழுதியிலே உன் உடம்பு
முதுகெல்லாம் இரத்த வெள்ளம்
நீ தானா என்று குனிந்து பார்த்தேன்
ஓம் ராசா நீயே தான்

(தெருப்புழுதியிலே)

குரு சேத்திரத்தில் கர்ணன் விழ
ஐயோ மகனே என்று குந்தி
ஓடிச் சென்று அணைத்தாளே
ஐயோ ராசா நான் பாவி
இப்போ வந்து பிறந்து விட்டேன்
என் பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியானேன்

(தெருப்புழுதியிலே)

எனக்கு மட்டும் பலம் இருந்தால்
இரவிரவாய் உன்னை எடுத்துச் சென்று
செம்மணியில் எரித்திருப்பேன்
ஐயோ ராசா நான் பாவி
முந்தநாள் சாமம் உந்தனுக்கு
பழஞ்சோறு போட்ட கை
இந்தக் கடனையும் செய்திருக்கும்

(தெருப்புழுதியிலே)

ஊருக்காய் மடிந்தபிள்ளை
தெருப்புழுதியிலே கிடக்கின்றான்
அவனை அங்கே விட்டுச் செல்ல
என் நெஞ்சம் விம்முதையா
என் பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியானேன்
ஐயோ ராசா நான் பாவி

(தெருப்புழுதியிலே)

-சன்மார்க்கா-



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எங்கெல்லாம் ஒடுக்கல் நிகழுமோ, அங்கெல்லாம் போராட்டம் இருக்கும். எங்கெல்லாம் போராட்டம் இருக்குமோ அங்கெல்லாம் அர்ப்பணிப்பும் தியாகமும் இருக்கும். எங்கள் தோட்டத்தில் பூக்கள் பூக்கின்றன. பூக்கள் மணம் பரப்புகின்றன. பூக்கள் கருகுகின்றன. ஆனாலும் பூமரங்கள் மறுநாளும் மணம் பரப்ப முழுநாளும் நீருறிஞ்சுவது இயற்கையின் நியதிதானே! அதுவே விடுதலை வேண்டும் மக்களின் வாழ்வும் வரலாறுமாகும்.

## மாலையிலே முத்தரும்பும்... என் பவளமல்லிகையில்

மாலையிலே முத்தரும்பும் என் பவள மல்லிகையில்
இரவிரவாய் பூவிரிந்து விடியலிலே மணம்பரவும்
மணம் பரவும் முன்னாலே மலர்கள் சிதறிவிழும்
மண்ணோடு மண்ணாகும்.

**(மாலையிலே)**

வெள்ளி மலர்விரிந்து வான வெளியெங்கும்
இரவிரவாய் மலர்குவியும்
**(லல்லா லாலா லலலல்ல லாலா...)**
**(லல்லா லாலல்ல லலலா...)**
அள்ள முடியாமல் வாயு சலித்திருக்கும்
கடல் கதறும் சேவலெழும்

கதிரோன் துயில் கலையும்
வானம் கனல் கொள்ளும்

பூக்கள் எரிந்தொளியும்

**(மாலையிலே)**

ஆனாலும் தார்மேட்டில் பூச் சொரியும் என்மரமோ
இன்னோர் இரவுக்காய் ரகசியமாய் மொட்டுவிடும்
**(லல்லா லாலால லலலல்ல லாலா...)**
**(லல்லா லாலல்ல லலலா...)**

இருளில் இரவிரவாய் இறங்கி வரும் பனிமலர்கள்
பின் இரவில் மலர்குவிந்து
**லல்லா லாலால லலலல்ல லாலா...)**
**(லல்லா லாலல்ல லலலா...)**

விடியலிலும் மீந்திக்கும் காலைத் தணல் நெருப்பில்
கண் முன்னே மலர் அழியும்

**(மாலையிலே)**

ஆனாலும் பூப்பூக்கும்
என்வான நெடுமரமோ
மறுநாளில் மலர் பொழிய
முழுநாளும் நீருறிஞ்சும்....

-சி.சிவசேகரம்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வு, புலப்பெயர்வு, நிச்சயமற்ற எதிர்காலம். எங்கள் எதிர்காலம் எங்கே போகிறது? எங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளின் பிள்ளைகளுக்காய் எங்களால் எதைத்தான் செய்ய முடிகிறது. ஆம், நாம் ஆராரோ பாடுவது ஆற்றாமையால் தூங்க வைப்பதற்கல்ல. துடித்தெழச் செய்வதற்கு எம்மால் இயலுமா?

**பாட்டனார் பண்படுத்திப் பழமரங்கள் நாட்டிவைத்த....**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆராரோ ஆரிவரோ ஆரமுதே ஆராரோ (2)**

பாட்டனார் பண்படுத்தி பழமரங்கள் நாட்டிவைத்த
தோப்பை அழியவிட்டு தொலைதேசம் வந்தவன் நான்
என்னுடைய பேரனுக்காய் எவன் வைப்பான் பழத்தோட்டம்

**ஆராரோ ஆரிவரோ ஆரமுதே ஆராரோ (2)**

இருமருங்கும் நாணல்கள் குடைபிடிக்கும் முதுமருது
வழிநெடுக வரவேற்பாய் வந்தேறும் சிற்றாற்றை
விழிகுளுக நீர்சுமந்து நினைவழித்து வந்தவன் நான்
என்னுடைய பேரனுக்காய் எவன் வைப்பான் பழத்தோட்டம்

**ஆராரோ ஆரிவரோ ஆரமுதே ஆராரோ (2)**

சூழ நிறைக் கடலிசைக்கும் இன் மொழி வகைபேசும்
மாணிக்க மணிதுலங்கும் வனப்புறும் எந்நாட்டை
இனிவேறு வழி இன்றி மனம் நோகப் பிரிந்தவன் நான்
என்னுடைய பேரனுக்காய் எவன் வைப்பான் பழத்தோட்டம்

**ஆராரோ ஆரிவரோ ஆரமுதே ஆராரோ (2)**

(பாட்டனார்)

-வ.ஐ.ச.ஜெயபாலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து புலம்புவதற்குமப்பால் எங்கள் தேசத்தில் நாங்கள் வாழ்வோம். எங்கள் துயரத்துக்கான காரணங்களைக் கண்டறிவோம். அரசு இயந்திரம் என்பது என்ன? அரச படைகள், நீதிமன்றம், சிறைச்சாலை, அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட அரசு இயந்திரம் எங்கள் தேசத்தின் பிள்ளைகளை, விவசாயிகளை, தொழிலாளர்களை ஏன் சங்காரம் செய்து மகிழ்கிறது.

## தடுமாறும் அரசிற்கு சட்டங்கள் காவல்...




தடுமாறும் அரசிற்குச் சட்டங்கள் காவல்
தவறான விளக்கங்கள் தரநூறு பேர்கள்
சுடுமாறு உத்தரவாயின் யார் வீழ்ந்தால் என்ன
துணை நிற்கும் அதிகாரம் பிறகென்ன கவலை (தடுமாறும்)

இனவாத விதை இங்கு யார் தூவினார்கள்
எரிஎன்றும் உடையென்றும் யார் ஏவினார்கள்
இனவாத செந்தீயை யார் மூட்டினார்கள்
திருநாட்டை எரியூட்டி யார் காட்டினார்கள் (தடுமாறும்)

போராயின் போர் என்று புது வேதம் ஓத
புரியாது வெறி கொண்டு சனம் மாறி மோத
வீராதி வீரர் செய் வேளாண்மை இன்று
விளைச்சல் கண்டறுக்கின்ற கருஞ்சட்டை கூட்டம் (தடுமாறும்)

பயிர் வீடு பசுமாடு பனைவேலி தீயும்
பல காலச் சேமிப்பு பறிபோகக் கூடும்
கலிகால நமனாரோர் கெலி கொப்ரர் ஏறி
கண்மூடித்தனமாகச் சன்னங்கள் தூவும் (தடுமாறும்)

விவசாயி வயலோடு உரமாக நேரும்
மீனவனாவி கடல் மீது படகோடு போகும்
தொழிலாளி உடல் ஆலைத் தெருவோரம் சாயும்
துயரான கதை நாளும் அரங்கேறலாகும் (தடுமாறும்)

-சோ.பத்மநாதன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசத்தில் சவமாகும் ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் தான். அந்தத் தாய் எவ்வாறு தவிப்பாள். அந்தத் தந்தையர் எவ்வாறு தாங்கிக் கொள்வர். திசையெங்கும் ஏவப்படும் ெல்கள், பிள்ளையோ, தாத்தாவோ, பாட்டியோ என்றெல்லாம் பாராது – எல்லோருக்கும் ஒன்றாய் சமமாய் - சவநீதி வழங்கும் அற்புதம் நிகழ்கிறது.

## ஆர் பெற்ற பிள்ளையோ பிணமானான்......




ஆர் பெற்ற பிள்ளையோ பிணமானான்
எந்த அன்னையின் தனிமகளோ சவமானாள்
ஆர் பெற்ற பிள்ளையோ
ஆர் பெற்ற பிள்ளையோ
ஆர் பெற்ற பிள்ளையோ
(ஆர் பெற்ற)

ஊர்முற்றும் மூடிய தீயின் பெருவளைப்பில்
உலுத்தர்கள் ஏவிய ஷெல்லின் கொடுவெடிப்பில்
ஆர் பெற்ற பிள்ளையோ
ஆர் பெற்ற பிள்ளையோ
ஆர் பெற்ற பிள்ளையோ (ஆர் பெற்ற)

திருமண மேடையில் தீய பிணவாடை
சின்னஞ்சிறு பிஞ்சுச் சடலம் தெரு நீளம்
நரையயிர் தாத்தாவும் பாவம் பலியானர்.
நாட்டில் கொடுங்கோலர் வேட்டை முடியாதோ
நாட்டில் கொடுங்கோலர் வேட்டை முடியாதோ
(ஆர் பெற்ற)

-இ.முருகையன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊர் ஏன் இருதுருவப்பட்டுத் துடிக்கிறது. எங்கள் துயரத்தில் தங்களை வளப்படுத்துவோர் யார்? எங்கள் மீது சுமத்தப்பட்ட யுத்தம் எவருக்கு மூலதனமாகிப் பெரு நன்மையை விளைக்கிறது. எங்கள் வடலிகளை யார் தறிக்கின்றார்கள். எங்கள் விளைச்சல்களை யார்அறுக்கின்றார்கள். போர் மூண்டு எத்தனை நாள், விடுதலை ஏன் இன்னும் இல்லை. கேள்விகள் எத்தனை? விடைகள் ஏன் இல்லை?

**யார் செய்த வேளாண்மை யார் வெட்டுவோர்கள்.....**

யார் செய்த வேளாண்மை யார் வெட்டுவோர்
யார் நட்ட பனை வடலி யார் தறிக்கின்றார்கள்
யார் கையில் கொடுவாட்கள் யார் கை கும்பிடுங்கை
யார் கொல்லப்படுவோர்கள் யார் கொன்று மகிழ்வோர்
யார் கொல்லப்படுவோர்கள் யார் கொன்று மகிழ்வோர்

(யார் செய்த)

யார் வயலை உழுகிறவன் யார் விளைச்சல் பெறுவோர்
யார் தறியில் நெய்கிறவன் யார் உடுத்து மகிழ்வோர்
யார் சேனை நடத்துபவன் யார் போரில் மடிவோன்
யார் விற்ற ஆயுதங்கள் யார் சுட்டுச்சாவோர்
யார் விற்ற ஆயுதங்கள் யார் சுட்டுச்சாவோர்

(யார் செய்த)

யார் சிவிகை ஊருவது யார் சுமக்கும் ஆட்கள்
யார் நாட்டை ஆளுவது யார் ஆளப்படுவோர்
யார் கையில் துப்பாக்கி யார் உடலில் ரவைகள்
யார் சிறையில் வாடுவது யார் கையில் திறப்பு
யார் சிறையில் வாடுவது யார் கையில் திறப்பு

(யார் செய்த)

கேள்விகள் தான் எத்தனை விடைகள் ஏனில்லை
போர் மூண்டு எத்தனை நாள் விடுதலை ஏனில்லை
கனவுகாணும் புதுயுகம் ஏன் விடியவில்லை
கண்ணீரும் கம்பலையும் ஏன் ஓயவில்லை
கண்ணீரும் கம்பலையும் ஏன் ஓயவில்லை

-சோ.பத்மநாதன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம். கேள்விகள் பிறந்தால் விடைகள் கிடைக்கும். எங்களுக்கும் காலம் வரும். காலம் வந்தால் வாழ்வு வரும். வாழ்வு வந்தால் அனைவரையும் வாழ வைப்போம். நாம் ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும் நாம் எல்லோரும் நம் ஒவ்வொருவருக்காகவும் ஒன்றுபடுவோம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. வெற்றி என்பது மேல்நிலை எய்துதல். ஆறுகள் பின் நோக்கிப் பாய்வதில்லை. முன் நோக்கிப் பாய்வோம். சுற்றி ஏறிடும் பாதை ஆயினும் தூக்கி நம்மை உயரத்திடுமேயது. புதியதோர் ஆதியைக் காண்போம். அதுவே எங்கள் விதி. ஆம். இல்லை என்பதை இல்லை செய்குவோம்.

## இல்லை என்பதை இல்லை செய்குவோம் ....




தன்னனன்ன தானனனன்னா    தன்னனன்ன தானனனன்னா
தன்னனன்ன தானனனன்னா    தன்னனன்ன தானனன்னா

இல்லை என்பதே இல்லை செய்குவோம்
எதிர்மறுத்ததை எதிர்மறுப்போமே
முன்னர் ஓடிய திசையில் ஓடுவோம்
முகிலை நோக்கியே உயர ஏறுவோம்

தந்தனத்தானா தந்தனத்தானா தந்தனத்தானா தானா
தந்தனத்தானா தந்தனத்தானா தந்தனத்தானா தானா

சுற்றி ஏறிடும் பாதை ஆயினும்
தூக்கி நம்மை உயர்த்திடுமேயது
வெற்றி என்பது மேல்நிலை எய்துதல்
விரிந்த விண்ணிடை மேல் உலாவுதல்

(இல்லை)

இந்தவாறு நாம் ஏறும் ஏற்றமே
இனியவாழ் நிலை காட்டும் மார்க்கமாம்
அந்தம் முந்திய ஆதி ஆகுமே
அதுவே புதியதோர் ஆதி ஆகுமே

(இல்லை)

-இ.முருகையன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகளை எழுதிய கவிஞர்கள் :

இ.முருகையன்
சோ.பத்மநாதன்
சி.சிவசேகரம்
வ.ஐ.ச.ஜெயபாலன்
சோ.தேவராஜா
சன்மார்க்கா
க.தணிகாசலம்

## பாடல் இசை ஆக்கம் : எம். கண்ணன்

## பங்குபற்றியோர் :

செ.செல்வகௌரி
சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்
த.வசந்தி
வ.பர்வதாமணி
தே.கலாலஷ்மி
ஜெ.உதயனி
மௌனசாமி மதுவர்மன்
சோ.தேவராஜா
ச.ரஜனி
ஆ. தங்கவேலாயுதம்
க. செந்தில்குமார்
ச. சுதாகர்
சி. கோணேஸ்வரன்
நா. லஜீந்தன்

## வாத்தியங்கள் :

| | | |
|---|---|---|
| ஓர்கன் | - | பா. நாகேந்திரம் |
| தபேலா | - | நவகம்புர கணேஷ் |
| மிருதங்கம் | - | பாலக்காடு பாலச்சந்திர சர்மா |

## அனுசரணை :

க.மு.தர்மராசா
திலகவதி தர்மராசவின் மூன்றாம் ஆண்டு நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறுதியாக மீண்டும் நன்றியுரை செலுத்துபவர்**
**திரு. க. மு. தர்மராசா.**

இப்பொழுது நடைபெற்று முடிந்த இந் நாட்டார் கலைநிகழ்வு இன்றைய காலகட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சில சம்பவங்களை கண்ணால் பார்த்த மாதிரி உணர்ச்சி வசப்படத்தக்கதாக இந்நிகழ்ச்சியை திறம்பட நடாத்தியிருக்கிறார் என்பது எனது கருத்து அதனை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என நான் நினைக்கின்றேன். ஆகையினால் கலைநிகழ்ச்சியில் பங்குபற்றிய அத்தனை பேரையும் கௌரவிக்க வேண்டும் என்பது எனது எண்ணம். அவர்களை இன்று சமூகமளித்திருக்கும் யாழ்ப்பாண சட்டத்தரணி சங்கத் தலைவியும் ஜனாதிபதி சட்டாலோசகருமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களை மேடைக்கு வந்து பங்குபற்றிய அத்தனை பேரையும் கௌரவிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன். அதன் பிரகாரம் அனைவரும் கௌரவிக்கப்பட்டார்கள். மேலும் கவீரன் என்று நான் கூறுவது ஓய்வுநிலை உச்சநீதிமன்ற நீதியரசர் கனம் சி. வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கும் நான் ஓர் நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்பது என் மனதிலே பதிந்துவிட்டது. அதற்கான காணரங்களை இச்சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவதற்கு நேரமும் இல்லை விரும்பவும் இல்லை. இவ்விழாவிற்கு சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் பனர் என்று சொல்லப்படும் திரையையும் திரைநீக்கம் செய்யப்பட்ட உருவப்படங்களை நல்லபுதுமாதிரியான முறையிலும் வேறு வழிகளிலும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் திரு. நந்தன் அவர்களுக்கும் மற்றும் அவரின் ஊழியர்களுக்கும் மேலும் எனக்கு உதவியாக நின்ற திரு. இராஜேந்திரன் அவர்களுக்கும் இவ்வளவு பொறுமையாக நீண்டநேரம் பொறுத்திருந்து இவ் நிகழ்ச்சியை சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்துடன் இந்நிகழ்ச்சி நிறைவுறுகின்றது. நன்றி வணக்கம்.

**தமிழ் வாழ்த்து**
**திருமதி. பூமணி நடராசா**

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடும்
வன்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நிங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் மூன்று

12. 03. 2008ந் திகதி தினக்குரல் பத்திரிகையில் (புதன் வசந்தம்) :- கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற புதிய உசாத்துணை நூலகப் பிரிவின் திறப்புவிழாவின் போது வெளியான படங்கள் நான்காம் அத்தியாயத்தில் பார்க்கலாம்.


13. 03. 2008ந் திகதி வீரகேசரி பத்திரிகையில் வெளியான :- கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய உசாத்துணை நூலகப் பிரிவின் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை நூலகப் பிரிவின் முதலாம் மாடியில் நடைபெற்றது. கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சபா ஜெயராசா நாடாவினை வெட்டி திறந்து வைப்பதையும் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக்-ஈஸ்வரன், கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஆகியோர் சிரேஷ்ட சட்டத்தரணி என். ரி. சிவஞானம், எஸ். ஆர். கனகநாயகம், கல்லூரி அதிபர் பொ. கேதாரநாதன் ஆகியோரின் உருவப்படங்களை திரைநீக்கம் செய்துவைப்பதையும் முன்னாள் எம். பி. யும் சட்டத்தரணியுமான அப்பாப்பிள்ளை விநாயமூர்த்தி, யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோர் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். நான்காம் அத்தியாயத்தில் பார்க்கலாம்.

16. 03. 2008ந் திகதி வீரகேசரி பத்திரிகையில் வெளியான :- கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய உசாத்துணை நூலகப்பிரிவின் திறப்பு விழா சங்கத்தலைவர் சபா. ஜெயராசா தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் வேலணை மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் பொ. கேதாரநாதனின் உருவப்படத்திற்கு யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் மலர்மாலை அணிவிப்பதையும் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக்-ஈஸ்வரன், செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் பேராசிரியர் சபா. ஜெயராசா உரையாற்றுவதையும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினையும் படங்களில் காணலாம்.
19. 03. 2008ந் திகதி உதயன் பத்திரிகையில் - கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தின் உசாத்துணைப் பிரிவு (முதன் முலாக சட்டக்கிளை உட்பட) அங்குரார்ப்பணம், உருவப்படங்கள் திரைநீக்கம், நன்றி செலுத்தும் விழா கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது நூலகத்தை விரிவாக்கி உசாத்துணைப் பிரிவொன்றினை (முதன் முதலாக சட்டப்பிரிவையும் உள்ளடக்கி) கடந்த 2008ஆம் ஆண்டு மார்ச் 9ஆந் திகதியன்று பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளருமாகிய க. மு. தர்மராசா அவர்களின் ஒத்துழைப்போடு நடத்திய திறப்பு விழா வைபவத்தில் பல பெரியோர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். காலஞ்சென்றவர்களான நியாயவாதி எஸ். ஆர். கனகநாயகம், நியாயதுரந்தரர் என். ரி. சிவஞானம் மற்றும் கல்லூரி அதிபர் பொ. கேதாரநாதன் ஆகியோருடைய உருவப்படங்கள் விழா ஆரம்பத்தில் திரைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் வரவேற்புரையையும், தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமையுரையையும் நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சட்டாலோசகர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், ஜனாதிபதி சட்டாலோசகர் க. கனக்-ஈஸ்வரன், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், க. மு. தர்மராசா, தமிழ்ச் சங்க நூலகச் செயலாளர் க. சண்முகலிங்கம், கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியல் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன், அருள்மொழியரசி திருமதி. வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். சட்டமுந் தமிழும் என்ற தலைப்பில் ஓய்வுநிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்களின் எழுத்துமூல உரை சட்டத்தரணி சோ. தேவராஜா அவர்களால் வாசிக்கப்பட்டது. கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது நூலகத்தில் முதன்முதலாக சட்டப்பிரிவை ஆரம்பித்த சமயம் சட்டக்கல்லூரி செல்லாது சட்டம் பயின்ற திரு. க. மு. தர்மராசா தனது நன்றிக்கடனாக சிரேஷ்ட குருவான உயர்திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்களின் உருவப்படத்தை அவரின் ஜூனியராக சட்டத்தொழிலாற்றி தற்சமயம் ஜனாதிபதி சட்டாலோசகராகவும் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவியுமாகிய செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட விழாவில் நன்றிக்கடன் என்ற தலைப்பில் அருள்மொழியரசி திருமதி. வசந்தா வைத்தியநாதன் ஆற்றிய உரையும் வெளியாகியுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட நூலகத் திறப்புவிழாவின் போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களின் ஒரு பகுதியும் அதன் விபரங்களும்







கோலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழ்ச்சி ஆரம்பத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர், உப செயலாளர், நூல்நிலைய செயலாளர், உபதனாதிகாரி ஆகியோர் சமூகத்தில் விளக்கேற்றுகிறார்கள்.




கொழும்புப் பல்கலைக்கழக பீடாதிபதி சோ. சந்திரசேகரன் அவர்கள் வரவேற்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத் தமிழ்ச்சங்க தலைவரும் ஏனைய நிர்வாகிகளும் ஜனாதிபதி சட்டத்தரணி
கே. கனக்-ஈஸ்வரன், யாழ் சட்டத்தரணி சங்கத் தலைவியும்
ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் ஆகியோரை வரவேற்கிறார்கள்.



கொழும்புத் தமிழ்ச்சங்க தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் புதிய உசாத் துணைப் பிரிவை நாடா
வெட்டி திறந்துவைக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் நிலையத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம் அமரர் அட்வகேற்
எஸ். ஆர். கனகநாயகம் அவர்களின் உருவப்படத்தினை திரைநீக்கம் செய்துவைக்கின்றார்



ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக் -ஈஸ்வரன் மூத்த சட்டத்தரணி என்.ரி. சிவஞானம் அவர்களின் உருவப்படத்தினை
திரைநீக்கம் செய்துவைக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு பல்கலைக்கழக கல்விபீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலய (வேலணை மத்திய கல்லூரி) முன்னாள் அதிபர் அமரர் பொ. கேதாரநாதன் அவர்களின் உருவப்படத்தினை திரைநீக்கம் செய்கின்றார்.




ஜனாதிபதி சட்டத்தரணி கனக்-ஈஸ்வரன் அவர்கள் தனது தந்தையார் அமரர் எஸ்.ஆர். கனகநாயகத்தின் உருவப்படத்திற்கு மாலை அணிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்கள் அமரர் என்.ரீ. சிவஞானத்தின் உருவப்படத்திற்கு மாலை அணிகின்றார்.




யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இரா. சிவசந்திரன் அவர்கள் அமரர் பொ. கேதாரநாதனின் உருவப்படத்திற்கு மாலை அணிகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் எஸ். ஆர். கனகநாயகத்தின் உருவப்படத்திற்குக் கீழ் திருவாளர். கனக்-ஈஸ்வரனும், பிள்ளைகளும், ஏனையோரும் காணப்படுகின்றார்கள்




அமரர் என். ரி. சிவஞானம் அவர்களின் உருவப்படத்தின் கீழ் திரு. கனக்-ஈஸ்வரன், திரு. அ. விநாயகமூர்த்தி, செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், திரு. க.மு. தர்மராசா ஏனையோருடன் காணப்படுகின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் பொ. கேதாரநாதனின் உருவப்படத்தின் கீழ் பேராசிரியர் சோ. சந்திரசேகரம், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், பேராசிரியர் சபா. ஜெயராசா மற்றும் முக்கிய பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.



அமரர் என். ரி. சிவஞானத்தின் உருவப்படத்தின் கீழ் சட்டத்தரணி சோ. தேவராஜா, சட்டத்தரணி ஆர். ஆர். தங்கராசா, சட்டத்தரணி அ. விநாயகமூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. கனக்-ஈஸ்வரன் நூல் நிலையத்தில் இருக்கும் சட்ட நூல்களை பார்வையிடுகின்றார்




பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் இரசாயன நூல்களை பார்வையிடுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிகழ்ச்சிகளுக்கு சமூகமளித்தவர்களில் ஒருசிலருள் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோருடன் முன்னாள் தமிழ்ச் சங்கத் தலைவர் செ. குணரத்தினம் உட்பட காணப்படுகின்றனர்



நிகழ்ச்சிக்கு சமூகம் அளித்த சபையோர்களின் ஒரு பகுதியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழ்ச்சிக்கு சமூகம் அளித்த சபையோர்களின் ஒரு பகுதியினர்




நிகழ்ச்சித் தொகுப்பு அறிவிப்பாளர் திரு. எழில்வேந்தன் கூட்ட ஆரம்பத்தை அறிவிக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள விளக்கேற்றல்



கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மங்கள விளக்கேற்றுகிறார்



ஜனாதிபதி சட்டாலோசகர் திரு. கனக்-ஈஸ்வரன் மங்கள விளக்கேற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சோ. சந்திரசேகரம் மங்கள விளக்கேற்றுகிறார்



ஜனாதிபதி சட்டாலோசகரான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், மங்கள விளக்கேற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலகச் செயலாளர் மங்கள விளக்கேற்றுகிறார்



விளக்கேற்றும் போது சமூகமளித்தவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




செயலாளர் திரு. ரகுபதி பாலஸ்ரீதரன் மங்கள விளக்கேற்றுகிறார்



திரு. க.மு தர்மராசா அவர்கள் மங்கள விளக்கேற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துணைச் செயலாளர் திரு ஆழ்வாப்பிள்ளை கந்தசுவாமி மங்கள விளக்கேற்றுகிறார்



பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் மங்கள விளக்கேற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரேஷ்ட சட்டத்தரணி திருவாளர் அ. விநாயகமூர்த்தி அவர்கள் மங்கள விளக்கேற்றுகிறார்




மங்கள விளக்கேற்றிய பின் முக்கிய பிரமுகர்கள் மேடையில் அமர்ந்துள்ளார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மேடையில் அமர்ந்திருப்பவர்கள்



நிகழ்ச்சிக்கு சமூகம் அளித்தவர்களின் ஒரு பகுதியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கூட்டத்திற்கு சமூகம் அளித்தவர்கள்



செல்வி பிரபாலினி கந்தசாமி தமிழ் வாழ்த்து பாடுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. ஆ. ரகுபதிபாலஸ்ரீதரன் பொதுச்செயலாளர் வரவேற்புரையாற்றுகின்றார்





மேடையில் உரையாற்றுவோர் காணப்படுகின்றார்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சட்ட நூலகப்பிரிவுக்கு பொருண்மிய ஆதரவு நல்கிய
திரு. க.மு தர்மராசா



கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் உரையாற்ற ஆரம்பிக்கப்பட்ட சமயம் திரு. க.மு. தர்மராசா மாலை போடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் உரையாற்றுகின்றார்




செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் சிறப்புரை ஆரம்பிக்கப்பட்ட பொழுது சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரன் மாலை போடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி சந்தா அபிமன்னசிங்கம் உரையாற்றுகின்றார்




திரு. கனக் - ஈஸ்வரன் உரையாற்ற ஆரம்பிக்க முன் திரு. எஸ். சிவலோகநாதன் அவர்கள்.
மாலை போடுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. கனக் -ஈஸ்வரன் உரையாற்றுகின்றார்.




பேராசிரியர் இரா சிவச்சந்திரனுக்கு திரு ஆகுகமூர்த்தி அவர்கள் மாலை அணிகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் உரையாற்றுகின்றார்




திரு. க.மு. தர்மராசா அவர்களுக்கு பொதுச் செயலாளர் - திரு. ஆ. ரகுபதி பாலஸ்ரீதரன் மாலை அணிகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. க.மு. தர்மராசா அவர்களுக்கு திரு. இலகுப்பிள்ளை அவர்கள் மாலை அணிகின்றார்.



திரு. க.மு தர்மராசா உரையாற்றுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி பேராசிரியர் சோ. சந்திரசேகரம் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து தங்கப்பதக்கமும் அன்பளிப்பு செய்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலகச் செயலாளர் திரு. க. சண்முகலிங்கம் உரையாற்றுகின்றார்



சட்டத்தரணி சோ. தேவராஜா "சட்டமுந் தமிழும்" என்ற தலைப்பில் மாண்புமிகு ஓய்வுநிலை உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் எழுத்துரையை வாசிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சோ. சந்திரசேகரம் உரையாற்றுகின்றார்



அருள்மொழியரசி, வித்துவாட்டி திருமதி வசந்தா வைத்தியநாதன் உரையாற்றுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி. நன்றியுரை வழங்குகின்றார்




தமிழ் வாழ்த்து திருமதி பூமணி நடராஜா பாடுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் ஐந்து

(1) ஏப்பிரல் 2008இல் "**ஞானம்**" 95 கலை இலக்கியச் சஞ்சிகையில் :-

சமகால கலை இலக்கிய நிகழ்வுகள் என்னும் தலையங்கத்தில் வெளியான தொடரில் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமிக்கு கௌரவ பாராட்டு கொழும்புத் தமிழ்ச் சங்க துணைச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியை பிரபல சட்ட உதவியாளர் திரு. க.மு.தர்மராசா கௌரவப்படுத்தினார். ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி எப்பொழுதும் சுறுசுறுப்பாக தேனீயைப் போல், எறும்பைப் போல் இயங்கி சங்க நடவடிக்கைகளுக்கு மெருகேற்றுகிறார். இவரது செயற்பாடுகள் என்னை மிகவும் கவர்ந்தன. எனவே சங்கத் தலைவர் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் ஒப்புதலைப் பெற்று இவரை வாழ்த்துகிறேன் என்று கூறி பொன்னாடை மாலை ஆகியவற்றை கொழும்பு கல்விப்பீடாதிபதி சோ.சந்திரசேகரத்திடம் கொடுத்து அணிவிக்கச் செய்து கௌரவித்ததுடன் அன்பளிப்பாக தங்கப்பவுண் ஒன்றையும் திரு.க.மு.தர்மராசா வழங்கினார். சபையோரின் கரவொலி அடங்க நீண்ட நேரம் எடுத்தது. அவர் தொடர்ந்து பேசிய போது சிறப்பாகப் போதிக்கக்கூடிய சட்டமேதைகள் இல்லாதபடியாலும் யாழில் இருந்தவர்கள் இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்துவிட்டபடியாலும் இரண்டாம் வருட சட்டத்துறை மாணவர்களுக்கு விரிவுரையாற்ற கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் இரண்டாம் மாடியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றார்.

நூலகச் செயலாளர் திரு.சண்முகலிங்கம் பேசும்போது முன்னர் பல்கலைக்கழகத்தை நம்பி உயர்கல்வி கற்றவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்கு வெளியே உயர்கல்வியும், தொழில் நுட்பக் கல்வியும் உலகத்தரம் கொண்ட பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழகக் கல்வியில் 75வீதமான கல்வி வெளியே கிடைக்கிறது. சட்டத்துறையைத் தேர்ந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கு எங்கள் நூலகம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்றார்.

அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன் அவர்கள், "நன்றிக் கடன்" என்னும் தலைப்பில் பேசும்போது வள்ளல் க.மு.தர்மராசாவின் தூய தொண்டையும் நன்றி உணர்வையும் பாராட்டிப் பேசினார்.

சிறப்புரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழகத் தலைவர் சோ.சந்திரசேகரம் பேசுகையில் வைத்தியத்துறையில் உள்ளோர் சட்டத்துறையில் உள்ளோர், ஆசிரியர் என்ற முத்தரப்பினரும் சமூகத்தோடு நெருங்கிய உறவும் தொடர்பும் கொண்டவர்கள். டாக்டர்கள் உயிரைக் காப்பவர்கள். சட்டத்தரணிகள் நீதியைக் காப்பவர்கள். ஆசிரியர்கள் அறிவை வளர்ப்பவர்கள். செய்தி இதழ்கள் வானொலி, தொலைக்காட்சிகளில் பயில்வதைவிட நூலகத்தில் அறிவு பெறுவது எல்லோருக்கும் வாய்ப்பானது. நூல்களை எடுத்துச் செல்லலாம். விரும்பிய நேரம் படிக்கலாம். ஆனால் கம்பியூட்டரை எங்கும் எடுத்துச் செல்ல முடியாது. மின்சாரம் தடைப்பட்டால் படிக்கவும் முடியாது. தமிழ் வளர்க்க வந்த தமிழ்ச்சங்கம் விஞ்ஞானம், சட்டத்துறை, கணனித்துறையை விருத்தி செய்து வருவது தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டாகும். தமிழ்ச் சமூகம் இன்னும் ஒத்துழைக்க வேண்டுகிறேன் என்கிறார்.

விழாவில் மக்கள் கூட்டம் அலைஅலையாகத் திரண்டுவந்து சிறப்பித்தமை பெரும் கௌரவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) தமிழ்ச் சங்க நூலகத்தில் சட்டப்பிரிவு திறப்புவிழா**

கொழும்பு தமிழ்ச்சங்க நூலகத்தில் புதிய சட்டப்பிரிவு திறப்பு விழா 09.03.2008ஆம் ஆண்டு மாலை மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது. சட்டக் கல்லூரிக்குச் செல்லாமல் சட்டமேதை அமரர் எஸ்.ஆர்.கனகநாயகம், நா.த.சிவஞானம் இவர்களிடம் பயிற்சி பெற்றவருமான பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளருமான க.மு.தர்மராசா அவர்களின் நன்றிக்கடன் செலுத்தும் வைபவமாகவும் இவ்விழா அமைந்தது. திரு.தர்மராசா அவர்கள் சுமார் மூன்று லட்சம் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தார். இவையாவும் சட்ட நூல்களாகும். வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபராய் இருந்து அளப்பரிய சேவை செய்து பலரை முன்னிலைக்கு கொண்டு வந்த அமரர் பொன்னையா கேதாரநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக விஞ்ஞான பௌதிக நூல்களை அன்பளித்து விஞ்ஞானப் பிரிவு நூலகத்தில் அமைய உதவி புரிந்தனர்.

சட்டமேதைகள் எஸ்.ஆர்.கனகநாயகம், நா.த.சிவஞானம், முன்னாள் கல்லூரி அதிபர் பொ.கேதாரநாதன் ஆகியோரின் உருவப்படங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

மேற்படி விழாவுக்கு சங்கத் தலைவர் கலாநிதி சபா.ஜெயராசா அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தனது தலைமையுரையில் பின்வருமாறு கூறினார். கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் தமிழ்ச் சமுதாயம் முழுமைக்கும் தனது சேவையை நல்கி வருகின்றது. பிரத்தியேகமாக திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டம் கற்கும் மாணவர்களுக்கு சட்டநூல்களையும் சட்டப்பிரிவையும் தொடங்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கையில் திரு.தர்மராசா அவர்கள் நூல்களையும் பொருள் உதவிகளையும் கொடுக்க முன்வந்தார். நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்றோம், அன்னாருடைய உதவியால் சட்டப்பிரிவு இன்று தொடங்கப்பட்டுள்ளது. சட்ட மாணவர்களும் பொதுமக்களும் இதனால் பெரிதும் பயன் பெறுவர் என்றார். சட்டமேதைகள் எஸ்.ஆர்.கனகநாயகம் பற்றிய சட்டமேதை கனகநாயகத்தின் வரலாறு கல்வி சட்டத்துறை நிபுணத்துவம் என்பன பற்றி விளக்கமாகப் பேசினார். நா.த.சிவஞானம் அவர்களது நினைவுரையை சட்டத்தரணி கே.கனக்-ஈஸ்வரன் அவர்கள் வழங்கினார். அமரர் கேதாரநாதன் நினைவுரையை யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் வழங்கினார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை அண்மையில் ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

ஒரு விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு அச்சிடப்பட வேண்டும் என்பதற்கான முக்கிய காரணங்களை எனக்கு உணர்த்தியவர் தமிழருவி த. சிவகுமாரன் அவர்களே. நிகழ்ச்சித் தொகுப்பை அச்சிட்டுப் பார்க்கும் போதுதான் அதன் பயனும் அருமையும் நிகழ்ச்சி பற்றிய நினைவும் அதன் அவசியமும் விளங்குகிறது. விழா ஒன்று முடிந்ததும் அதன் நிகழ்ச்சிகள் பற்றிய நினைவுகளும் அதில் ஆற்றப்பட்ட உரைகளும் இடம்பெற்ற ஏனைய நிகழ்ச்சிகளும் அன்றுடன் எமது நினைவிலிருந்து அகன்று விடுகின்றன.

இந்த நிலையை நிவர்த்திப்பதற்காகவே நிகழ்ச்சித் தொகுப்பு அச்சிடப்படுகின்றது. எனது துணைவியாரின் முதலாமாண்டு நினைவு விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பை அச்சிட்டு வெளிக்கொணருமாறு முன்பொரு முறை என்னிடம் தமிழருவி சிவகுமாரன் அவர்கள் தெரிவித்த மேற்படி கருத்தை பின்பற்றியே இவ்விழா நிகழ்ச்சித் தொகுப்பை வெளியிட முடிவு செய்தேன். அவரது அறிவுரைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்ச்சித் தொகுப்பை தயாரிப்பதற்கு உதவிய சண்முகம் இராமலிங்கம் அவர்களுக்கும், செல்வி நீதா சதாசிவம் அவர்களுக்கும் எனது நன்றிகள். அச்சேற்றி புத்தக வடிவில் தந்துதவிய யுனைட்டெட் பிறின்ட் அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) **2008ஆம் ஆண்டு மே மாதம் 23ஆந் திகதி வீரகேசரி பத்திரிகையில் வெளியான படங்கள்**





கொழும்புத் தமிழ்ச் சங்க சட்ட நூலகமும் உயர்கல்வி மாணவர்களுக்கான உசாத்துணை பிரிவு அமைப்பதற்கும் அதிகளவு நிதியை பெற்றுக்கொடுத்த தனவந்தர் க.மு.தர்மராசாவிற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் அண்மையில் பாராட்டு வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. வைபவத்தில் தமிழ்ச்சங்க தலைவர் சபா ஜெயராசா பாராட்டுப்பத்திரம் ஒன்றை தனவந்தர் க.மு.தர்மராசாவிற்கு வழங்குவதையும் நூலக செயலாளர் கே.சண்முகலிங்கம் பொதுச்செயலாளர் இரகுபதி பாலஸ்ரீதரன், பிரதி பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் அருகில் நிற்பதையும் கலந்து கொண்ட அங்கத்தவர்களில் சிலரையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு க.மு.தர்மராசா அவர்களின் வள்ளல் மாண்மை வியந்து கொழும்புத் தமிழ்ச் சங்கம் வழங்கிய பாராட்டுப்பத்திரம்

எமது சங்கத்தின் உசாத்துணைப் பிரிவை 2008.03.09ஆந் திகதியன்று ஆரம்பித்தோம். இதனை ஆரம்பிப்பதற்கு உயர்திரு.க.மு.தர்மராசா பல வழிகளிலும் பேருதவிகளை வழங்கினார்கள். அவற்றை நன்றியுடன் பதிவு செய்கின்றோம்.

சட்டப்பிரிவு நூலகத்திற்கு தமது நன்கொடையாக ரூபா 200,000 பெறுமதியுடைய நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்கள். இந்நூல்கள் சட்டமேதையும் சமூக சேவையாளருமாகிய எஸ்.ஆர்.கனகநாயகம், சட்டத்தரணி என்.ரி.சிவஞானம் ஆகிய இருபெரியார்களின் நினைவாக அன்பளிப்புச் செய்யப்பட்டன.

விஞ்ஞானம், கலை, இலக்கியம் ஆகிய பிரிவுகளிற்கான நூல்களைக் கொள்வனவு செய்வதற்குக் காலஞ்சென்ற பொ.கேதாரநாதன் குடும்பத்தினரின் நிதியுதவியைப் பெற்றுத் தருவதற்கு திரு.க.மு.தர்மராசா அவர்கள் உதவினார்கள். முன்னாள் அதிபர் பொ.கேதாரநாதன் நினைவாக ரூபா 200,000 பெறுமதியான நூல்களை அன்னாரின் குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கினர்.

திரு.எஸ்.ஆர்.கனகநாயகம், திரு.என்.ரி.சிவஞானம், திரு.பொ.கேதாரநாதன் ஆகிய மூன்று பெரியார்களின் உருவப்படங்கள் உசாத்துணைப்பிரிவில் 2008.03.09ஆம் தினத்தன்று திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன. அன்று காலையில் சமயக்கிரிகைகளும் மாலையில் உசாத்துணைப் பிரிவின் தொடக்க விழாவும் மிகவும் சிறப்புற நடைபெற்றன. விழாவிற்கான செலவுகள் அனைத்தையும் திரு.க.மு.தர்மராசா அவர்களே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். விழாவினை முன்னிட்டு அச்சிடப்பட்ட பிரசுரங்கள் யாவும் அவர் செலவிலேயே அச்சிடப்பட்டன.

சட்டப்பிரிவுக்கான கிடைத்தற்கரிய நூல்கள், புதுச் சட்ட அறிக்கைகளின் தொகுதிகள், பருவ இதழ்களின் தொகுப்புக்கள் ஆகியவற்றையும் கொள்வனவு செய்யும் பணிகள் 2008.03.09இன் பின்னர் தொடர்ந்தவாறு உள்ளன. ரூபா 50,000 பெறுமதியான நூல்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இப்பணிக்கான முழுச் செலவையும் திரு.க.மு.தர்மராசா அவர்களே பொறுப்பேற்றுச் செய்து வருகின்றார்.

தமிழ்ச் சங்க நூலகத்தின் தேவைகளை அறிந்து அதன் வளர்ச்சிக்கான பணிக்கு உதவிய திரு.க.மு.தர்மராசா அவர்களின் சேவையினையும் வள்ளன்மையினையும் கௌரவித்து நன்றியுடன் அன்னாருக்கு இப்பாராட்டுப் பத்திரத்தை வழங்குகின்றோம்.


**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
**இல.7, 57ஆவது ஒழுங்கை, கொழும்பு 6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டப்பிரிவில் உள்ள ஒரு பகுதி நூல்கள்



திரு. கனக் -ஈஸ்வரன் நூல் நிலையத்தில் இருக்கும் சட்ட நூல்களை பார்வையிடுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org